Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 கதிர் : 227 | ஞாயிற்றுக்கிழமை | ஆனி 27 நாள் 11 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16+16 விலை : ரூ.40 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111





## விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11
மோட்டார் சைக்கிள் விபத்தில் அல்வாயைச் சேர்ந்த 29 வயதுடைய இளை 14 ➤

## கொவிட் திரைமறைவில் மக்களை வதைக்காதே

அரசுக்கு எதிராக யாழில் நேற்று கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11
பல கோரிக்கைகளை முன்வைத்து அரசுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது. புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற் 14 ➤

காடைத்தனமான அடக்குமுறையால்

# பெரும் பின்விளைவுகளை கோத்தா அரசு சந்திக்கும்!

சம்பந்தன் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 11
வன்முறையில் இறங்காமல் ஜனநாயக வழியில் ஆர்ப்பாட்டம் நடத்தும் மக்களைப் பொலிஸாரைக் கொண்டு காடைத்தனமான முறையில் அடக்குவது அரசின் சர்வாதிகாரப்போக்கை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. பெரும் பின்விளைவுகளை இந்த அரசு விரைவில் சந்தித்தே தீரும். 14 ➤

## அரசியல்கைதிகள் சிலர் ஜனவரிக்குள் விடுதலை!

ஆளும்கட்சி எம்.பி சுரேன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 11
'எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் மேலும் சில அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள். ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசு உறுதியாக இருக்கின்றது. இவ்வாறு ஆளும் கட்சி நாடாளுமன்ற 14 ➤

மேலும் 14 நாள்களுக்கு

## மாகாணங்களிடையே பயணத்தடை அமுல்

- இறுதிச் சடங்கில் 50 பேர்
- திருமண விழாவில் 150 பேர்
- திரையரங்குகள் திறப்பு

கொழும்பு, ஜூலை 11
மாகாணங்களுக்கு இடையில் பயணிப்பதற்கு விதிக்கப்பட்ட பயணத்தடை மேலும் 14 நாள்களுக்கு நீடிக்கப் 14 ➤

அசெலா சம்பத்தின் கருத்து தொடர்பில்

## 'வொய்ஸ் ரியூப்' இணைய ஆசிரியர் புலனாய்வுத் துறையால் விசாரணை!

கொழும்பு, ஜூலை 11
இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் அசெலா சம்பத் வெளிப்படுத்திய கருத்துத் தொடர்பாக, 'வொய்ஸ் ரியூப்' இணையத்தள ஆசிரியரிடம் புலனாய்வுத் 14 ➤

பருத்தித்துறையில்

## அன்டிஜென் சோதனையில் 23 பேருக்குக் கொரோனா

ஒரு பகுதி தற்காலிகமாக முடக்கம்!

வடமராட்சி, ஜூலை 11
பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத்தெருப் பகுதியில் நேற்று 60 பேருக்கு அன்டிஜென் சோதனை நடத்திய 14 ➤

வீட்டுத்திட்ட மேன்முறையீடு

## 'கால நீடிப்பு வழங்கப்படுமா? மாவட்டச் செயலர் மழுப்பல்

யாழ்ப்பாணம், ஜூலை 11
வீட்டுத்திட்டப் பயனாளிகளின் பட்டியல் காட்சிப்படுத்த தாமதம் ஏற்பட் 14 ➤

அதிக நன்மைகளை கொண்ட
Dialog Fun BLASTER
டேட்டா கட்டணங்கள் இன்றி
Instagram Facebook WhatsApp

ரூ. 98/-* மட்டுமே. *மேலதிக வரிகள் இல்லை
14 நாட்களுக்கு 5GB டேட்டா (SD தரத்தில்)
செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்
Dialog
எதிர்காலம் இன்றே.
நிபந்தனைகளுக்கு உட்பட்டது
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தளம் இடிந்து வீழ்ந்ததில் சாரதி சாவு

கொழும்பு, ஜூலை 11
கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் சீமெந்து கட்டுமான தளத்தின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்ததில், அருகில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் வாகனத்தின் சாரதி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்றுமுன்தினம் நள்ளிரவு இந்த சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். இறந்தவர் கடுவெலவில் வசிக்கும் 52 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# நாடு திறக்கப்பட்ட பின்னர் நாடகங்களை நடத்துங்கள்

### அதுவரை பொறுமை பேணுங்கள் அமைச்சர் நாமல் கோரிக்கை



**கொழும்பு, ஜூலை 11**
**நாடு திறக்கப்பட்ட பின்னர் உங்கள் நாடகங்களை நடத்துங்கள். அதுவரையில் பொறுமையாக இருங்கள் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ச கோரிக்கை விடுத்தார். அரசுக்கு எதிரான போராட்டங்கள் நாளுக்கு நாள் வலுத்துள்ள நிலையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் நாமல்.**

அம்பாந்தோட்டையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
கொரோனா மூன்றாம் அலை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு நாடு திறக்கப்படும் நிலையில் உள்ளது. இப்படியானதொரு தருணத்தில் நான்காவது அலை ஏற்பட்டுவிடாமல் இருக்க நாம் அனைவரும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும்.
சுகாதாரத்துறையால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை மீறுபவர்களுக்குச் சட்டத்தைப் பயன்படுத்துவது குறித்துப் பேசுவதற்கு அருகதை இல்லை.
இலங்கை இந்திய அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் ஆட்டங்களில் சிலவற்றுக்கு ரசிகர்களை அனுமதிப்பதா இல்லையா என்பது குறித்து ஆலோசித்து வருகின்றோம். பெருமளவான மக்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றினால் விளையாட்டுக்களை பார்வையிட மக்களை அனுமதிக்க முடியும் - என்றார். (ம)

## அரசிலிருந்து விலகுகிறார் ஓர் எம்.பி.

கொழும்பு, ஜூலை 11
ஆளும் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் விரைவில் அரசிலிருந்து விலகவுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.
அடுத்த ஓரிரு வாரங்களில் அவர் அரச தரப்பிலிருந்து விலகி, நாடாளுமன்றத்தில் எதிரணி வரிசையில் உட்கார திட்டமிட்டுள்ளார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.
அவர் நாடாளுமன்றத்தில் சுயாதீன உறுப்பினராக செயற்பட திட்டமிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் குழு மோதல்கள் உச்சமடைந்துள்ளமையின் எதிரொலியாகவே இந்த விலகல் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-இ)

### கொள்ளையிடும் நோக்கில்

## வீடு புகுந்த நபர் அடித்துக்கொலை

கொழும்பு, ஜூலை 11
வீடொன்றுக்குள் இரகசியமாக நுழைந்த நபரொருவரை வீட்டார் தாக்கியதில், குறித்த நபர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த சம்பவம் வத்தளை எவரிவத்த பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. கொள்ளையிடும் நோக்கில் 32 வயது மதிக்கத்தக்க நபரொருவர் வீடொன்றுக்குள் நுழைந்துள்ளார். வீட்டுக்குள் யாரோ நுழைந்ததை உணர்ந்த வீட்டார் சந்தேகநபரை பிடித்து தாக்கியுள்ளனர். இதன்போதே அவர் உயிரிழந்துள்ளார். (த-இ)

## தமிழ்த்தேசிய நீக்கத்தை தொடர்கிறார் சுமந்திரன்

### சுகாஸ் சாட்டை

யாழ்ப்பாணம், ஜூலை 11
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான சுமந்திரன், தமிழ்த் தேசிய நீக்கத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது என்று தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரான சட்டத்தரணி சுகாஸ்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
அரசின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டு தமிழ்த் தேசிய நீக்கத்தை எங்களுடைய தமிழ்த் தலைமைகள் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மேற்கொண்டு வருகின்றனர்.
சுமந்திரன் அண்மையில் நாடாளுமன்றத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் விதிகள் சம்பந்தமாக உரையாற்றியிருந்தார்.
அந்த உரையில், கடந்த ஆட்சிக்காலத்தில் பயங்கரவாத எதிர்ப்புத் தடைச் சட்டம் (சி.ரி.ஏ) கொண்டுவரப்பட இருந்தது என்றும் அதில் இருந்த கடுமையான விதிகள் தன்னால் சுட்டிக்காட்டப்பட்டு திருத்தப்பட்டது என்றும், அந்தச் சட்டமூலம் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை விட 100 மடங்கு சிறந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.
அதாவது பயங்கரவாத தடைச்சட்டத்தை ஆதரித்த வகையில் அவரின் கருத்துக்கள் அமைந்துள்ளன.
இது இவர்களுடைய படுமோசமான நிகழ்ச்சி நிரலை வெளிப்படுத்தி இருக்கின்றது.
அதாவது தமிழர்களும் இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இணைந்து உருவாக்குகின்றனர் என்ற ஒரு மோசமான செய்தியை - பின்னணியை சுமந்திரனின் கருத்து வெளிப்படுத்தி நிற்கின்றது.
தமிழர்களைப் பொறுத்தவரை இந்தப் பயங்கரவாத தடைச்சட்டமே வேண்டாம் என்பதே நிலைப்பாடு.
இதே சுமந்திரனும் கடந்த அரசாங்கமும் இணைந்துதான் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 'ஏக்கிய ராஜ்ஜிய' என்று கூறப்பட்ட ஒற்றையாட்சி வரைவை அறிமுகப்படுத்த முற்பட்டவர்கள் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும் - என்றார். (ம-319,26)

## வீட்டு விபத்துக்கள் 75 வீதமாக உயர்வு

### வீதி விபத்து 9 வீதத்தால் குறைவு சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 11
தற்போதைய கொவிட் 19 தொற்று நிலைமையின்போது வீட்டுடன் தொடர்புடைய விபத்துக்கள் முன்னைய காலங்களுடன் ஒப்பிடும்போது 50 வீதத்திலிருந்து 75 வீதம்வரை அதிகரித்துள்ளதுடன் வீதி விபத்துக்கள் 9 வீதத்தால் குறைவடைந்துள்ளன என்று சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவின் (சமூக மருத்துவம்) விசேட மருத்துவ நிபுணர் சமித சிறிதுங்க தெரிவித்தார். தேசிய விபத்து தடுப்பு வாரம் மற்றும் விபத்துக்களை எவ்வாறு தடுப்பது என்பது குறித்து பொதுமக்களுக்கு விழிப்பூட்டுவதற்காக அரச தகவல் திணைக்களத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
பல்வேறு விபத்துக்களில் சிக்கி வருடாந்தம் 12 லட்சம் பேர் வரை அரச மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகின்றனர். 2025 ஆம் ஆண்டாகும்போது இந்த தொகை 15 லட்சத்தை எட்டும் என எதிர்பார்க்கின்றோம். வீதி விபத்துக்கள், வீழ்தல் மற்றும் சிராய்ப்பு, உடலில் விஷம் கலத்தல், விலங்குக் கடி, மின்சார தாக்குதல், தீக்காயங்கள், நீரில் மூழ்குதல் போன்ற பல விபத்துக்கள் காரணமாக வருடந்தோறும் 12 ஆயிரம் பேர் வரை உயிரிழக்கின்றனர் என்றார்.
இதேவேளை, இலங்கை சனத்தொகையில் 12.4 வீதமான முதியோர்கள் (வயது 60க்கு மேல்) விபத்துக்களில் சிக்குவதை தடுக்க வேண்டியதன் அவசியத்தை கலந்துரையாடலில் இணைந்துகொண்ட சுகாதார அமைச்சின் இளம், முதியோர் மற்றும் ஊனமுற்றோர் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் ஷிரோமி மாதுவகே சுட்டிக் காட்டினார்.
விபத்துக்களால் முதியோர்கள் நீண்டகால உபாதைகளுக்கு உள்ளாதல் மற்றும் அதன் மூலம் ஏற்படுகின்ற நோய் நிலைமைகள் காரணமாக நீண்ட நாள்கள் மருத்துவமனையில் வைத்து சிகிச்சையளிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. அரசு ஒருவருக்கு நாளொன்றுக்கு சிகிச்சைக்காக வேண்டி பல ரூபாவை செலவிடுகின்றது என்றும் தெரிவித்தார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## மக்களை பணயம் வைக்காதீர்

நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த சுகாதாரக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. புதிய சுகாதார வழிகாட்டுதல்களை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வெளியிட்டிருக்கிறார். இது மகிழ்ச்சியான செய்திதான். ஆனால் சிந்திக்க வேண்டிய விடயங்களும் நிறைய இருக்கின்றன.

அண்மைய நாள்களில் நாட்டில் நாளாந்தம் இனங்காணப்படும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி கண்டிருக்கின்றது. அதனால் நாட்டில் கொரோனா தொற்றுப் பரவல் குறைந்து வருகின்றது என்று கருதிக்கொள்ள முடியாதுள்ளது. அதற்குக் காரணம் மருத்துவ நிபுணர்களும், சுகாதாரத் துறை சார்ந்தவர்களும் கூறும் விடயங்கள், ஆறுதலளிக்கும் வகையில் இல்லை.


தினமும் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் எண்ணிக்கை, மாதிரிகள் எடுக்கப்படும் இடங்கள் என்பவற்றைப் பொறுத்து இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்படலாம். இப்போது நாட்டில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் மட்டுப்படுத்தலே தொற்றாளர்கள் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படக் காரணம் என்றுதுறைசார்ந்த நிபுணர்கள்சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

கடந்த காலங்களில் முன்னைய கொரோனா அலைகளை இலங்கை வலிந்து வாங்கிக் கொண்டது என்றே கூறலாம். சரியான நேரத்தில் விமான நிலையங்களை மூடாதமை முதல் கடந்த புத்தாண்டு காலத்தில் கட்டுப்பாடுகளை விதிக்கத் தவறியமை என, சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுக்கத் தவறிமையால் நாடு எதிர்கொண்ட இன்னல்கள் பல.

நாட்டின் பொருளாதாரத்தை கருத்தில் கொண்டே அரசு செயற்படுகின்றது என்றும், அதனாலேயே சில முடிவுகள் தாமதித்து எடுக்கப்பட்டன என்றும் அரசு கூறினாலும், சரியான தருணத்தில் எடுக்கப்படாத முடிவுகளாலேயே அதிக இழப்புக்களை நாடு எதிர்கொண்டிருக்கின்றது. இப்போதும், துறைசார்ந்தவர்களின் கருத்துக்களுக்கு மாறாகவே அரசு அவசர அவசரமாக நாட்டைத் திறக்க ஆரம்பித்திருக்கின்றது.

இந்தியாவைப் புரட்டிப் போட்ட டெல்டா கொவிட் வைரஸ் திரிபு இலங்கையில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த வைரஸ் திரிபு மெல்ல மெல்ல நாட்டின் பல இடங்களில் தென்பட ஆரம்பித்திருக்கின்றது. இன்னும் இரு மாதங்களில் டெல்டா வைரஸ் திரிபின் பாதிப்புக்கள் ஆரம்பிக்கும் என்று நிபுணர்கள் எச்சரித்திருக்கின்றனர். ஆக, நாடு இப்போது திறந்துவிடப்படுவது எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிப்பதுதான் கொவிட் தொற்றுக்கு ஒரே வழி என்றும், தடுப்பூசி ஏற்றிக் கொண்டால் வைரஸ் தொற்றின் ஆபத்துக் குறைந்துவிடும் என்றும் கூறி அரசு தப்பித்துவிட முடியாது. முடிவுகளை எடுக்கும்போது நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் கருத்துக்களை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். பிழையான முடிவுகள் பெரும் இடர்களைக் கொண்டுவந்துவிடும். பொருளாதார நெருக்கடிகளுக்காகவும், அரசியல் காரணங்களுக்காகவும் மக்களின் உயிரைப் பணயம் வைக்க முடியாது. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.




# மஹிந்த– ரணில் சந்திப்பில் அரசியல் பேசப்படவில்லை

### கூறுகின்றது ஐ.தே.க.

**கொழும்பு, ஜூலை 11**

**பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவும் ஐ.தே.க. தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்கவும் ஒன்றாக உணவருந்தும் ஒளிப்படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், அது குறித்து ஐ.தே.க. விளக்கமளித்துள்ளது.**

கடந்த வியாழக்கிழமை இரவு நடைபெற்ற அந்த சந்திப்பு, இரகசியமான ஓர் அரசியல் விவாதமல்ல என ஐ.தே.க. தெளிவுபடுத்தியுள்ளது. மஹிந்த ராஜபக்ச மற்றும் ரணில் விக்கிரமசிங்க இருவரும் ரணிலின் அயல் வீட்டில் நடந்த பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டனர். குறிப்பாக அவர்கள் அரசியல் பற்றி அதிலும் அமைச்சரவை மறுசீரமைப்பு தொடர்பில் விவாதிக்கவில்லை. குறிப்பாக பிரதமரின் கீழ்வரும் நிறுவனங்களை மாற்றுவது தொடர்பில் விவாதிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-இ)

# பாடசாலைகளை அடுத்தமாதம் மீளத் திறப்பதற்கு தீர்மானம்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 11

சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கமைய அடுத்தமாதம் பாடசாலைகளை மீளத்திறக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை, கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சை ஆகிய பரீட்சைகள் திட்டமிட்ட வகையில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடத்தப்படும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொவிட்19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக பாடசாலைகள் தொடர்ச்சியாக மூடப்பட்டுள்ளதால் மாணவர்களின் கல்வித்துறைக்கு பெரும் சவால் ஏற்பட்டுள்ளது. தொலைநோக்கு கல்வி முறைமை ஊடாக கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும் அவை முழுமையற்றதாக காணப்படுகின்றன. இணையவழி மூலமான கல்வி முறைமையை பாடசாலை கல்வி முறைமையுடன் ஒப்பிட முடியாது. கல்வித்துறைக்கு ஏற்பட்டுள்ள சவால் நிலையை குறைத்துக் கொள்வதற்காகவே இணையவழி முறைமையிலான கற்றல் இடம்பெறுகிறது. அரச மற்றும் தனியார் தொலைக்காட்சி சேவை ஊடாக கல்விசார் நிகழ்ச்சிகள் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் ஒளிபரப்பாகின்றன. சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கமைய எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் பாடசாலைகளை மீளத் திறக்க எதிர்பார்த்துள்ளோம்.

பிரதேச தொடர்பு குழுவினர் பாடசாலைகளை மீள திறப்பது குறித்து முறையான அறிக்கையை கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிப்பார்கள். இதன் முதற்கட்டமாக நாடு தழுவிய ரீதியில் உள்ள 100க்கும் குறைவான மாணவர்கள் கல்விபயிலும் 2 ஆயிரத்து 962 பாடசாலைகளை திறக்க எதிர்பார்த்துள்ளோம். பரீட்சைகளை தொடர்ந்து பிற்போட முடியாது. பரீட்சார்த்திகளின் நலனை கருத்திற்கொண்டு இரண்டு மாதங்களுக்குள் மேலதிகமான கற்றல் நடவடிக்கைகள் அனைத்து பாடசாலைகளிலும் ஆரம்பிக்கப்படும்- என்றார். (து-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8ஆம் ஆண்டு நினைவலைகள்



அவதாரம் 02.01.1937

மறைவு 09.07.2013

திருமதி

## நல்லம்மா பொன்னம்பலம்

(ஓய்வுநிலை ஆசிரியை)

திதி: ஆனி மாத பூர்வபக்க துதியை (11.07.2021)

ஒருயிரும் ஈருடலுமாய் வாழ்ந்துவந்தோம்
நீர் எனை விட்டுப்பிரிந்து தனிமரமாக்கிவிட்டீர்
உம்மிடம் வந்தோரை வாழவைத்த தெய்வமானீர்
எம்முடன் வாழ்ந்த உமது ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்

டச்சு வீதி,
மீசாலை.

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மண்ணில் 16 . 12 . 1997

விண்ணில் 04 . 07 . 2021



செல்வன்

## அஸ்வின் சந்திரராஜ்

(வீமன்காமம் - தெல்லிப்பளை)

கனடா. ரொரண்டோ. ஸ்காபரோவை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வன் அஸ்வின் சந்திரராஜ் கடந்த 04.07.2021 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் (தெல்லிப்பளை வீமன்காமத்தை சேர்ந்த) காலஞ்சென்றவர்களான பீற்றர் - செல்லாச்சி. துரைரத்தினம். சாவித்திரிதேவி தம்பதியரின் அன்புப் பேரனும். சந்திரராஜ் - கதாநிதி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும். வைஷகி. டெனிசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும். நஜிந்தனின் அன்பு மைத்துனரும். அர்வின் அவர்களின் ஆசை மாமாவும். தேவநேசன் மேரி. தேவராஜன் கங்காநிதி. தேவதாசன் காலஞ்சென்ற ஞானமணி மற்றும் தேவசுந்தர் நவீனி. அருள்ராஜ் சசீலாதேவி. காலஞ்சென்ற தேவசுரேந்திரன் மற்றும் கலாநிதி கதிர்காமநாதன். கருணாநிதி இராஜரட்ணம். கற்பகநிதி இராஜகோபால். கஜநிதி சத்தியமூர்த்தி. காஞ்சனாநிதி கிருபாகரன் ஆகியோரின் பாசமிகு பெறாமகனும். தயாவதி அந்தோனிப்பிள்ளை. சுகந்தி சுகுணசந்திரன். ராகவன் ஸ்ரீலஷ்மி ஆகியோரின் பாசமிகு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.07.2021 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No.1 A, சோமசுந்தரம் அவெனியூ
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பீ.தேவதாசன் (பாபு) 077 876 6503
சந்திரன் - 647 287 4460
கதா - 416 332 0510

# 41ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

கடந்த 01.06.2021 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

## அமரர் இராசக்கோன் குணராசா

(ஓய்வூதியர், அலுவலக உத்தியோகத்தர் - Gr III)
வடமாகாண காணிப்பதிவகம்,
விவாக பிறப்பு இறப்பு காரியாலாயம், கச்சேரி, யாழ்ப்பாணம்)



அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நேற்றுமுன்தினம் (09.07.2021) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் வில்லூன்றி புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (11.07.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அரவது இல்லத்திலும் நடைபெறவுள்ளது.

மேலும் எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வருகைதந்தும். தொலைபேசி வழியாகவும். சமூகவலைத்தளங்களினூடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் தெரிவித்தவர்களுக்கும் உணவு வழங்கியவர்களுக்கும் மற்றும் எம் பெரும்துயர் வேளையில் பல்வேறு வழிகளிலும் பேருதவிபுரிந்த அனைத்து உற்றார். உறவினர்கள். நண்பர்கள் மற்றும் அன்பான ஊர்மக்கள் அனைவருக்கும் எமது சிரம் தாழ்த்திய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

குறிப்பு: தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக உங்கள் அனைவரையும் அழைக்கமுடியாமைக்கு மனம் வருத்துகின்றோம்.

07, காதி அபூபக்கர் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

மண்ணில் 24.01.1948

விண்ணில் 01.06.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டாவளையில் நூதனமுறையில் தொடர்கின்றது மணல் கொள்ளை

## பிரதேச மக்கள் கவலை

**கிளிநொச்சி, ஜூலை 11**

**கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கண்டாவளை வெளிகண்டல் பகுதியில் கைவிடப்பட்ட காணியில் சட்டவிரோத நூதன முறையில் பெரும் மணல் கொள்ளை இடம்பெறுகின்றது என்று அப்பகுதி மக்கள் குற்றச்சாட்டினர்.**



கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பழைய பிரதேச செயலகத்தின் பின்பகுதியான வெளிகண்டல் பகுதியில் வசித்து வந்த வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள், தமது காணிகளைக் கைவிட்டுள்ளனர். இந்த நிலையிலேயே அங்கு சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெறுகின்றது. இதனால் அங்கு பெரும் குண்டு, குழிகள் காணப்படுகின்றன. இது தொடர்பாக கடந்த வருடம் மாவட்டச் செயலருக்கும், பிரதேச செயலருக்கும் தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த அவர்கள் பல அடி ஆழத்தில் தோண்டப்பட்டு காணப்பட்ட குழிகளை உடனடியாக சம்பந்தப்பட்டவர்களைக் கொண்டு மூடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சில மாதங்கள் கழிந்து மீண்டும் அப் பிரதேசங்களில் மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. இதனால் நாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். அண்மையில் முதியவர் ஒருவர் அவசர தேவைகருதி துரித நோயாளர் காவு வண்டியை அழைத்தபோது, நோயாளர் காவு வண்டி செல்லமுடியாத அளவில் வீதி சேதமடைந்துள்ளது. பிரதான வீதிக்கு நோயாளரை ஊழவு இயந்திரத்தின் மூலம் கொண்டுசெல்ல முற்பட்ட வேளை இடைநடுவே முதியவர் உயிரிழந்தார். ஒரு அவசர தேவை கருதி நோயாளர் காவு வண்டி கூட இப்பகுதியில் பயணிக்க முடியாத நிலையில் உள்ளது. அத்துடன் பகல் வேளை டிப்பர்கள் அதிக வேகத்துடன் மணல் ஏற்றிச்செல்வதால் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் மிகவும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளனர். தற்பொழுது நூதன முறையில் மணல் திருட்டு இடம்பெற்று வருகின்றது. மணல் மூட்டைகளாகக் கட்டப்பட்டு, கனரக வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படு கின்றது. அத்துடன் கப் ரக வாகனங்களிலும் மணல் ஏற்றிச் செல்லப்படுகின்றது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மண் அகழ்வு இடம்பெறும் இடத்தில் இருந்து 500 மீற்றர் தொலைவில் ஒரு இராணுவ முகாம் உள்ளது . அவர்கள் இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுப்பதில்லை. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மணல் அகழ்வைத் தடுக்க வேண்டும் - என்றனர். (ப-113 214)



# வறிய குடும்பத்துக்கு வீடு கையளிப்பு

வவுனியா, ஜூலை 11

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் பொருண்மியம் நலிவடைந்த குடும்பம் ஒன்றுக்கு வீடு கையளிக்கப்பட்டது. நம் தாயகம் நிறுவனத்தின் உரிமையாளரின் நிதி உதவியில். மாணிக்கதாசன் நற்பணி மன்றத்தால் கட்டப்பட்ட குறித்து வீடு நேற்றுமுன்தினம் பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

மூன்று அங்கத்தவர்களுடன் கொட்டில் வீட்டில் வசித்து வந்த நிலையில். அக் குடும்பத்தின் உறைவிடத் தேவையை பூர்த்திசெய்யும் முகமாக ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் இந்த வீடு அமைக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதேச செயலர் நா.கமலதாசன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தலைவர் யோகராசா, செட்டிகுளம் பிரதேச சபைத் தலைவர் ஜெகதீஸ்வரன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் மயூரன். மற்றும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் சந்திரபத்மன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.(ஐ-18)

# சுகாதாரப் பொருள்களை கையளித்த 'வில் கிளப்'

யாழ்ப்பாணம், ஜூலை 11

"வில் கிளப்" எனும் பிரதேச சபைகளின் பெண் உறுப்பினர்களின் அமைப்பால் சுகாதார பாதுகாப்புப் பொருள்கள் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசனிடம் கையளிக்கப்பட்டுள்ளன. ஒட்சிசன் கொன்சென்ரெற்றர், ஒட்சிசன் ரெகுலேற்றர் போன்ற பொருள்களே வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பொருள்கள் "சேர்ச் போர் கொமன் கிறவுண்ட்" மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையில் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பொருள்கள் மாவட்டச் செயலர் ஊடாக பிராந்திய சுகாதார பணிமனைக்கு கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

"வில் கிளப்" அமைப்பு மகளிர் அபிவிருத்தி நிலையம் மற்றும் யாழ். சமூக செயற்பாட்டு மையத்தினரால் கற்றல் மற்றும் தலைமைத்துவத்தில் பெண்கள் மற்றும் சமாதானம் மற்று நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காக பெண்களை வலுவூட்டல் ஆகிய செயற்றிட்டங்களின் ஊடாக உருவாக்கப்பட்ட அமைப்பாகும்.



# இலவச கண் பரிசோதனை

யாழ்ப்பாணம், ஜூலை 11

அரியாலை பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கான இலவச கண்பரிசோதனை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அரியாலை காந்தி சனசமூக நிலைய வெள்ளி விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. காங்கேசன்துறை கோல்டன் ஸ்டார் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இந்தக் கண் பரிசோதனை முகாம் நடைபெறவுள்ளது. பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்படும் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாக மூக்கு கண்ணாடி வழங்கப்படும் என்று கழகத் தலைவர் லயன் கலாநிதி கா.பீ .ஜெயவிந்தன் அறிவித்துள்ளார். (ஐ-9)

# மூதாட்டியை மோதிய மோட்டார் சைக்கிள்

சாவகச்சேரி, ஜூலை 11

வீதியில் நடந்து சென்ற மூதாட்டியை, வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதிவிட்டு தப்பியோடியுள்ளது.

இதில் காயமடைந்த மூதாட்டி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை மாலை சாவகச்சேரி சங்கத்தானையில் இடம்பெற்றது. அல்லாரையைச் சேர்ந்த 70 வயது மூதாட்டியே இவ்வாறு விபத்தில் காயமடைந்தார். (ஐ-9)

# சிறுவர் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரல்

வவுனியா, ஜூலை 11

சிறுவர்களின் ஆக்கபூர்வமான எண்ணங்களை மேலும் வினைத்திறனாக்கும் முகமாக பிரதேச செயலக சிறுவர் கழக சிறார்களிடம் இருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

சேகரித்த ஆக்கங்களை வைத்து மாவட்ட மட்டத்தில் சஞ்சிகை ஒன்று வெளியிடப்படவுள்ளது. சஞ்சிகைக்கு சிறுவர் கழகங்களை சேர்ந்த சிறுவர்களிடமிருந்து பல்வேறு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

அந்தவகையில் 6-10 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களிடமிருந்து சித்திரம், சிறுவர் கதை மற்றும் கல்விசார் ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

இவர்களிடமிருந்து "கொரோனாவும் நானும்","பள்ளிக்கூடம் பேசுகின்றது", "சிறுவர் பாதுகாப்பு" ,"சேமிப்பு பழக்கத்தை கையாள்வோம்" ஆகிய தலைப்புக்களில் ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

11-15 வயதுக்குட்பட்டவர்களுக்கு குறுக்கெழுத்துப்போட்டிக்கான ஆக்கம்,

கவிதை (40 சொற்கள்)சித்திரக்கதை(ஏ4 தாளில் 5 பக்கங்கள்), காட்டூன் சித்திரம் (ஏ 3 தாளில் வரைதல்) போன்ற ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

இவர்களுக்கு "பள்ளிக்கூடம் பேசுகின்றது","கொரோனாவும் ஒண்லைன் கல்வியும்","போதைப் பாவனையும் சிறுவர் துஸ்பிரயோகம்","வீட்டுத்தோட்டமும் அதன் அனுகூலங்களும்" ஆகிய தலைப்புக்கள் ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

16- 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு கட்டுரை (250 சொற்கள்),புதுக்கவிதை(40 வரிகள்),

சிறுகதை (250 சொற்கள்),உலர் சித்திரம் (ஏ3 தாளில் வரையவேண்டும்)குறுக்கெழுத்துப் போட்டிக்கான ஆக்கம் போன்ற ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

இவர்களுக்கு "நவீன தொழில்நுட்பத்தின் சாதகபாதக விளைவுகள்", "சமகாலசமூகத்தில் போதைப்பொருளின் செல்வாக்கும் விளைவுகளும்", "கொரோனாவும் ஒன்லைன் கல்வியும்","ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை கையாள்வோம்" ஆகிய தலைப்புக்கள் ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

அனைத்து பிரிவினரும் ஆக்கங்களை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்பாக பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்.அல்லது சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் கையளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலதிக் தகவல்களுக்கு மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் யோ.ஜெயகெனடியை (0775380 4220) தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது. (ஐ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்திட்ட பயனாளிகள் விவரம்

**கிராமிய வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சால் யாழ்ப்பாண மாவட்டத்தில் வீடமைப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட வுள்ளது. இதற்குரிய பயனாளிகள் பட்டியல் Ãâ½ பிரதேச செயலர்களால் தெரிவுசெய்யப்பட்டு யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவர்களின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருந்தது. அந்தப் பட்டியல் இங்கே வெளியிடப்படுகின்றது. இந்தப் பட்டியலில் தகுதியானவர்கள் புறக்கணிக்கப்பட்டு தகுதியில்லாதவர்கள் உள்ளடக்கப்பட்டிருப்பின் அது தொடர்பான ஆட்சேபனைகளை பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகத்துக்கு முன்வைக்க முடியும்.**

*உதயனின் 077 120 9994 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டும் இது தொடர்பான முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம். முறைப்பாடுகளின் உண்மைத்தன்மையை உதயன் ஆராய்ந்து அதனை பிரசுரிப்பதுடன் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடமும் சேர்ப்பிப்பான்.*

## நல்லூர் பிரதேச செயலகம்

### பத்து லட்சம் ரூபா வீடு

ராசமோகன் பாமதி J/105, செந்தில்நாதன் குமரேசன் J/106, தவராசா இராசமல்லிகாதேவி J/109 செல்வரத்தினம் ரவீந்திரன் J/109, கனகரட்னம் மயூரன் J/110, திருநாவுக்கரசு சிவகுமார் J/110, புஸ்பம் வரதராசா J/111, வரதராஜன் ராஜ்குமார் J/112, கதிரவேலு மயூரன் J/113, பராக்கிரமன் யோகநாதன் J/113, தாமோதரம்பிள்ளை யோகானந்தம் J/114, குணசீலன் பிரதீபன் J/114, தேவதாஸ் சசிரேகா J/114, சந்தியா தேவேந்திரம் J/114, சுவந்தன் கமலாதேவி J/114, பாலசிங்கம் குலெந்திரன் J/114, கந்தையா குகனேஸ்வரன் J/114, அருளப்பு பிரேமதாஸ் J/114, கந்தசாமி காண்டீபன் J/114, ஜேகதாஸ் பியுலா J/114, சுப்பிரமணியம் யோகவிநாயகம் J/114 பாலசுப்பிரமணியம் கணேசன் J/114, மார்க்கண்டு நந்தகுமார் J/115, ஐயம்பிள்ளை சிறிபன் J/115, கந்தையா ஜெகநாதன்J/116, சண்முகநாதன் சந்திரகுமார் J/116, செல்வராசா ரவிகுமார் J/118, கதிரவேலு தவராசா J/118, நடராசா பிரபு J/118, வைத்தி குணசேகரம் J/120, மாணிக்கம் இராசேந்திரன் J/120, கந்தசாமி முகந்தன் J/121, விஸ்வலிங்கம் அருட்செல்வி J/121, சண்முகராசா மோகனராசா J/122, தியாகராசா முரளிதரன் J/123, தவரட்ணம் தேவதாஸ் J/123, கணபதிப்பிள்ளை ஜெயக்குமார் J/124 சிவசுப்பிரமணியம் பிரசாத் J/126, இராசரட்ணம் கைலைநாதன் J/126, சொக்கலிங்கம் நாகேஸ்வரி J/127, அன்ரோனி பழனிமுத்து J/89, சின்னத்துரை சசிகரன் J/89, லோகநாதன் யசிந்தன் J/89, சுகமார் தர்சினி J/89, யேசுநாயகம் அன்ரனி கிழவி J/89, டான்சன் அன்ரனி குயின்ரன் J/89, கிறிஸ்தோப்பர் யேசுதாஸ் J/89, பெர்ணாண்டோ பத்மதாஸ் J/89 நிரஞ்சன் டான்சினி J/89, ரஞ்சித் சுகந்தா J/90 திருநாவுக்கரசு சர்வேஸ்வரன் J/90 சாமிநாதர் ஜேம்ஸ் J/90 பரமநேசன் மேரி ஜென்சி J/90 யுட்ஸ் ஜேம்ஸ் நியாந்தி J/90 அருளப்பு போர்மன் J/90 அல்பிரட் பமதா கொலசியா J/90 சத்தியகுமாரி கஜேந்திரன் J/91, தோமஸ் ஏபிராகம்லிங்கம் J/91, விஜயகுமார் இனியேதிரவினா J/92 இராசகுமார் கிருஸ்ணலக்சுமி J/93, கந்தசாமி செல்வராசா J/94 பாலசுப்பிரமணியம் சுபாஸ்கரன் J/94 கதிர்காமு சுதாகரன் J/95, ஜெகதாஸ் ரிச்சட் றீகன் J/95 நிக்சன் ஜென்சி J/96, ராமலிங்கம் ரவி J/96, சந்தியாப்பிள்ளை மேரி ஜரின் J/96, டேவிட் லூட்சிமேரி J/96 கோவிந்தசாமி நிரஞ்சன் J/96 கிருஸ்ணசாமி வாசுதேவன் J/96 சண்முகலிங்கம் சந்திரகுமார் J/98 இராசநாயகம் சுரேஸ்குமார் J/99 தியாகராசா அருமைத்துரை J/99

### ஆறு லட்சம் ரூபா வீடு

பவானி சின்னத்துரை J/101, தம்பிப்பிள்ளை சந்திரா J/106, தர்மினி விஸ்வநாதன் J/109, சிறிகாந்தன் உதயகுமாரி J/113, புஸ்பராசா தயாளினி J/114, வேலு மனோகரன் J/114, வைஸ்சுநாதன் சுசீலாதேவி J/114, குண்ரட்ணம் புஸ்பமலர் J/114, சிவலிங்கம் இந்திரா J/117, துரையன் புவனேஸ்வரி J/117, துரைராசா லதா J/118, பொன்னுத்துரை தவமணி J/119, வேலுப்பிள்ளை புஸ்பலிங்கம் J/119, தம்பிராசா மகேந்திரன் J/119, பிரான்சிஸ் கிருபாகரன் J/124, நடராசா தமிழரசி J/124, சுப்பிரமணியம் செல்வராணி J/128, கிராகோரி அல்போன்ஸ் J/89 யுட்பேலனியர் அன்ரன் சோபியா J/89, திசைவீரசிங்கம் சந்திரசேகரம் J/89, முருகேசு கருணாககன் J/89, விஜயரட்ணம் பேரின்பரினா J/89, சுயாகன் கணேஸ்ராமேரி J/89, நாகநாதி யோகராஜ் J/89, அருளானந்தம் மஞ்சுளா J/89, கார்திகேசு சுந்தரலிங்கம் J/89, யோசப் பற்றிமாதேவி J/89, ,இராசையா இரவீந்திரன் J/90, தியாகராசா நாகேஸ்வரன் J/90, நாகநாதி பாலசுந்தரம் J/90, முருகேசு சுனித்தா J/91, சின்னையா மன்மத மோகன் J/91, சுப்பன்தேவபாலன் J/91, செல்லத்துரை மயில்வாகனம் J/94, சிவக்கொழுந்து விபுலானச்தன் J/94, சண்முகநாதன் சிவபாக்கியம் J/95, ஜீவராஜ் சரஜ்வதி J/96, அருமைநாயகம் அயேந்தன் J/96, அருளம்பலம் வசந்தினி J/96, குணசிங்கம் சுகுணசீலன் J/96, பத்மநாதன் ஆனந்தமூர்த்தி J/99, செல்வராசா புவனேஸ்வரி J/99

## பருத்தித்துறை பிரதேச செயலகம்

### பத்து லட்சம் ரூபா வீடு

செல்லக்கதிரமலை ஜெயராசசிங்கம் J/384, முருகன் சின்னராசாJ/385, விநாயகமூர்த்தி வரதராசா J/386, செல்லக்கிளி ரபேந்திரராசா J/386, இளமுருகு சிவகுமார் J/386, மாணிக்கம் ஞானசேகரம் J/386, அருள்சிறிகரன் சசிகலா J/386, சந்திரமோகன் ஜெயகௌரி J/389, நவரத்தினம் கருணாரத்தினம் J/389, அன்ரன் பெனார்டோ பிரசாந்தினி J/390, குமணன் சுதர்சினி J/390, தேவசிகாமணி சிறிசங்கர் J/390, இராசேந்திரம் முரளிதாஸ் J/390, தேவாதஸ் சுமணன் J/390, ஜெயகுமார் பிறேமராணி J/390, சுப்பிரமணியம் முத்துவேலு J/391, அப்புலிங்கம் உதயச்சந்திரன் J/391, அருணாசலம் நடராசலிங்கம் J/392, சிவாஜி நந்தினி J/392, செல்லையா முருகமூர்த்தி J/393 , மணிச்செல்வம் கார்த்திகா J/393, தங்கவேல் ஜெகன் J/393, வையாபுரி சிவநாதன் J/393, இராமையா மனோகரன் J/393, கந்தையா உதயகுமார் J/393, சங்கரப்பிள்ளை சந்திரகாந் J/393 சித்திரவடிவேல் சிவலிங்கம் J/393 சிங்கராசா அன்ரனியுட் J/393 சிறிஸ்கந்தவேள் சாந்தன் J/393, புஸ்பரூபன் அபிராமி J/394, செல்லையா சிவநாதன் J/394 , உமாமகேஸ்வரன் பாலேஸ்வரி J/394, பவுலீனப்பு வலன்ரைன் J/394, மகேன்திரகுமார் கலைவாணி J/394, சுப்பையா ஜெயரத்தினம் J/395, திருநாவுக்கரசு ஜெயகுமார் J/395, முருகேசன் சிவகுமாரன் J/395, இரத்தினம் சிவரத்தினம் J/395, நற்குணம் உத்தரியம்மா J/396, பாலசுப்பிரமணியம் பாரதிசங்கர் J/396, பீற்றர் விக்ரர் அமலதாஸ் J/396 , சுப்பிரமணியம் சுமன் J/397, இரத்தினம் மகேசநாதன் J/397, நடராசா தேவராசா J/397, கோணேஸ்வரமூர்த்தி செல்வாஜினி J/397,

விஜயகுமார் தேவகி J/397, வரப்பிரகாசம் ரஜீவன் J/398, அமிர்தலிங்கம் ஜெயரூபன் J/398, மகேந்திரம் இராசேந்திரன் J/398, லூர்ணாஸ் கிறிஸ்துராஜா J/398, தெயவேந்திரா திருமாறன் J/398, சின்னத்துரை குணசேகரம் J/399, லோகச்சந்திரன் தயாளினி J/400, நவரத்தினம் ஜெகஜீவகன் J/400, இரத்தினசபாபதி ஜெயகுமார் J/400, சத்தியராஜ் கவிதா J/400 ,சின்னத்தம்பி சூரியகுமார் J/401 வீராச்சாமி அரிகிருஸ்ணன் J/401, கோபாலசிங்கம் விஜயகுமார் J/401, இராசேந்திரம் கமலேந்திரன் J/401 சத்தியமூர்த்தி கிருஸ்ணமோகன் J/401, திருச்செல்வம் அல்டன் J/403, சவரிமுத்து லூர்ஜிஸ்பிரான்ஸிஸ் J/403 , அலோசியஸ் ஞானதாஸ் டெனிஸ்கரன் J/403, தொம்மைப்பிள்ளை அன்ரன்புஸ்பதாஸ் J/403, இராஜ்குமார் மேரி அனிஸ்ரா J/403, கனகசபை தேவராஜ் J/404, நடராசா நாகேந்திரன் J/404, செல்லத்தம்பி யோகேந்திரம் J/405, இராஜகுமார் பிருந்தினி J/405 ,இராசதுரை உதயசீலன் J/405, வேலாயுதம் ஜெகதீஸ்வரன் J/405,

தொம்மைப்பிள்ளை அன்ரன்ஜேசுதாஸ் J/405, இரத்தினம் தியாக ராஜா J/406 குருப(ர)தம் அருள்நாதன் J/406 உதயகுமார் சிவாணி J/406, அன்ரனி தவராசா அனுஜா J/408, இராஜா குகரூபன் J/408, பாஸ்கரன் அகிலா J/409, தங்கராசா ஜெயசீலன் J/410 , இராசையா கோபாலசுந்தரம் J/411, சபாரத்தினம் கமலாதேவி J/412, வல்லிபுரம் இலங்கைநாதன் J/412, ஜெயானந்தன் சந்திரபிறேமா J/412, ரவிச்சந்திரன் ஜெயலக்சுமி J/412 , சின்னத்தம்பி சுந்தரம் J/413, ஞானவேல் ரஜிகரன் J/413, இராசதுரை விஜயகுமார் J/413,அனிக்கிளிஸ் ஜமேஸ்ரலன் ஜீட் J/414, கிருஸ்ணசாமி செந்தூரன் J/414, கந்தையா செல்லம்மா J/414, நடராசா செல்லம்மா J/415, தெயவேந்திம் இரத்னகிருஸ்ணன் J/416

### ஆறு லட்சம் ரூபா வீடு

குட்டித்துரை தவனேஸ்வரி J/386, ஜெயசுதன் வதனி J/392, ஜெயசுதன் வதனி J/392, பாலகிருஸ்னன் தவபோதினிதேவி J/392 ஆதிநாராயணபிள்ளை நிர்மலகுமாரி J/393 ஆறுமுகம் பழனிவேலு J/393, மயில்வாகனம் இரகுநாதபிள்ளை J/393, இருதயசீலன் சகாய ராணி J/394, கணபதிப்பிளைளை ஜெயராசசிங்கம் J/394 விசாகப் பெருமாள் கமலமலர் J/395, செல்வராசா தளையசிங்கம் J/396, சிவதாசன் சிவபாக்கியம் J/400, இராசகுமார் மேரி அஜந்தா J/401 ஆதிமூலம் பத்மாவதி J/402 பாலதயாகரன் நந்தகுமாரி J/403, அமரசிங்க அமரதேவர் J/403, சந்தியாபிள்ளை அலோசியஸ் ஞானதாஸ் J/403 முருகேசம்பிள்ளை தவமலர் J/404, அருந்தவராசா அஜந்தன் J/404, தேவசாகயம் தேவராசா J/405, நாகராசா லலிதா J/405, சசிகுமார் தனுஜா J/405, கந்தசாமி தங்கவடிவேல் J/405, நவசிவராசா நவேந்திரா J/406, பாலசுப்பிரமணியம் வானதி J/407, அன்ரனி பெனடிற்மேரிமெற்றில்டா J/407, அன்ரன் மதி J/407, ஆறுமுகம் கிருஸ்ணகுமாரி J/408, சின்னையா நவரத்தினம் J/408, தில்லையம்பலம் தேவராசா J/412 , [illegible] மனோன்மணி J/412 கஜேந்திரன் பத்மசிறி J/413, செட்டியார் முத்துராஜா J/413, நடராசா சிவபாக்கியம் J/416, வில்வலிங்கம் விவேகானந்தம் J/417

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



மறவன்புலவு ஜே/298 கிராம அலுவலர் பிரிவில் நேற்று முன்தினம் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன. சாவகச்சேரி பிரதேச சபையால் 2019 ஆண்டு ஒதுக்கப்பட்ட சபை நிதி ஒதுக்கீட்டில் பதினாறாம் வட்டார உறுப்பினர் அ.நிமலரோகனால் இந்த வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன. (ஐ-159)




## தொழிற்சாலை பணியாளர்களை ஏற்றிச்சென்ற பஸ் சாரதி கைது

### மதுபோதை காரணம் என்று குற்றச்சாட்டு

மன்னார், ஜூலை 11

மன்னார் ஆடைத் தொழிற்சாலையில் இருந்து அங்கு கடமையாற்றும் பெண் பணியாளர்களை ஏற்றிச்சென்ற பஸ் சாரதி நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். கடுமையான மது போதையில் குறித்த பஸ்ஸைச் செலுத்திச் சென்றார் என்ற குற்றச்சாட்டிலேயே அவர் கைதுசெய்யப்பட்டார்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன், ஆண்டாங்குளம் மற்றும் வட்டக்கண்டல் ஆகிய கிராமங்கில் இருந்து ஆடைத்தொழிற்சாலைக்கு பணியாளர்களை ஏற்றி இறக்கும் பஸ்ஸின் சாரதியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பஸார் பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட மன்னார் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த வீதிப் போக்குவரத்து பிரிவு பொலிஸார் குறித்த பஸ்ஸை நிறுத்தி சாரதியை பரிசோதித்த போது, சாரதி நிறைபோதையில் தள்ளாடினார். இந்த நிலையிலேயே அவர் கைதுசெய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

சாரதி கைதானபின்னர், உடனடியாக பிரிதொரு பஸ் ஏற்பாடு செய்யப்பட்டு, ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள் அதில் ஏற்றி அனுப்பப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-56)

## சிறப்பு வழிபாடு

கொடிகாமம், ஜூலை 11

பளை இந்து ஆரம்ப பாடசாலையில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் சிறப்பு பொங்கல் வழிபாடுகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

கொரோனாத் தொற்றிலிருந்து நாட்டு மக்கள் விடுபட வேண்டியும், நீண்ட காலமாக கல்வியைத் தொடர முடியாமல் இருக்கும் மாணவர்களது நலன் கருதி விரைவில் பாடசாலை கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட வேண்டியும் சிறப்பு வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன. (ஐ-159)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலிகளைத் தாண்டும் யானைகள் கிராமத்துக்குள் புகுந்து அட்டகாசம்

**முல்லைத்தீவு, ஜூலை 11**

**முல்லைத்தீவு பழையமுறிகண்டி, ஐயன்கன்குளம் கிராமங்களில் யானை வேலிகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும், வேலிகளைத் தாண்டி யானைகள் கிராமங்களுக்குள் வந்து பயிர் அழிவுகளை ஏற்படுத்துகின்றன என்று மக்கள் சுட்டிக்காட்டினர்.**



இது தொடர்பில் மக்கள் தெரிவிக்கையில்;

யானை வேலிகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் ஐயன்கன்குளம் பாடசாலைக்கு அருகிலும் ஐயன்கன்குளம் பகுதியிலும் வழிகள் விடப்பட்டுள்ளன. இவ்வழிகளில் பாதுகாப்பு ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருக்கவேண்டும். ஊழியர்கள் நியமிக்கப்படாததன் காரணமாக யானைகள் இரு வழிகளாலும் கிராமத்துக்குள் நுழைந்து பயிர் அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன. யானைவேலிகள் பெரும் செலவில் அமைக்கப்பட்டுள்ள போதிலும் பயனற்றனவாகவே தற்போது காணப்படுகின்றன. யானை வேலிகளில் காணப்படும் இரு வழிகளையும் பாதுகாப்பானதாக மாற்றுவதன் மூலம் யானைகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்த முடியும். முல்லைத்தீவு மாவட்டத்தில் யானைகளின் தொல்லை கூடுதலாகக் காணப்படும் கிராமங்களாக புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி கிராமங்கள் காணப்படுகின்றன. விவசாய நடவடிக்கைகளுக்கு யானைகள் பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வருவதுடன் மக்களின் நடமாட்டத்துக்கும் அச்சுறுத்தலாக உள்ளன. எனவே அமைக்கப்பட்ட யானை வேலியைப் பாதுகாப்பானதாக மாற்ற சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ப-13)

## கற்குவாரிகளால் 11 மில்லியன் ரூபா புதுக்குடியிருப்பு சபைக்கு வருமானம்

முல்லைத்தீவு, ஜூலை 11

முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் இயங்கும் இரண்டு கற்குவாரிகளால் சுமார் 11 மில்லியன் ரூபா நிதி புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு வருமானமாகக் கிடைத்துள்ளது என பிரதேச சபை உறுப்பினர் இ.சத்தியசீலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இரு கற்குவாரிகளும் பிரதேச சபைக்கு வரி செலுத்தாமல் தமது செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்தன. பிரதேச சபையின் வருமான அதிகாரியால் இந்த விடயம் அவதானிக்கப்பட்டு சுமார் 11 மில்லியன் ரூபா புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு வருமானமாகக் கிடைத்துள்ளது. இரு கற்குவாரிகளாலும் 52 லட்சம் ரூபா நிதி பிரதேச சபைக்கு செலுத்தப்பட்டுள்ளது.

மிகுதிப் பணமும் கற்குவாரிகளால் விரைவில் செலுத்தப்படும். கற்குவாரிகளால் நிதி செலுத்தப்படாதது தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்ட புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் வருமான அதிகாரி பாராட்டுக்குரியவர்- என்றார் (ப-13)

சாவ. பிரதேச சபைக்குச் சொந்தமான

## ஏ32 - ஏ9 வரையான வீதி சீரமைக்கப்படுமா?

மக்கள் கேள்வி

சாவகச்சேரி, ஜூலை 11

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஏ-32 தொடக்கம் ஏ-9 வரையான வீதி சீரமைக்கப்படுமா என அப்பகுதி மக்கள் கேள்வியெழுப்பினர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்;

மறவன்புலவு தண்டவாளத்தியில் இருந்து மறவன்புலவு வடக்கு ஊடான ஏ 32 வரையான வீதி சாவகச்சேரி பிரதேச சபைக்கு சொந்தமானது. இந்த வீதி சாவகச்சேரிக்கு செல்வதற்கு குறுகிய பாதை என்பதால் தென்மராட்சி தெற்குப் பகுதி பிரதேச மாணவர்கள், அரச அலுவலர்கள், விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் அந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர். பிரதேச சபை எல்லைக்குட்பட்ட குறித்த வீதி இன்னமும் சீரமைக்கப்படவில்லை. கடந்த வருடம் பிரதேச சபை தவிசாளருடன் கலந்துரையாடியபோது விவசாய வீதித் திட்டத்தில் சீரமைக்கப்படுமெனத் தெரிவித்திருந்தார். எனினும் குறித்த வீதி இதுவரை சீரமைக்கப்படவில்லை. நுணாவில் பிள்ளையார் கோவிலிலிருந்து. ஏ -32 வரையான வீதியின் இருபுறமும் காலபோக நெற்செய்கை வயல்கள் காணப்படுவதால் காலபோக நெற்செய்கைக் காலத்தில் பெருமளவு வாகனங்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றன.

வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுவதுடன் வீதியின் இருபுறமும் பற்றைகள் வளர்ந்து விஷஜந்துகள் காணப்படுகின்றன. இதனால் இரவு வேளையில் வீதியில் பயணிக்க மக்கள் அச்சம் கொள்கின்றனர்- என்றனர். (ப-9)



## நாட்டுத் துப்பாக்கியுடன் சந்தேகநபர் கைது

முல்லைத்தீவு,ஜூலை 11

சட்டவிரோதமான முறையில் நாட்டுத் துப்பாக்கியை வைத்திருந்த குற்றச்சாட்டில் குடும்பத் தலைவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பாள்புரம் கிராமத்தில் வைத்து இவர் கைதுசெய்யப்பட்டார். (ஐ-19)

முன்னணியின்

## வவுனியா முக்கியஸ்தர் விசாரணைக்கு அழைப்பு

வவுனியா, ஜூலை 11

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தர் ப.தவபாலனை பொலிஸார் விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

மஸ்கலிய பகுதியில் கொரோனா இடர்காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வவுனியாவில் பொருள்களைச் சேகரித்து தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனி ஊடாக ப.தவபாலன் முன்னின்று வழங்கியிருந்தார். இவ்வாறான உதவியை மேற்கொண்டமைக்காக குறித்த அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. பணியின் நிமித்தம் அவர் வெளியே சென்றிருந்தபோது, அவரது வீட்டுக்குச் சென்ற பொலிஸார் சிங்களமொழியில் எழுதப்பட்ட அழைப்பாணையை வழங்கி நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பொலிஸ் நிலையம் வருமாறும் கூறிச்சென்றுள்ளனர். (ப-110)

## ஏ9 வீதியில் விபத்து இருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஜூலை 11

மோட்டார் சைக்கிள்கள் இரண்டு நேருக்குநேர் மோதியதில், அதில் பயணித்த இருவர் காயமடைந்தனர். இந்த விபத்து ஏ9 வீதியில் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வடக்கு மாகாணசபையில் பணியாற்றும் பெண் ஊழியர் உள்ளிட்ட இருவரே இவ்வாறு காயமடைந்தனர். காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ-12)



சமுர்த்தி திணைக்களத்தின்

## மாதாந்த சீட்டிழுப்பில் பயனாளி தெரிவு

சாவகச்சேரி, ஜூலை 11

தென்மராட்சி பிரதேசத்தில் சமுர்த்தி திணைக்களத்தால், நடத்தப்பட்ட மாதாந்த சீட்டிழுப்பில் தென்மட்டுவிலைச் சேர்ந்த பயனாளிக்கு இரண்டு லட்சம் ரூபா பரிசு கிடைத்துள்ளது. சமுர்த்தி பயனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் சீட்டிழுப்பின் மூலம் அதிஸ்டசாலியைத் தெரிவுசெய்யும் முறையை சமுர்த்தி திணைக்களம் ஆரம்பித்தது. ஆரம்பத்தில் தேசிய நிலையில் பயனாளிகள் சீட்டிழுப்பின் மூலம் தெரிவுசெய்யப்பட்டனர்.பின்னர் மாகாண,மாவட்ட,பிரதேச நிலைகளில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு மாதாந்தம் இரண்டு லட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் கடந்த மார்ச் மாத சீட்டிழுப்பில் தெரிவுசெய்யப்பட்ட தென்மட்டுவில் பிரிவைச் சேர்ந்த பயனாளிக்கான காசோலை மாவட்டச் செயலர் க.மகேசனால் அண்மையில் வழங்கப்பட்டது. (ஐ-9)

## விசாக்களுக்கான காலம் நீடிப்பு

கொழும்பு.ஜூலை 11

நாட்டில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களுக்கான விசாக்களின் செல்லுபடியாகும் காலம் மேலும் ஒரு மாதம் நீடிக்கப்பட்டுள்ளது. விசாக்களின் செல்லுபடியாகும் காலத்தை அடுத்த மாதம் 8 ஆம் திகதி வரை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை குறிப்பிட்ட காலத்துக்குள் காலாவதியாகும் விசாக்களுக்கு அந்தக் காலத்துக்கு பொருந்தக்கூடிய விசாக் கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படும். தண்டம் விதிக்கப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பற்சுகாதாரமும் அதன் அவசியமும்

சிரிக்கும் போது பளீச்சென்று அழகூட்டும் அழகுப் பொருளாக, பேசும் மொழியினை சிறப்புடன் உச்சரிக்க உதவும் சாதனமாக மற்றும் உண்ணும் உணவுப் பொருளினை நன்றாக அரைத்துப் பின்னர் அது சமிபாடு அடைவதற்கு உதவும் இன்றியமையாத உறுப்பாக பற்கள் உதவுகின்றன.

"பல் போனால் சொல் போச்சு" என்பார்கள். அத்தகைய மகத்துவமுடைய பற்களை பாதுகாப்பதில் இன்று எம்மில் பலர் தவறுகின்றோம். முரசு நோய்கள், பற்சூத்தை என்பவற்றுக்கு இன்னும் பலரும் ஆட்பட்டுள்ளோம். அல்லது அதன் ஆபத்தில் உள்ளோம்.

முரசு நோய்கள் பற்களிற்குப் பாதுகாப்புத் தரும் இழையங்கள் மற்றும் என்புகள் முதலியவற்றில் ஏற்படும் கிருமித்தாக்க மற்றும் அழற்சி நோயாகும். இது பல் ஈறுகளையும் அதனைச் சுற்றியுள்ள இழையங்களையும் பாதிக்கின்றது. நோயின் தீவிரத்தைப் பொறுத்து பல்வேறு படிகளாக முரசு நோய்கள் காணப் படுகின்றன.

பல் ஈறுகளில் கிருமித்தாக்கத்தால் ஏற்படும் அழற்சி பல் ஈறழற்சி எனப்படுகின்றது. இதில் முரசானது செந்நிறமாக வீங்கிக் காணப்படும். பற்களைத் தீட்டும் போது இரத்தம் கசியும். பெரும்பாலும் இத்தகைய நோயுடையோருக்கு வலி எடுப்பதில்லை, எனவே அதனைப் பற்றி அக்கறை கொள்ளாது உரிய நேரத்தில் சிகிச்சை பெற்றுக்கொள்வதில்லை. இது உருவாகுவதற்குரிய முன்னணிக் காரணியாக பாக்டீரியாக்கள் திகழ்கிறன. பொதுவாகவே பற்களில் முரசுகளில் ஒரு நிறமற்ற படலமாக பக்டீரியாக்கள் படிகின்றன. பற்சூத்தை மற்றும் பற்சுற்றி நோய்களின் ஆரம்ப நிலையில் ஏற்படும் இத்தகைய படலம் "பிளாக்" என்று அழைக்கப்படுகிறது.

இந்தப்படலமானது ஆரம்பத்தில் இலகுவாக விரல் நகம் கொண்டு அகற்றப்படக்கூடியளவு இளகலாகக் காணப்படும். இது அகற்றப்படவில்லை என்றால் 48 மணி நேரங்களுக்குள் கடினமடைந்துவிடும். மேலும் பத்து நாள்கள் சென்ற பின்னர் மேலும் தீவிரமடைந்து அகற்ற முடியாததாகவே ஆகிவிடும். அல்லது தாத்தார் எனப்படும் மஞ்சள் நிறமுடைய நிலையை அடைந்துவிடும். எனவே தான் நாளாந்த வாய்ச் சுகாதாரம் அவசியம். ஒழுங்காக பல் துலக்காதவிடத்து இத்தகைய சிக்கல்கள் பற்சிதைவு, பற்சூத்தை மற்றும் பற்சுற்றி நோய்களைத் தோற்று விக்கும்.

பல்லின் அமைப்பைப் பற்றி பார்த்தோமானால், அது நான்கு வகை இழையங்களால் ஆனது:

1. பற்காரை : பல் வேரின் வெளிப்பகுதியைச் சூழ உள்ளது.
2. காற்றிடை என்பு : தாடையில் பற்களுக்கு ஆதாரமாக விளங்குவது.
3. ஈறு : தொடுப்பிழைய அமைப்பு
4. பல் சுற்றி இணைப்பிழை : பற்காரைக்கும் காற்றிடை என்புக்கும் இடையிலே தொடுப்பாகத் திகழ்வது.

மேற்கூறியவற்றுடன் இன்னும் சில நார்கள், இழையங்கள் சேர்ந்து ஆரோக்கியமான பற்களை உறுதியாக வைத்திருக்க உதவுகின்றன. இந்த அமைப்பினை முரசு தொடுப்புச் சாதனம் என்று அழைப்பர்.

முரசு அழற்சியின் போது பற்களுக்கும் இந்த அமைப்புகளுக்கும் இடையிலான தொடுகையானது இழக்கப்படுகிறது. ஆனால் இது தற்காலிக மாற்றமே, சிகிச்சை பெறப்பட்டால் மீண்டும் பழைய ஆரோக்கிய நிலைக்கு திரும்பி விடும். இங்கு என்புகளோ மற்றைய இழையங்களோ பாதிப்படைவது இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே பற்களில் அக்கறை கொண்டவர்களாக அவற்றின் தேவை மற்றும் உறுதியை உடையவர்களாக பற்சுகாதாரத்தையும் வாய் சுகாதாரத்தையும் பேணுவோம். நோய்களில் இருந்து தூரமாக இருப்போம்.

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

பலாலியை பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மேரி மல்லிகாவின் 31ம் நாள் நினைவு

மண்ணில் 04.03.1959



விண்ணில் 13.06.2021

## ஜோன் அரியதாஸ் மேரி மல்லிகா

(ஓய்வுநிலை ஆசிரியை - யா/புனித பத்திரிசியார் கல்லூரி)

"அன்புக்கு இலக்கணமாய் பண்பே உருவமாய்
கருணையின் வடிவமாய் எம் நெஞ்சில் வாழ்ந்தீர்"
நிறைந்த கல்விப் பொக்கிசமாய் சிறந்த ஓர் ஆசானாய்
பலரை இப்பாரினில் தலை நிமிர்ந்து வாழவைத்தீர்
குருக்களாக, ஆசிரியர்களாக ஓர் கல்வி சமூகத்தையே
உருவாக்கினீர்

நீர் எம்மை விட்டு பிரிந்து சென்றதும் உம்பிரிவால் வாடி நிற்கும்
கணவர், சகோதரன் - மருமக்கள் மற்றும் உறவினர்கள் அன்பர்கள்
அன்னாரின் பிரிவுத்துயரில் கலந்து கொண்டு அனுதாபங்களைத்
தெரிவித்த அனைவருக்கும் நன்றி

**நாட்டில் நிலவும் கொரோனா தொற்று காரணமாக வீட்டின் நிகழ்ச்சிகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன.**

கணவர்-ஜோன் அரியதாஸ்
077 5598 444



# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28.10.1962

மறைவு 11.07.2011

அமரர்
## வேதநாயகம் இம்மனுவேல் இராஜநாதன்

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் பாசநிழல் தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
பத்து ஆண்டுகள் பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் உங்கள் பாசம் போற்றியே பணிந்திடுவோம்

77, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்


# 2|8 போத்தல் கோடாவுடன் கட்டைக்காட்டில் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஜூலை 11

கிளிநொச்சி, கண்டாவளை பெரியகுளம் கட்டைக்காடு பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 218 போத்தல் கோடாவும், கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன. சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, சந்தேகநபர் ஒருவரும் சம்பவ இடத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டார் கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய நேற்று இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றது. சந்தேகநபர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ப-113)



# இலக்கத்தகடுகள் அற்ற மோ. சைக்கிளில் நின்றவர்களைக் கண்டு மக்கள் பதற்றம்

## *சாவகச்சேரி நகரப் பகுதியில் சம்பவம்*

சாவகச்சேரி, ஜூலை 11

சாவகச்சேரி நகரப் பகுதி வீதியொன்றில் இலக்கத்தகடுகள் இல்லாத இரு மோட்டார் சைக்கிள்களில் நால்வர் நின்றதால் வீதியைப் பயன்படுத்தும் மக்கள் அச்சத்துடன் பயணித்தனர் என்றும், இரவுப்பொழுதை அச்சத்துடன் கழித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரப் பகுதியில். டச்சு வீதியையும் அஞ்சலக வீதியையும் இணைக்கும் கண்டுவில் மேற்குவீதியில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் வேளையில் இரு இடங்களில் இலக்கத்தகடுகள் இல்லாத இரு மோட்டார் சைக்கிள்கள் நின்றதை அவதானித்த மக்கள் அவ்வீதியில் செல்ல வேண்டாமென ஏனைய மக்களைத் தடுத்துள்ளனர். கடந்த வியாழக்கிழமை தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் கொவிட்- 19 தடுப்பூசி ஏற்றப்பட்டது. கல்வி வலயத்தால் அறிவிக்கப்பட்ட பிரகாரம் நகரப்பகுதி மற்றும் நகரை அண்டிய பாடசாலைகளுக்கு பிற்பகல் தடுப்பூசி ஏற்றுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்திற்குச் செல்வதற்கு குறுகிய பாதை என்பதால் தங்க நகை அணிந்து வரும் ஆசிரியைகளைக் குறி வைத்து திருடர்கள் அவ்விடத்தில் நின்றிருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வீதியில் உள்ள வயல்வெளிகளை அண்டிய பகுதியில் காணப்படும் மரங்களின், குழைகள் மறைப்பதால் திருடர்கள் மறைந்திருந்து திருட்டில் ஈடுபட வாய்ப்புகள் உள்ளன எனவும் பற்றையாகக் காணப்படும் மரக்கிளைகளை அப்புறப்படுத்துமாறும் மக்கள் நகரசபையைக் கேட்டுக்கொண்டுள்ளனர். (ப-9)



# குளவி கொட்டியதில் குடும்பஸ்தர் பாதிப்பு

சாவகச்சேரி, ஜூலை 11

குளவிக் கொட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட தேவிபுரம் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த 55 வயதுடைய குடும்பத் தலைவரே இவ்வாறு குளவிக்கொட்டுக்கு இலக்கானார்.

தென்னந்தோட்டத்தில் தேங்காய் பறிக்கும் தொழிலில் ஈடுபட்ட வேளை, தென்னை மரத்தில் இருந்த குளவிகள் குறித்த குடும்பஸ்தரைத் தாக்கின எனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் இயங்கும் பிரபல நிதி நிறுவனம் ஒன்றுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் உடனடியாகத் தேவை.

தொடர்பு 077 522 8428

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1977 உத்திரட்டாதி. கி.பா.17 சொந்த தொழில் செய்யும் மணமகனிற்கு மணமகள் தேவை.

நேரடித் தொடர்பிற்கு

T.P: 076 449 6275

## Vacancy Local NGO

Office Assistant & Clerk
2 years of experience, good knowledge in computer skills, fluent in English & Tamil (Sinhala – Optional)
Letter drafting & typing. Knowledge in graphic design will be added advantage.
Email your cv to maruthimgf2021@gmail.com

Contact 077 773 9185

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் வடமராட்சியைச் சேர்ந்த கொழும்பில் வசிக்கும் பெண் வைத்தியர் அவரது இரண்டு பெண் குழந்தைகளை (5.4 வயது) கூட இருந்து அன்புடன் கவனித்துக் கொள்ள 25 - 50 வயதிற்குட் பட்ட பணிப் பெண்ணை தேடுகின்றனர்.

**தகுந்த சம்பளத்துடன் உணவு, தங்குமிட வசதி செய்து தரப்படும்.**

தொடர்பு 077 362 3301

## வீடு வாடகைக்கு உண்டு

சகல வசதிகளையும் கொண்ட மாபிள் பதிக்கப்பட்ட வீடு அனெக்சாக சிறு குடும் பத்துக்கு கொடுக்கப்படும் தரகர் தேவை யில்லை. நேரில் பார்வையிடலாம். (சுண்டுக்குளிப் பகுதி)

தொடர்பு 077 801 8861

## மணமகள் தேவை

1983 ல் பிறந்த கொழும்பைச் சேர்ந்த BA படித்த சுயதொழில் செய்யும் மணமகனுக்கு 7ல் செவ்வாய் தோஷம் அற்றது பொருந்தக்கூடிய அழகிய படித்த மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

உள்நாட்டு, வெளிநாட்டு

075 669 6801, 011 259 8824

## வீடு விற்பனைக்கு

A9 இல் இருந்து 50 மீற்றர் அரியாலை TATA ற்கு அருகில் 9 Rooms, 7 Bath rooms சுற்று மதில் உடனான 3 பரப்பு காணியிலான வீடு விற்பனைக்குண்டு எதிர்பார்ப்பு 175 லட்சம் No Brokerrs

தொடர்பு 076 293 8404

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை.

**AAA Gold Center**

076 568 4346

## வீடு தேவை

ஆஸ்பத்திரி வீதி, நல்லூர், கோப்பாய், திருநெல்வேலி, சுண்டிக்குளி, கச்சேரி நல்லூர் வீதி, இருபாலை, கோண்டா வில், யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் வீடு விற்பனைக்கு இருந்தால் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 399 1200

## வகுப்புக்கள்

**தரம் - 1 லிருந்து தரம் - 4 வரை**
**சகல பாடங்களும் தரம் - 6 லிருந்து தரம் - 9 வரை**

- சைவநெறி
- புவியியல்
- வரலாறு
- குடியுரிமைக்கல்வி
- சுகாதாரமும் உடற்கல்வியும்
- P.T.S

ஆகிய பாடங்களும் கற்பித்துக்கொடுக்கப்படுகின்றது.
தனிப்பட்ட முறையிலும் கற்பித்துக்கொடுக்கப்படுகிறது.

தொடர்பு: 071 522 4663

## விற்பனைக்கு

14 அடி இரும்பினாலான நீர் தாங்கி கரியல் (Water Tank Stand) விற்பனைக்குண்டு.

தொடர்பு: 076 269 4685

## வாடகைக்கு

யாழ் நகரில் அறைகள் (றூம்) ஆண்களுக்கு வாடகைக்குண்டு

தொடர்புகளுக்கு 077 728 3811

## பணியாள் தேவை

நெல்லியடியில் அமைந்துள்ள வியாபார நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதிகள் (Sales Ref) தேவை.

தொடர்புகளுக்கு : 076 822 7546, 077 869 5341

## Room வாடகைக்கு

யாழ் மருத்துவ பீடத்துக்கு அண்மையில் Room வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 077 394 6826

## வேலை வாய்ப்பு

கணினி அறிவும் தொழில்நுட்ப அறிவும் உடைய ஆண், பெண் வேலையாட்கள் தேவை

தொடர்பு 074 089 1995

## வீடு விற்பனைக்கு

யாழ் நகரில் 5 அறைகளைக் கொண்ட சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு

தொடர்பு 077 804 6418

## விற்பனைக்கு

யப்பான் 90 லான்ஸர், T.V.S வெகோ நீலக்கலர் சூட்டி விற்பனைக்கு உண்டு.

077 605 7591/ 021 221 4301

## வேலையாட்கள் தேவை

சைவ உணவகத்திற்கும், அசைவ உணவகத்திற்கும், பில் மேக்கர், தோசை, ரொட்டி, சமையல் காரர்கள், ரைஸ்மேக்கர், வெயிற்றர் மார்கள் ஆண் / பெண் தேவை

077 055 6949

## விற்பனைக்கு

யாழ் பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்திக்கு அண் மையில் 5 பரப்புக் காணியும், 3 பரப்புக் காணியும் யாழ் வேம்படி பாடசாலை வீதியில் 5 பரப்புக்காணியும் 3 பரப்புக் காணியும் யாழ் பிறவுண் வீதியில் 43/4 பரப்பு காணித் துண்டும் 2 பரப்பு காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு 077 723 2535

## தேவை

கொழும்பில் உள்ள பிரபல Mineral Water உற்பத்தி மற்றும் விநியோக நிறுவனத்திற்கு விநியோகஸ்தர்கள் (Dealers) தேவை.
இடங்கள் அம்பாறை, முல்லைத்தீவு, திருக் கோணமலை, வவுனியா, கிளிநொச்சி, கல் முனை, மன்னார், மற்றும் மட்டக்களப்பு.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு

077 799 4420/ 077 738 5370

## பணிப்பெண்தேவை

வீட்டில் தங்கி வேலை செய்ய வீட்டுப்பணிப்பெண் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்

தொடர்பு: 076 923 7686

## வீடு வாடகைக்கு

பலாலிறோட் கோண்டாவிலில் நவீன முறையில் அமைக்கப்பட்ட (2000 சதுர அடி) மேல் மாடி வீடு வாடகைக்கு உண்டு.

077 605 7591/021 221 4301

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் 2 ஆம் குறுக்குத்தெருவில் யாழ்போதனா வைத்தியசாலைக்கு அருகில் மாடி வீடு வாடகைக்குண்டு [illegible]
வேலை [illegible]

தொடர்பு: 076 238 0923
077 321 3490

# யாழ்ப்பாணம்- கிளிநொச்சிக்கு இடையில் புதிய பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்கான இலங்கை போக்குவரத்து சபையின் புதிய பஸ் சேவை நாளை திங்கட்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் இருந்து காலை 6.30 மணிக்கு பயணிக்கத் தொடங்கும் பஸ் காலை 7.25 மணிக்கு கைதடியைச் சென்றடைந்து, பின்னர் கிளிநொச்சி அறிவியல் நகரை காலை 8.25 மணிக்கு சென்றடையும்.

அரச உத்தியோகத்தர்களை இலக்காகக்கொண்டு குறித்த பஸ் சேவை நடத்தப்படவுள்ளது. மாலை 4.15 மணிக்கு அதே வழித்தடத்தில் யாழ்ப்பாணம் தெல்லிப்பழையை குறித்த பஸ் வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-13)

ஓம் விராட் விஸ்வ பிரமனே நம

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 25 • 02 • 1952



மறைவு 11 • 06 • 2021

கடந்த 11.06.2021 அன்று இறைபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் நடராசா கோவிந்தராசா பத்தர் (கோவிந்து)

அவர்களின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியை இன்று (11.07.2021) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

**இந்த அழைப்பினை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்**

இல. 64, காரைக்காட்டு லேன்,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
021 222 3432, 021 222 5184

**PROCUREMENT NOTICE**
**Ministry of Skills Development**
**Vocational Education, Research and Innovation**
**Sri Lanka German Training Institute – Kilinochchi**

SLGTI

## Invitation for Bids (IFB)

The Chairman Department Procurement Committee on behalf of Sri Lanka German Training Institute (SLGTI) now invites sealed bids from eligible and qualified bidders for Security service and Cleaning and Gardening service at SLGTI – Kilinochchi.

1.

| Description | Non-Refundable fee |
|---|---|
| 1. Security service | Rs:- 1000/- |
| 2. Cleaning and gardening service | Rs:- 1000/- |

2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) method.
3. The Bidders having similar experience in supply of above service for at least five years shall be eligible to apply.
4. Interested eligible bidders may obtain further information from the office of the Accountant, Sri Lanka German Training Institute (SLGTI), Ariviyal Nagar, Kilinochchi, and inspect the bidding documents at the address given above from 12/07/2021 up to 11/08/2021 during 09:00 hrs on to 15:00 hrs on working days. Tel: 021/2060137, Fax: 021-2060138.
5. Qualification requirements are included in the Bidding Documents.
6. A complete set of Bidding Documents in English language for each tender may be purchased by interested Bidders on submission of a written application to Accountant, Sri Lanka German Training Institute (SLGTI), Ariviyal Nagar, Kilinochchi from 12/07/2021 up to 11/08/2021 during 09:00 hrs on to 15:00 hrs on working days upon payment of a non-Refundable fee.
7. Sealed Bids for each tender shall be delivered separately in ORIGINAL and COPY address to the Chairman Department Proc ement Committee, Sri Lanka German Training Institute (SLGTI), Ariviyal Naga., Kilinochchi on or before 3.00pm on 11/08/2021. Bids will be opened soon after the closing in the presence of the bidder/ bidders' representatives who choose to attend. Late Bids will be rejected and not accepted.
8. The Bids shall be valid until 11/11/2021.
9. Procurement Committee has the right to reject all the bids, part of the bids or cancel the entire tender. Further, they reserve all the rights with respect to the procurement.
10. All bids shall be accompanied by a Bid security of 5% of the bid value excluded taxes.

**Director/Principal,**
**Sri Lanka German Training Institute (SLGTI),**
**Ariviyal Nagar,**
**Kilinochchi.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒடுக்குமுறை, கைது வேட்டைகளால் ஜி.எஸ்.பி. சலுகை கைநழுவக்கூடும்!

## சபையில் ரணில் எச்சரிக்கை

**கொழும்பு, ஜூலை 11**

**புலிச் சந்தேகநபர்களை விடுவித்ததன் மூலம் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை தக்கவைத்துக்கொள்வதற்கு ஏதுவான சூழல் உருவாகியிருந்த நிலையில், தொழிற்சங்கத் தலைவர்களை கைது செய்ததன் ஊடாக அந்த வாய்ப்பு இழக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தொழிற்சங்கங்களுடன் நீதி அமைச்சர் விரைவில் பேச்சு நடத்த வேண்டும்**



இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார். நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போது கருத்து வெளியிட்ட ரணில் விக்கிரமசிங்க.

ஜுன் மாதம் நிறைவடைந்து விட்டது. எனினும், நிதி அமைச்சின் இடைக்கால மீளாய்வு அறிக்கை இன்னும் கிடைக்கப் பெறவில்லை. அவ்வாறு முன்வைக்கப்படும்போது ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை தொடர்பிலும் தெளிவுபடுத்தல் அவசியம். ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை நிறுத்துவது தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. ஆனாலும் புலிச் சந்தேகநபர்களை விடுவித்த தன்மூலம் நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. ஆனால் நேற்று (நேற்றுமுன் தினம்) நடைபெற்ற சம்பவத்தால் மீண்டும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

தொழிற்சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலினை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு நன்கு தெரியும். 2016 ஆம் ஆண்டில் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை தொடர்பில் நான் பேச்சு நடத்தசென்றபோது ஜோசப் ஸ்டாலின் உட்பட சுதந்திர வர்த்தக வலய தொழிற்சங்க பிரதிநிதிகளு டன் கலந்துரையாடலில் ஈடுபட்டேன். ஜி.எஸ்.பி. சலுகை வேண்டு மெனில் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் தொழிற்சங்க உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். தொழிற்சங்கங்களை அழைத்து நிதி அமைச்சர் விரைவில் பேச்சு நடத்த வேண்டும். பொலிஸார் செயற்பட்ட விதம் தொடர்பில் ஆராய குழுவொன்றும் அமைக்கப்படவேண்டும். அவ்வாறு செய்யா விட்டால் செய்த ஒரு நல்லவேளையும் பலன்தராது போய்விடும்.

அதேவேளை, தனிமைப்படுத்தல் சட்டத்தின்கீழ் எவரையும் பலவந்தமாக தனிமைப்படுத்தலுக்கு அனுப்பமுடியாது. அடிப்படை மனித உரிமையை பாதுகாத்துக்கொண்டே சட்டம் செயற்படுத்தப்படவேண்டும்.

பிசிஆர் பரிசோதனைகூட செய்யாமல்தான் அவர்களை தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்ப முற் பட்டுள்ளனர்- என்றார். (ஒ.44)

# அஜித் ரோஹண கடமையேற்றார்

கொழும்பு.ஜூலை 11

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண போக்குவரத்து மற்றும் குற்றப்பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப் பட்டுள்ளார். அவர் சுகாதார வழிகாட்டல்களுடன், புதிய கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இவரின் கீழ் குற்றப் பிரிவு, பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பணியகம், வீதிப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துக் கட்டுப்பாடு, கடற்கரை மற்றும் சுற்றுலாப் பிரிவு, குற்றப்புலனாய்வு மற்றும் குற்றங்கள் தடுப்புப்பிரிவு, குற்ற அறிக்கைப் பிரிவு, பொலிஸ் கென்னல்ஸ் பிரிவு, சிறுவர் மற்றும் மகளிர் பணியகம், குற்றங்கள் மற்றும் சாட்சிகளில் பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புப் பிரிவு ஆகியவை செயற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)



# பாலத்துக்கு அடிக்கல்

கொடிகாமம்.ஜூலை 11

மந்துவில் வடக்கு கேலக்குள வீதியில் பாலம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன், பிரதேச சபை உறுப்பினர்களான சி. இரத்தினசிங்கம், கே. குகானந்தன் மற்றும் சி. பிரபாகரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஜ-159)



# வீதி விபத்தில் ஒருவர் காயம்

கொடிகாமம்.ஜூலை 11

பட்டா ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதியதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் காயமடைந்துள்ளார். இந்த விபத்துச் சம்பவம் கொடிகாமம் ஏ9 வீதியில் பெற்றோல் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (ஜ-159)

**DIGITAL MARKETING EXECUTIVE**

யாழ் பிரவுண் வீதியில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு டிஜிரல் மார்கட்டிங் அலுவலர் தேவை. அடிப்படை கணினி அறிவு, ஆங்கில அறிவு, இணைய அறிவு என்பன தெரிந்திருக்க வேண்டும். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை. MANAGER, EXECUTIVE வெற்றிடங்கள் உண்டு. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். அடிப்படை சம்பளம் 25,000.

தொடர்புகளுக்கு: **0777 15 7070**

## மரண அறிவித்தல்



### திருமதி செல்வரத்தினம் சறோசினியம்மா

காரைநகர் மூக்கம்பிட்டி கோவலத்தை பிறப்பிடமாகவும் சந்தம்புளியடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் சறோசினியம்மா நேற்று (10.07.2021) சனிக்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற சரவணமுத்து மீனாட்சியின் அன்பு மகளும் கணபதிப்பிள்ளை பார்வதிப்பிள்ளையின் மருமகளும் செல்வராணி, செல்வராசா, செல்வமலர், செல்வரூபி (பிரான்ஸ்), செல்வரஞ்சினி, செல்வகுமாரி (கனடா) ஆகியோரின் அன்பு தாயாரும் பூபாலசிங்கம், சிவசுப்பிரமணியம், விநாயகம், ரகுமார், ராதகிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆனந்தராஜ் (மானிப்பாய் இந்து கல்லூரி), திலக்சன் (மானிப்பாய் இந்து கல்லூரி), விசால் அறிவரசன், அஞ்சய் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் இன்று (11.07.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு சந்தம்புளியடி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும் என்பதை உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஏற்று கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### வைரவநாதன் யசோதரன்

விவசாய தொழில்நுட்ப உதவியாளர், விவசாய திணைக்களம், மன்னார் கணபதி அறக்கட்டளையின் மன்னார் மாவட்டம் பொறுப்பாளரும், அமைப்பின் செயற்பாட்டாளரும்.



**தோற்றம்** 15.03.1992 — **மறைவு** 09.07.2021

வியாபாரிமூலை, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரவநாதன் யசோதரன் (09.07.2021) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் வைரவநாதன்-செல்வராணி தம்பதியினரின் பாசமிகு மகனும், பிரகாசினி(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யாழ் மாநகர சபை), நிலானி(உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் தென்மராட்சி), சுஜந்தன் (கணக்காய்வு பரீட்சகர், தேசிய கணக்காய்வு அலுவலகம், திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஸ்ரீசுகந்தன்(அவுஸ்திரேலியா), ஸ்ரீகாந்தன் (வர்த்தகர் சாவகச்சேரி), அபிராமி(ஆசிரியர் யா/அம்பன் அ.மி.த.க பாடசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், துளசிகன், நிஷ்மிகா ஆகியோரின் அன்பு மாமனும் அஷ்வின், கஷ்னி ஆகியோரின் அன்பு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (11.07.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

வியாபாரிமூலை, பருத்தித்துறை.

077 360 4829(சுஜந்தன் அண்ணா), 077 869 1801(ஸ்ரீகாந்தன் அத்தான்)
077 353 5218 (லிங்கேஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# On-line Free Classes

Diploma in English/ Spoken English — Batch - IV
Diploma in ICT
Diploma in Sinhalam
காலம் : 03 மாதங்கள் — சான்றிதழ்

IPS to your future

On-line Education Center, Jaffna.
Email : degreeinfo21@gmail.com
021 424 0229
076 685 2529



## நீர்க்கசிவை தடுப்பதற்கு Water Proofing

புதிதாக கட்டுமானம் நடைபெறும் வீடுகள், கட்டடங்களை நீர்க்கசிவில் இருந்து பாதுகாத்திடுங்கள் 10 வருட உத்தரவாதத்துடன் நீர்கசிவுகளை நிறுத்திதருகின்றோம்.
Finex இன் ஏக விநியோகஸ்தராகிய எங்களிடம் விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.
North and East Engineering
55 Stanly Road, Jaffna.
077 5244 177, 077 232 3000, 021 222 2363


## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



கடந்த 11.06.2021 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் அன்பு தெய்வம்

**விவேகானந்தன் ஜீவராணி**

புன்னகைக்கும் உங்கள்
- முகம் எங்களுக்கு
தினமும் வந்து
- போகிறதம்மா - அது
உண்மையில்லை என்று
- நினைக்கும் பொழுது
நாங்கள் கலங்கித்
- தவிக்கின்றோம் - அம்மா

மலர்வு 01.11.1958 — உதிர்வு 11.06.2021

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பிரிவில் துயருறும்,
மீசாலை கிழக்கு, மீசாலை
குடும்பத்தினர்
077 415 7189


## தேவை

உங்கள் வீட்டுத் தோட்டத்தில் விளைந்த வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம், எலுமிச்சை ஏற்றுமதி செய்வதற்காக தேவை. இரசாயன உரம், கிருமிநாசினி பாவிக்காதவர்கள் தொடர்புகொள்ளவும். உங்களிடம் சிறிய தொகை இருந்தாலும் நேரடியாக வாங்கிக்கொள்வோம்.
இடைத்தரகர் தேவையில்லை.
வட்ஸ்அப் அல்லது கோல் செய்யுங்கள்
075 800 5057

## கொங்கிறீற் கற்கள் விற்பனைக்கு

மிகவும் சிறந்த முறையில் கண்டாவளை மண் கருங்கல்லு சல்லி போட்டு அரியப்பட்ட மிசின் கற்கள் விற்பனைக்குண்டு. தங்கள் வீடுகளுக்கு கொண்டுவந்து தந்து உதவுகின்றோம் தாங்கள் கற்களை பரிசோதித்து பார்த்து வாங்கலாம்
உடன் தொடர்புகளுக்கு: 077 909 6105

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் செட்டித் தெரு வீதியில் வரிமதிப்பு எண் 10 கொண்டதும் விஸ்தீரணம் நில.பர 01 1/2 யும் வீடும் விற்பனைக்கு உண்டு.
076 702 3565


## 45ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் சின்னத்துரை லோகிதன்

தோற்றம் 31 . 12 . 1957 — மறைவு 28 . 05 . 2021

கடந்த 28.05.2021 அன்று இறைபதம் அடைந்த எமது பாலர் பகல்விடுதியும், முன்பள்ளியினதும் நிர்வாகசபை உறுப்பினர் **திரு.லோ.பிரியந்தன்** அவர்களின் தந்தையாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாலர் பகல்விடுதியும், முன்பள்ளியும்
நீர்வேலி.


## பணிநிலை வேண்டுகை

யாழ் நகரில் இயங்கி வரும் மொத்த விற்பனை நிலையத்திற்கு கனரக வாகன சாரதிகள் தேவை (A& D) விரும்புபவர்கள் தங்கள் சுய விபரக் கோவையை எதிர்வரும் 20.07.2021 இற்கு முன்பாக கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல : JF 1027,
C/O உதயன் பணிமனை,
361 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## பணிநிலை வேண்டுகை

யாழ். நகரில் இயங்கி வரும் DSI மொத்த விற்பனை நிலையத்திற்கு விநியோக பையன்கள் (Delivery Boys) தேவை. விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையை எதிர்வரும் 20.07.2021 இற்கு முன்பாக கீழ் காணு முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சுப்ப சூஸ்
154, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## 60ஆவது பிறந்த நாள் வாழ்த்து 11.07.2021




இன்று 11.07.2021 ஞாயிற்றுக்கிழமை
தனது 60ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்ற
**திரு.கார்த்தி ஸ்ரீஸ்கந்தராசா (காந்தன்)**
(பரிசாதகர், சாந்தி நிலையம் - கைதடி)
அவர்களை துர்க்கை அம்மனின் அருள்பெற்று எல்லா வளமும் பெற்று நலமாக வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மனைவி - ஸ்ரீ. தங்கராணி
சகோதரி - இ.இராசாத்தி
டென்மார்க் வாழ் மைத்துனர்கள்


## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?
பால்மா குளிசை - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா? ➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?
குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு
கருமை நிறம் நீங்க வேண்டுமா?
077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


# ஹன்ரருடன் மோதியது மோ. சைக்கிள்

## இரு பெண்கள் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

கரந்தன் ஊரெழு பிரதான வீதியில் மோட்டார் சைக்கிள் ஹன்ரர் என்பன விபத்துக்குள்ளானதில் கர்ப்பிணிப் பெண் உட்பட இரு பெண்கள் காயமடைந்தனர்.

குறித்த பெண்கள் மருத்துவமனைக்குச் சென்று வீடுதிரும்பிய போது கரந்தன் ஊரெழு பிரதான வீதியில் மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் 2 வயதுச் சிறுமியும் ஒரு கர்ப்பிணிப் பெண்ணும் இன்னொரு பெண்ணும் பயணித்துள்ளனர். சிறுமி காயங்கள் இன்றித் தப்பியுள்ளார். மற்றைய இரு பெண்களும் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம)

# இரு நாள்களில் 1,118 ஆசிரியர்களுக்கு தடுப்பூசி

முல்லைத்தீவு, ஜூலை 11

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முல்லைத்தீவு உண்ணாப்பிலவு மருத்துவமனையில் கடந்த வியாழக்கிழமை அன்று ஆரம்பிக்கப்பட்டது.

முல்லை கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை கடந்த வியாழன், வெள்ளி ஆகிய இரண்டு நாள்கள் நடைபெற்றது. இதன்போது ஆயிரத்து 118 ஆசிரியர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை புள்ளிவிவரங்கள் தெரிவித்தன. துணுக்காய் வலயத்துக்கு உட்பட்ட ஆசிரியர்களுக்கும் விரைவில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-19)




## வீடு விற்பனைக்கு

நாவற்குழியில் 1 1/2 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 076 7171 280

## CLEANING BOY தேவை

யாழ் பிரவுண் வீதியில் உள்ள வீடு ஒன்றில் கிளினிங் வேலை செய்வதற்கு Boy ஒருவர் தேவை. சம்பளம் 21000. உணவு தங்குமிடம் வழங்கப்படும். வந்து போக கூடியவர்களும் விண்ணப்பிக்கலாம்.
077 7111 444

## பெண் Cook தேவை

யாழ் பிரவுண் வீதியில் உள்ள வீடு ஒன்றில் சமையல் செய்ய பெண் Cook தேவை. தங்கியிருக்கலாம் அல்லது வந்து போகலாம். சம்பளம் 21000.
தொடர்புகளுக்கு: 077 7111 444


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பெரும்....

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

சேர் ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு கல்லூரி சட்டவரைபுக்கு எதிராக ஜனநாயக வழியில் எதிர்ப்புத் தெரிவிக்க முற்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வன்முறையில் இறங்காமல் ஜனநாயக உரிமைகளை வெளிப்படுத்தக் கூடிய வகையில் குற்றங்கள், குறைகள், நியாயங்களைப் பகிரங்கமாக எடுத்தியம்பக்கூடிய வகையில் மக்கள் ஒன்றாகக்கூடி தங்களுடைய குரலை அரசுக்கு எதிராக எழுப்புவது மறுக்க முடியாத அடிப்படை உரிமை. அந்த அடிப்படை ஜனநாயக உரிமை மறுக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

அவ்விதமான உரிமை மறுக்கப்பட்டால் அது நாட்டினுடைய போக்கு நல்லதல்ல என்பதை எடுத்துக்காட்டும். அது சர்வாதிகாரத்தின் போக்கை வெளிச்சம் போட்டுக்காட்டும். இந்த அராஜகத்தைத்தான் இந்த அரசு செய்து வருகின்றது.

அரசுக்கு எதிராக ஜனநாயக வழியில் எதிர்ப்புத்தெரிவிக்க முற்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப்ஸ்டாலின் உள்ளிட்டவர்கள் கைதுசெய்யப்பட்டதைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது.

இது ஜனநாயக நாடு எனில் மக்கள் சட்டத்துக்கு உட்பட்டு சுதந்திரமாக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கும் உரிமை இருக்கின்றது. அந்த உரிமை மதிக்கப்பட வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்' என்றார். (ம-22)

### கொவிட்...

றது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அனைத்து அரசியல் கைதிகளையும் உடன் விடுதலை செய், கொரோனா திரைமறைவில் எங்களை வதைக்காதே, அனைவருக்கும் தடுப்பூசி வழங்கு, பாதுகாப்பு வழிமுறைகளோடு பாடசாலைகளைத் தொடங்கு, உணவுப் பொருள்கள் எரிபொருளின் விலையை உடனே குறை, விவசாயிகள் மீனவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிக்குத் தீர்வு காண், மற்றும் நிறுத்து நிறுத்து விலை உயர்வை நிறுத்து உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு வந்த யாழ்ப்பாணப் பொலிஸார் போராட்டத்தை நிறைவு செய்யுமாறு வலியுறுத்தியதை அடுத்து போராட்டம் நிறைவடைந்தது. (ப-20,26)

### அரசியல்கைதிகள்...

உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'வன்னி மாவட்டத்தில் பொருளாதார, அரசியல் சமூக பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றை கட்சி ரீதியான பிரிவினைகளைப் பார்த்து செய்தால் மக்களுக்கு நன்மை செய்ய முடியாமல் போகும். தேர்தல் காலத்தில் அரசியல் செய்வது வழக்கமான விடயம். ஆனால், தேர்தலுக்கு அப்பாற்பட்டு ஜனநாயகத்தை நிலைநிறுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் இருக்கின்றேன்.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் நான் எடுத்த முயற்சி காரணமாக 16 கைதிகளை அண்மையில் விடுதலை செய்திருக்கின்றோம். இந்தப் பணி மேலும் தொடரும். எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் மேலும் சில அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்குத் தயாராக இருக்கிறோம். அவர்கள் விடுதலை பெறவேண்டும். அவர்கள் பிழை செய்திருக்கலாம். அவர்கள் கொண்ட நோக்கத்துடன் அவர்கள் செய்தது அரசுக்கோ அல்லது நீதிக்கோ பிழையாக இருக்கலாம். ஆனால், போர் முடிந்து 11 வருடங்களுக்கு பின்னர் பொது மன்னிப்பு கொடுத்து அவர்கள் வாழ வழிவிட வேண்டும் என்பதில் ஆழமான அக்கறை கொண்டவன் நான் -என்றார். (ம-22)

### 'வொய்ஸ் ரியூப்'...

துறையினர் நான்கு மணிநேரம் விசாரணை நடத்தியுள்ளனர்.

சீன நிறுவனமொன்று கொவிட் தடுப்பூசியை இலங்கையில் தயாரிக்க விருப்பது தொடர்பில் இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் அசெலா சம்பத், குறித்த தளத்தில் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பிலேயே புலனாய்வுத் துறையினர் மேற்படி ஆசிரியரிடம் விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் சன்னா ஜெயசுமன இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் அசெலா சம்பத்தின் மேற்படி கருத்துத் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறையினருக்கு வழங்கிய முறைப்பாட்டைத்தொடர்ந்தே அவர்விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ம)

### அன்டிஜென்...

தில் 23 பேருக்குக் கொரோனா உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து அந்தப் பகுதி தற்காலிகமாக முடக்கப்பட்டது.

கடந்த வாரம் பருத்தித்துறைப் பகுதியில் 100 பேருக்கு நடத்தப்பட்ட எழுமாற்றுப் பி.சி.ஆர் சோதனையில் ஒருவர் தொற்றாளராக அடையாளப்படுத்தப்பட்டார். அவர் பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்தவர். இதையடுத்து நேற்று குறித்த பகுதியில் 60 பேருக்கு அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. இந்தப் பரிசோதனையில் 23 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்தே அந்தப் பகுதி தற்காலிகமாக முடக்கப்பட்டதுடன் மேலும் 72 பேரிடம் பி.சி.ஆர். சோதனைக்குரிய மாதிரிகள் பெறப்பட்டுள்ளன. (ம-26,9)

### காலநீடிப்பு..

டுள்ளதால் அது தொடர்பில் மக்களின் மேன்முறையீட்டுக்கு கால நீடிப்பு வழங்கப்படுமா என்ற கேள்விக்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் உரிய பதிலை வழங்கவில்லை.

யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவில் அரசியல் தலையீடு இருப்பதால் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இதனையடுத்து பயனாளிகள் பட்டியலை காட்சிப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது.

கடந்த 6ஆம் திகதியிலிருந்து நாளை 12ஆம் திகதி வரை பிரதேச செயலகங்களில் காட்சிப்படுத்தப்படும் என்றும் இதன்போது மேன்முறையீடு செய்யலாம் எனவும் மாவட்டச் செயலர் அறிவித்திருந்தார். அதற்கு அமைவாக பட்டியல்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கு எதிராக இதுவரை மாவட்டச் செயலரால் நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை.

இந்த நிலையில் பட்டியல் தாமதமாக ஒட்டியமையால் மேன்முறையீட்டுக்கான கால நீடிப்பு வழங்கப்படுமா என்று பயனாளிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். இது தொடர்பில் மாவட்டச் செயலர் க.மகேசனை, 'உதயன்' தொடர்பு கொண்டு கேட்டபோது,

நாங்கள் அனைத்து அறிவுறுத்தல்களும் வழங்கியுள்ளோம். அவர்கள் (பிரதேச செயலர்கள்) அந்த அறிவுறுத்தலின்படி செயற்படுவார்கள். எந்த ஒரு பிரச்சினையும் இல்லை. அதற்கு அவர்கள் பொறுப்பு ஏற்க வேண்டும். கால நீடிப்பு வழங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் கால நீடிப்பு வழங்குவார்கள், என்றார். (இ.5,319)

### மேலும்...

பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் இலகுபடுத்தப்பட்டுள்ளன.

புதியவழிகாட்டல்களின்படி கொரோனா அல்லாத காரணங்களால் இறப்பவர்களுக்கு அடுத்த 24 மணித்தியாலங்களுக்குள் இறுதிச் சடங்கு செய்ய வேண்டும். இறுதிச் சடங்கில் 50 பேர் வரையில் கலந்துகொள்ளலாம்.

திருமண நிகழ்வுகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மண்டபத்தின் ஆசன எண்ணிக்கையில் 25 வீதமானவர்களுடன் அல்லது 150 பேருடன் திருமணத்தை நடத்தலாம். அதே போல் திரையரங்குகள், அருங்காட்சியகங்கள் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், ஆசன எண்ணிக்கையில் 50 வீதமானவர்களையே அனுமதிக்க முடியும் என்றார். (ம)

### விபத்தில்...

ஞன் உயிரிழந்தார். நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

அல்வாய் மத்தியைச் சேர்ந்த வைரவநாதன் யசோதரன் (வயது 29) என்ற இளைஞன் மன்னாரில் இருந்து வீடு திரும்பும் போது நேற்றுமுன்தினம் மாலை விபத்துக்கு உள்ளாகியுள்ளார். பாலியாறு பாலத்தில் மைல்கல்லுடன் மோதி அவர் விபத்துக்குள்ளானார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து அவர் முழங்காவில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட போதிலும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

# நாட்டில் நேற்று கொரோனா 1,548

## 33 பேர் நாடு திரும்பியவர்கள்

கொழும்பு, ஜூலை 11

நாட்டில் நேற்று ஆயிரத்து 548 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது. இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 73 ஆயிரத்து 31ஆக அதிகரித்துள்ளது. நேற்று அடையாளம் காணப்பட்டவர்களில் 1,515 பேர் புத்தாண்டு கொத்தணியைச் சேர்ந்தவர்கள் எனவும், 33 பேர் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்கள் எனவும் அரச தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தொற்றிலிருந்து குணமடைந்து 1,804 பேர் நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 42 ஆயிரத்து 839ஆக உயர்வடைந்துள்ளது. இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்களில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 26 ஆயிரத்து [illegible]ஆக அதிகரித்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-22)

# மேலும் 33 பேர் சாவு
# மொத்தச் சாவு 3,467

கொழும்பு, ஜூலை 11

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 33 பேர் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது. அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 467ஆக உயர்வடைந்துள்ளது. நேற்றுமுன்தினம் இவ்வாறு சாவடைந்த 33 பேரில் 19 ஆண்களும், 14 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அதன்படி 30 வயதுக்கு உட்பட்ட பெண் ஒருவரும், 30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 3 பெண்களும், 2 ஆண்களும் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, 60 வயதுக்கு மேற்பட்ட 10 பெண்களும், 17 ஆண்களும் சாவடைந்துள்ளனர் என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த

# 1,150 பேருக்கு கொவிட் தடுப்பூசி

சாவகச்சேரி, ஜூலை 11

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆயிரத்து 150 பேருக்கு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் கொவிட் 19 தடுப்பூசி ஏற்றப்பட்டது.

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா அலுவலர்கள் ஆகியோருக்கு தடுப்பூசி ஏற்றுவதற்கு சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைக்கமைய கல்வி வலயத்தால் அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து 800 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டனர். இவர்களுடன் பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் கல்விசார் அலுவலர்கள் ஆகியோரும் அரச அலுவலக முன்களப் பணியாளர்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என ஆயிரத்து 150 பேர் தடுப்பூசியை பெற்றுக்கொண்டனர். (ஐ-9)

# மாங்குளம் பஸ் நிலையம் இயங்க புதிய வீதியை அமைக்க யோசனை

முல்லைத்தீவு, ஜூலை 11

முல்லைத்தீவு மாங்குளம் பஸ் நிலையத்தை இயங்க வைப்பதற்கு புதிய வீதி ஒன்றை அமைக்கலாம் என்ற யோசனையை புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் தற்போதைய உறுப்பினருமாகிய செ.பிறேமகாந் முன்வைத்துள்ளார். கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற புதுக்குடியிருப்பு பிரதேச சபை அமர்வின்போதே அவர் இந்த யோசனையை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;



முல்லைத்தீவு மாங்குளம் பஸ் நிலையம் அமைக்கப்பட்டும் இயங்காத நிலையில் காணப்படுகின்றது. அதற்கான காரணம் ரயில் நிலையத்துக்கு அருகிலான வீதி அமைப்பதில் காணப்படுகின்ற தாமதங்களே. ஏ9 வீதியில் இருந்து ரயில் நிலையத்துக்கு அருகால், மாங்குளம்- துணுக்காய் வீதியில் வாகனங்கள் பயணிக்க வேண்டும். குறித்த வழித்தடமான வீதி, 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான பழைய வீதியாகக் காணப்பட்டது. ரயில் நிலையத்தின் விஸ்தரிப்பால் பழைய வீதியில் தற்போது வீதி அமைக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. வீதி அமைப்பதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு நிதி கிடைத்தும் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. இதனால் மாங்குளம் பஸ் நிலையம் இயங்குவதில் தடைகள் காணப்படுகின்றன. எனவே தற்போதுள்ள சந்தையின் நடுப்பகுதியின் ஊடாக புதிய வீதி ஒன்றை அமைப்பதன் மூலம் ஏ9 சாலைக்கும் மாங்குளம் துணுக்காய் வீதிக்கும் இடையில் போக்குவரத்தை உருவாக்க முடியும். மாங்குளம் பஸ் நிலையமும் இயங்க முடியும். இது தொடர்பாக பிரதேச சபையில் குழுவொன்று அமைக்கப்பட்டு, அந்தக் குழு நேரடியாக மாங்குளம் சென்று ஆய்வுசெய்து முடிவுகளை எடுக்கலாம் -என்றார். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது ரி20

# மேற்கிந்தியத் தீவிடம் ஆஸ்திரேலியா சரண்!




ஜமைக்கா, ஜூலை 11

**ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது ரி20 ஆட்டத்தில் வெற்றிபெற்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி.**

ஆஸ்திரேலிய அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஐந்து ஆட்டங்கள் கொண்ட ரி20 தொடரில் விளையாடி வருகின்றது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ரி20 ஆட்டம் நேற்று இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 6 இலக்குகளை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரசல் 51 ஓட்டங்களையும், சிம்மன்ஸ் 27 ஓட்டங்களையும், ஹெட்மயர் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹேசில்வூட் 3 இலக்குகளையும், மிச்செல் மார்ஷ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஸ்ராக் 4 பந்துப்பரிமாற்றங்களை வீசி 40 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார். அவரால் இலக்குகள் எதையும் கைப்பற்ற முடியவில்லை. பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 16 பந்துப்பரிமாற்றங்களில் 127 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது. மிச்செல் மார்ஷ் அதிகபட்சமாக 51 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் மகொய் 4 இலக்கு களையும், வால்ஸ் 3 இலக்குகளையும் வீழ்த்தினர். (ம)



யூரோ கிண்ண இறுதி

# இத்தாலி - இங்கி. இன்றிரவு மோதல்

உரோம், ஜூலை 11

யூரோ கிண்ண தொடரின் இறுதியாட்டம் இன்று இரவு நடைபெறவுள்ளது. இந்த இறுதியாட்டத்தில் இத்தாலி மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதவுள்ளன. இத்தாலி அணி ஸ்பெய்னை வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்த அதேநேரம் இங்கிலாந்து அணி டென்மார்க்கைத் தோற்கடித்து இறுதிக்கு முன்னேறியது. இந்த நிலையில் மேற்படி அணிகள் இரண்டும் இறுதியாட்டத்தில் இன்று நள்ளிரவு மோதுகின்றன. (ம)

**பணியாளர்கள் தேவை**

கிளிநொச்சியில் உள்ள பான்சி கடை (Fancy) ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர்கள் உடன் தேவை.
- முகாமையாளர் (ஆண்/பெண்)
- அழுக்கலை நிபுணர் (பெண்)
- வேலையாட்கள் (பெண்)

தொடர்புகளுக்கு : 077 666 5212

**பணியாளர்கள் தேவை**

கிளிநொச்சியில் உள்ள Hotel ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர்கள் உடன் தேவை.
- வெயிற்றர்.
- சமையலாளர். (இந்தியன் / சைனீஸ்)

தொடர்புகளுக்கு : 077 666 5212

**Individual English Classes**

தனிப்பட்ட வகுப்பில் English படிப்பதால் அவரை தெளிவாக பேச வைக்க முடியும். Grade 7 - Graduates

தொழில் புரிபவர்.

Ganesh BA 077 766 8725 Jaffna.

**IELTS New Batch**

தனிப்பட்டதும், குழு வகுப்புகள் ஆரம்பம்

077 798 9830 Brown Rd, Jaffna

**வேலையாள் தேவை**

மருதனார் மடத்தில் இயங்கும் Phone Shop கடைக்கு ஆண்/ பெண் இருபாலாரும் தேவை.

தொடர்புகளுக்கு 074 156 7469

**ENGLISH ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புக்கள்**

அனுபவம் மிக்க ஆசிரியரால் உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்

யாழ்ப்பாணம் 077 658 9443

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**

மிகக் குறைந்த கட்டணத்தில் பொதிகளை அனுப்பிட திருமுருகன் கொம்நெற்.

DHL 0777 554 528
321, K.K.S Road, Jaffna

**காணி விற்பனைக்கு**

முல்லைத்தீவு செல்வபுரத்தில் நல்ல தண்ணீர், சுத்தமான காற்றோட்ட வசதி கொண்ட 20 பரப்பு கடற்கரைக் காணி விற்பனைக்குண்டு. Commercial / Residential / Holiday Bungalowற்கு உகந்தது.

தொடர்புக்கு : 077 053 8021

**வாகனம் தேவை**

வாடகைக்கு (Sales)

பட்டா 12 1/2, 14 அடி ரக வாகனம்
Full அலுமினிய Body, Side கதவு தேவை மாதாந்த அடிப்படையில் வாடகைக்குத் தேவை.

வாங்குவதற்கு (விலைக்குத் தேவை)

IZUZU ரக வாகனம் 12, 14 அடி தேவை.
(Full அலுமினிய Body, Side கதவு தேவை.)

தொடர்பு 077 009 0189

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்**

தோற்றம் 24 . 05 . 1955



மறைவு 12 . 06 . 2021

**அமரர் மாணிக்கம் சிவானந்தசிவம் (சண்முகம்)**

கடந்த 12.06.2021 சனிக்கிழமை சிவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் மாணிக்கம் சிவானந்தசிவம் (சண்முகம்) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (11.07.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலையில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். நாளை (12.07.2021) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் சபிண்டீகரண கிரியையும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையின் பின் மதியபோசன நிகழ்வும் நடைபெறும்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக அனைவரையும் அழைக்க முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்

"மோகினி வாசா"
[illegible]
077 181 7819

குடும்பத்தினர்

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதி, 1ஆம் ஒழுங்கையில் 3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
யாழ் நகரிலிருந்து 1 1/2km தூரம்.
(பரப்பின் விலை 5 லட்சம் ரூபா)

தொடர்பு : 076 221 2037, 076 734 1023, 077 064 2661

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

யாழ் நகரில் வீட்டில் தங்கியிருந்து குழந்தையை பராமரிக்க பணிப்பெண் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

077317 4416, 077 501 3103

**காணி தேவை**

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி அல்லது Main Street ஆகிய பகுதிகளில் 2 தொடக்கம் 3 பரப்பு காணி தேவை.

தொடர்பு 077 074 6553

**வகுப்புக்கள்**

தரம் 6 தொடக்கம் 11 வரையான வகுப்புக்களுக்கு கணித விஞ்ஞான வகுப்புக்கள் தனியாகவும், குழுவாகவும் அல்லது Zoom ஊடாகவும் கற்பிக்கப்படும்.

தொடர்பு 077 074 7906

**வகுப்புக்கள்**

A/L மாணவர்களுக்கான பௌதிகவியல் மற்றும் இரசாயனவியல் பாடங்கள் தனியாகவும், குழுவாகவும் அல்லது Zoom ஊடாகவும் கற்பிக்கப்படும்.

076 686 7099/ 076 498 9961

**வேலையாட்கள் தேவை (ஆண்/பெண்)**

- கொக்குவிலில் இயங்கும் சைவ உணவகத்திற்கு உணவு பரிமாறுனர். (ஆண் / பெண்)
- சமையல் உதவியாளர். (ஆண்)
- சமையலாளர். (அப்பம் / இந்தியன் குசினி)

தொடர்புக்கு
076 000 1695, 077 844 3590

**விற்பனைக்கு**

- ஒரு தொகுதி தீராந்திகள்
- பனை மரங்கள்
- ஓடுகள்
- தூண்கள்
- இடிபாடுகள் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 071 121 3555

**பௌதிகவியல்**

2021, 2022, 2023 A/L
Revision & Past paper Classes
தனிப்பட்ட, குழு Zoom வகுப்புக்கள்
ஆ.நித்தியானந்தன் (B.Sc, Dip in Ed)
ஓய்வு நிலை ஆசிரியர் யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி

தொடர்பு 076 799 9005

**கல்வி நிறுவனத்திற்கு வீடு வாடகைக்கு தேவை**

தேவைப்படும் இடங்கள்
- கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
- A9 வீதி, சாவகச்சேரி
- கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பளை
- பிரதான வீதி, சங்கானை ஆகிய இடங்கள்

தொடர்பு: 077 337 4261

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கி கொண்டிருக்கும் பாமசி மற்றும் சிறு பிள்ளைகளுக்கான விளையாட்டுப் பொருள்கள் விற்பனைசெய்யும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.
பாமசியில் பணிபுரிவதற்கு முன் அனுபவம் உள்ளவர்களும் பழக விருப்பமுடையவர்களும் தொடர்புகொள்ளலாம்

தொடர்பு: 021 221 3323
076 264 8766

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடி கொளுத்தி இடைவெளியின்றி இனிப்பூட்டி
முடிவில்லாமல் கொண்டாடி மகிழ – பிடிப்போர்
வாளாதிருந்துவிட்டு பிரளயமாகும் பிரச்சினைகளை
தாளாது குரல் கொடுப்போரை தனிமையில் தள்ளுதலே நீதியாம்!

- ஒட்டுக்குழு சுவாமிகள்

பக்கங்கள்: 16

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2052 ஆனி: 27 ஞாயிற்றுக்கிழமை (11.07.2021) சிகரம் : 55



# இரவில் சரிந்த சாம்ராஜ்ஜியம்!

ஆர்.பிரகாஷ்

**2021** ஜுலை 7.
ஹெய்ட்டி, தலைநகர் போர்ட் அவு பிரின்ஸ்.

அன்றைய இரவே தன் கடைசி இரவென்பதை ஹெய்ட்டி ஜனாதிபதி ஜுவனல் மொய்ஸ் அறிந்திருக்கவில்லை. சில தனிப்பட்ட காரணத்துக்காக தனது வெள்ளை நிற 'நிஸான்' வாகனத்தில் ஏறி, வீட்டின் முன்புறத்துக்கு வந்த மொய்ஸுக்கு பேரதிர்ச்சி. வாகனத்தை வழிமறித்தபடி ஆயுததாரிகள்.

மிகப்பலமான பாதுகாப்பை தாண்டி அவர்கள் எப்படி அங்கே வந்தார்கள்? என்று மொய்ஸ் யோசிப்பதற்கிடையில்,

"ஒப்பிரேசன் டி. ஏ. இ. வெற்றி!!"
என்ற கூச்சல்.
"பட்..! பட்!..பட்..!!"

சரமாரியாகத் தீர்க்கப்பட்டன துப்பாக்கி வேட்டுக்கள். வாகனத்தை துளைத்தபடி 12 தோட்டாக்கள் மொய்ஸின் உடலுக்குள் ஊடுருவிக்கொள்ள, குருதி மழையில் அப்படியே உயிரற்றுச் சரிந்தார் ஹெய்ட்டியின் ஜனாதிபதி மொய்ஸ். அவரது மனைவியும் படுகாயமடைந்திருக்க, தாக்குதலாளிகள் தப்பிக்க முயன்றனர். ஆனால் அதற்கிடையில் பொலிஸார் அவர்களைச் சுற்றிவளைக்க பெரும் மோதல் மூண்டது. நீண்ட நேர மோதல், தேடுதல் என்பவற்றின் பின்னர் அந்தக் கொலைகாரக் கும்பலை கூண்டோடு பிடித்துவிட்டதாக ஹெய்ட்டி அறிவித்துள்ளது.

ஏன் மொய்ஸ் கொல்லப்பட்டார்?, இந்தக் கொலையின் பின்னணி என்ன?, இது அரசியல் பழிவாங்கலா? என்று பல்வேறுபட்ட கேள்விகளை மொய்ஸின் படுகொலை ஏற்படுத்தியிருக்கின்றது.

உலகில் அரசியல் தளம்பல் உள்ள நாடுகளில் ஹெய்ட்டியும் ஒன்று. அங்குள்ள பொருளாதாரத்தைப் போலவே அரசியலிலும் நிலையற்ற தன்மை நீண்ட ஆண்டுகளாகவே இருக்கின்றது. கடந்த ஏப்ரலில் மொய்ஸின் பதவிக்காலம் நிறைவடைந்தது. உண்மையில் ஜனவரி அல்லது பெப்ரவரியில் ஹெய்ட்டி தேர்தலைச் சந்தித்திருக்க வேண்டும். ஆனால், "அடுத்த ஓராண்டுக்கு ஜனாதிபதியாகத் தொடரப்போகின்றேன், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பப் போகின்றேன்" என்று அறிவித்த மொய்ஸ் ஆட்சியை வலிந்து தக்கவைத்தார். இதற்கு எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கின. அத்துடன் ஆயுதக் குழுக்களின் கலாசாரத்துக்கும் ஹெய்ட்டியில் பஞ்சமில்லை. இதனால் மொய்ஸின் படுகொலைக்கு அவரின் அரசியல் எதிரிகளும் அவர்களுக்கும் ஆயுதக் குழுக்களுக்கும் இடையில் இருந்த தொடர்பும் காரணமாக இருக்கலாமா? என்பதுதான் இந்த விடயத்தில் எழுப்பப்படும் முதலாவதும் பெரியதுமான கேள்வி.

## வெளிநாட்டுக் கூலிப்படை

மொய்ஸைக் கொன்றவர்கள் என்ற குற்றச்சாட்டில் சுமார் 30 பேர் கொண்ட குழுவினர் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் 17 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட 17 பேரில் 15 பேர் கொலம்பியர்கள். இருவர் ஹெய்ட்டி அமெரிக்கர்கள். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஊடகங்கள் முன்னிலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளனர். கைகள் கட்டப்பட்டு நிலத்தில் அமர வைக்கப்பட்டுள்ள அவர்களின் ஒளிப்படங்கள் தற்போது சர்வதேச ஊடகங்களால் உலகின் மூலைமுடுக்கெங்கும் கொண்டு சேர்க்கப்பட்டுள்ளன.

கேள்வி என்னவென்றால், மொய்ஸ் கொல்லப்பட்ட 24 மணிநேரத்தில் அவரின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என 30 பேர் கொண்ட பட்டியலை எவ்வாறு ஹெய்ட்டி பொலிஸாரால் வெளியிட முடிந்தது. எனின், இந்த 30 பேரும் ஹெய்ட்டிப் படையினரால் ஏற்கனவே கண்காணிக்கப்பட்டவர்களா? அல்லது தயார்ப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்தவர்களா?. ஹெய்ட்டியின் புலனாய்வுப் பிரிவும், இராணுவமும் அமெரிக்கா, இஸ்ரேல், ஈரான் போன்று அவ்வளவு பலமானது அல்ல என்பதை இங்கே நினைவில் கொள்க.

அதுபோக ஒரு ஜனாதிபதியின் கொலையுடன் தொடர்புடைய கும்பலை கைதுசெய்த சில மணிநேரத்துக்குள் எவ்வாறு இவ்வளவு சாதாரணமாக ஊடகங்கள் முன்னால் கொண்டுவர ஹெய்ட்டிப் படைகளால் முடிந்தது என்ற கேள்வியும் இங்கே எழுவது தவிர்க்க முடியாததாகின்றது. இவ்வாறானதொரு கும்பலின் வலைப்பின்னல் நிச்சயம் பாரதூரமாக இருக்கும். அப்படியெனின் சில திரைமறை நகர்வுகள்தானே 'கூண்டோடு அந்தக் கும்பலை' கைதுசெய்யவோ அல்லது கண்டுபிடிக்கவோ உதவும்.



## ஜனாதிபதி இல்லத்தில் ஏன் தங்கவில்லை?

ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டின் ஜனாதிபதி வசிக்கும் இல்லம் உச்சக்கட்டப் பாதுகாப்பு வளையத்துக்குள்தான் வைக்கப்பட்டிருக்கும். ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பிய நாடுகள் என்று இதில் விதிவிலக்கல்ல. இன்னும் ஆச்சரியத்துக்குரிய விடயம் என்னவென்றால் ஹெய்ட்டி ஜனாதிபதியின் இல்லம் இயற்கையாகவே பாதுகாப்புமிக்க உலகில் உள்ள சிறந்த ஜனாதிபதி இல்லங்களில் ஒன்று. கிட்டத்தட்ட வெள்ளை மாளிகை, எலிசே மாளிகைகளுக்கு இணையான பாதுகாப்பு ஹெய்ட்டி ஜனாதிபதி மாளிகைக்கும் இருக்கின்றது. 'மலைக்கோட்டை' என்று அழைக்கப்படும் அந்த இல்லம் இயல்பாகவே மலைகள் சூழ்ந்த பகுதிக்குள் உச்சப் பாதுகாப்புக்குள் அமைந்துள்ளது. ஆனால், இதையெல்லாம் விட்டுவிட்டு ஏன் தனது தனிப்பட்ட இல்லத்தில் மொய்ஸ் தங்கினார் என்ற கேள்வி எழுகின்றது. 'அமெரிக்க போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் என்று அந்தக் குழுவினர் தம்மை அடையாளப்படுத்தித்தான் ஜனாதிபதி இருந்த மாளிகைக்குள் நுழைந்துள்ளனர்' என்று முதல் கட்ட விசாரணைகள் தெரிவிக்கின்றன. அமெரிக்க போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் என்று அந்தக் குழுவினர் தம்மை அடையாளப்படுத்தியபோது அவர்கள் ஜனாதிபதி இருந்த மாளிகைக்குள் செல்வதற்கு அனுமதித்தது யார்? என்ற கேள்விகள் இயல்பாக எழுகின்றன.

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வைரஸ் தொற்றுக்குள்ளும் ஓயாத வாள்கள்?

○ நிலாந்தன்

அண்மையில் பிரபல ஈழத்து இசையமைப்பாளர் ஒருவரோடு கதைத்துக் கொண்டிருந்தேன். "அண்மையில் நீங்கள் இசையமைத்த ஒரு பாடலைக் கேட்டேன். நீங்கள் முன்பு இசையமைத்த பாடல்களின் தரத்துக்கு அது இல்லை. ஏன் இப்பொழுது உன்னதமான பாடல்களை எங்களால் உருவாக்க முடியவில்லை? என்று கேட்டேன்.

1980 களில், 90 களில் நாடகங்களுக்கும் அரசியல் தேவைகளுக்கும் பாடல்களை உருவாக்கிய பலரும் இசையமைப்பாளர்களை உறங்கவிடுவதில்லை. அவர்கள் உருவாக்கித்தரும் மெட்டுக்களை எடுத்த எடுப்பில் ஏற்றுக்கொள்வதுமில்லை. இதுபோதாது, இதுபோதாதுஇன்னும் வேண்டும், இன்னும் வேண்டும்! என்று கேட்டு தொடர்ச்சியாக நச்சரித்து ஒரு பாடல் அதன் உன்னதமான – உச்சத்தை – அடையும் வரையிலும் இசையமைப்பாளரை ஓய்ந்திருக்க விடமாட்டார்கள்.

இப்படித்தான் அந்தக் காலத்தில் உன்னதமான பாடல்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் இப்பொழுது அப்படி இல்லையே என்று கேட்டேன்.

அதற்கு அவர் சொன்னார் "நீங்கள் சொன்னது போல போதாது போதாது என்று கேட்பவர்கள் இப்பொழுது குறைவு. இப்பொழுது என்னிடம் இசையமைக்க வரும் பலரும் நான் எதை இசையமைத்துக் கொடுக்கிறேனோ அதைப் பெற்றுக்கொண்டு போகிறார்கள். நானும் வெற்றிலைச் செலவுக்கு இசையமைத்துக்கொண்டிருக்கிறேன். உன்னதமான பாடல்களைக் கேட்டு வருபவர்கள் குறைவு "என்று.

இந்த உரையாடலின் போக்கில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த வாள்வெட்டுச் சம்பவம் பற்றியும் கதை வந்தது. கோண்டாவில் செல்வபுரம் பகுதியில் உள்ள பாடல்களை உருவாக்கும் ஒரு ஸ்ரூடியோ தாக்கப்பட்டுள்ளது. வாள்களை உருவிய படி தாங்கள் செய்வது ஒரு சாகசச் செயல் என்று கருதி ஒரு சிறுபகுதி இளையோர் தங்களுக்கென்று பாடல்களை உருவாக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய சாகச உணர்வுகளை நல்வழிப்படுத்தி தலைமை தாங்க எங்களுடைய அரசியல்வாதிகளால் முடியவில்லை என்று சுட்டிக்காட்டிய போது அவர் சொன்னார் நீங்கள் சொன்னது போல போதாது போதாது என்று கூறி உன்னதமான பாடல் களைக் கேட்கவும் ஆட்கள் இல்லை. இந்த இளைஞர்களின் சாகச உணர்வுக்கு தலைமை தாங்கவும் ஆள்கள் இல்லை என்று.

அண்மையில் யாழ்ப்பாணம்,கோண்டாவில் ,செல்வபுரம் பகுதியில் இரண்டு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட ஒரு மோதலில் ஒருவருடைய கை துண்டாடப்பட்டது. ஒரு குழுவுக்கு ஆதரவாக பாடலை உருவாக்கி யூடியூப்பில் பதிவேற்றம் செய்த ஒரு ஸ்ரூடியோவே தாக்குதலின் இலக்கு என்று கூறப்படுகிறது. கடந்த 12 ஆண்டுகளில் பெருமளவுக்கு யாழ்ப்பாணத்திலும் சிறிதளவுக்கு யாழ்ப்பாணத்துக்கு வெளியிலும் நடந்த இது போன்ற தாக்குதல்களில் இதுவரையிலும் ஒருவர் மட்டுமே கொல்லப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பெரும்பாலான தாக்குதல்களின் போது காயங்களே ஏற்பட்டுள்ளன. ஆனால் சொத்துக்களுக்கு அதிக சேதம் ஏற்பட்டிருக்கிறது. எனவே தாக்குதலாளிகளின் நோக்கம் கொலை அல்ல எதிராளியை மிரட்டுவதுதான் என்று தெரிகிறது.

கடந்த ஒன்றரை ஆண்டுகளில் ஒரு பெரும் தொற்றுநோய்க் காலத்திலும் இந்த வாள்வெட்டுச் சம்பவங்கள் ஓயவில்லை. குறிப்பாக அண்மையில் சமூக முடக்கம் நீக்கப்பட்ட பின்னர் மட்டும் சுமார் பத்து சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன எனக் கூறப்படுகிறது. கோண்டாவில் சம்பவத்தின் பின் பொலிஸார் கைப்பற்றிய ஆயுதங்களில் சில தமிழ் பக்திப் படங்களில் வரும் கடவுளர்களும் அசுரர்களும் பயன்படுத்தும் புராதன காலத்து ஆயுதங்களை ஒத்தவை. நவீன மோட்டார் சைக்கிள்களின் 'டிஷ்' பிரேக்கை எடுத்து அதிலிருந்து அவை வார்க்கப்படுவதாக ஊடக நண்பர்கள் கூறுகிறார்கள். மேலும் பொலிஸார் தரும் தகவல்களின்படி கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் முப்பது வயதுக்குட்பட்டவர்கள். தாங்கள் செய்வது ஒரு குற்றச் செயல் என்பதை உணராமல் அதை ஒரு சாகசச்செயலாகக் கருதி அதற்கென்று பாடலையும் உருவாக்குகிறார்கள். ஆயின் இதை எப்படி விளங்கிக் கொள்வது? தாங்கள் செய்வது குற்றமா சாகசமா என்பது அவர்களுக்கு விளங்கவில்லை. அவர்களுக்கு யார் அதை விளங்கபடுத்துவது ? நிச்ச யமாக அவர்களுடைய பெற்றோரால் அது முடியாது. ஏனென்றால் அவர்கள் செய்வதை தடுக்கும் சக்தி தாய் ,தகப்பனுக்கு இருந்திருந்தால் அவர்கள் இப்படி வாள்களை ஏந்திக்கொண்டு வீதிக்கு வந்திருக்கமாட்டார்கள். அவர்களை கட்டுப்படுத்தும் சக்தி அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கோ அல்லது அவர்களுக்கு போதிக்கும் மதகுருக்களுக்கோ கிடையாது. அல்லது அவர்கள் பிறந்து வளர்ந்த கிராமங்களில் கருத்தை உருவாக்கவல்ல சமூகத்தலைமைகள் அல்லது உள்ளூர் தலைமைகளாலும் அவர்களை கட்டுப்படுத்த முடியவில்லை.

ஆசிரியர்கள் ,பெற்றோர், மதகுருக்கள் ,உள்ளூர்த் தலைவர்கள் போன்றவர்களால் கட்டுப்படுத்த முடியாத ஒரு வளர்ச்சிக்கு அவர்கள் போய்விட்டார்கள். அது ஒரு விகார வளர்ச்சி.மேல் சொன்ன யாருடைய செல்வாக்கின் கீழும் அவர்கள் இல்லை என்று தெரிகிறது. அப்படியென்றால் அவர்களை சட்டத்தால் மட்டும் கையாளமுடியுமா? இல்லை. கடந்த 12 ஆண்டுகளாக சட்டத்தால் அவர்களை பொருத்தமான விதங்களில் கையாளவோ அடக்கவோ முடியவில்லை என்பதைத்தான் பார்க்கிறோம்.இந்தக்குற்றச்செயல்களின் பின்னணியில் அரசியல் நோக்கங்களைக் கொண்ட சக்திகள் இயங்குவதாக பொதுவாக ஒரு சந்தேகம் யாழ்ப்பாணத்தில் நிலவுகிறது. ஆயுதமோதல்களுக்கு பின்னரான ஒரு சமூகத்தில் இளையவர்களை இலட்சியவாதத்தின் பக்கம் போகவிடாது தடுத்து திசைதிருப்பும் நோக்கத்தோடு இப்படிப்பட்ட குழுக்கள் ஊக்குவிக்கப்படுகின்றன அல்லது கண்டும் காணாமல் விடப்படு கின்றன என்று ஒரு பலமான சந்தேகம் யாழ்ப்பாணத்தில் உண்டு. போதைப் பொருள் பாவனையும் அப்படித்தான் பார்க்கப்படுகிறது.இந்தக் குழுக்களைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸ் போதிய அளவுக்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும் ஒரு குற்றச்சாட்டு உண்டு. எனினும் கோண்டாவில் சம்பவத்தை தொடர்ந்து பொலிஸ் அரச படைகளும் இணைந்து துரிதமாக நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிகிறது. ஊகங்கள், வியாக்கியானங்கள் எப்படியுமிருக்கலாம். ஆனால் எல்லாவிதமான வியாக்கியானங்களுக்கும் அப்பால் இது தமிழ்ச் சமூகத்தின் பாரதூரமான வீழ்ச்சியை காட்டுகிறது. கடந்த வாரம் யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் அல்லது சமூக ஊடகங்களில் அதிகம் துருத்திக் கொண்டு தெரிந்த செய்திகள் இரண்டு. ஒரு செய்தி மேற்சொன்ன வாள்வெட்டுச் செய்தி. இரண்டாவது செய்தி, அந்த சம்பவத்தில் வெட்டப்பட்ட கையை மறுபடியும் சேர்த்து தைத்த ஒரு மருத்துவ சாதனை பற்றிய செய்தி. இந்த இரண்டும் ஒரே சமூகத்தில்தான் இடம்பெற்றன. ஒருபுறம் வாளேந்திய இளைஞர்கள். இன்னொருபுறம் வெட்டிய கையை சேர்த்துத் தைத்த மருத்துவர்கள். ஒன்று குற்றச்செயல். மற்றது நற்செயல். இவை இரண்டினதும் சேர்க்கைதான் இன்றைய யாழ்ப்பாணத்தின் குறுக்கு வெட்டு முகத்தோற்றம்.

தன்னை ஒரு பண்பாட்டு தலைநகரம் என்று கூறிக் கொள்ளும் ஒரு குடாநாட்டின் அறிவு, விழுமியம், பண்பாட்டுச்செழிப்பு, தலைமைத்துவம் போன்ற எல்லாவற்றின் மீதும் கேள்விகளை எழுப்பும் ஒரு அகமுரண்பாடு இது. ஏனெனில் மேற்படி இளையோர் அவற்றை குற்றச்செயல்களாக கருதிச் செய்யவில்லை. அவர்கள் அதை இப்பொழுதும் சாகச உணர்வுடன்தான் முன்னெடுக்கிறார்கள். அவர்களிடம் இருக்கும் அந்தசாகச உணர்வை நெறிப்படுத்தி அதனை இலட்சியங்களை நோக்கி திருப்ப, சமூகத்தில் யாருமே இல்லையா ?

சிலமாதங்களுக்கு முன்பு ஒரு பெரும் தொற்றுநோய் சூழலிலும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணியில் ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் திரண்டார்கள். கறுப்பு துணியில் 'P2P' என்று பொறிக்கப்பட்ட பட்டியைக் கட்டிக்கொண்டு சிவப்பு மஞ்சள் கொடிகளை ஏந்திய படி மோட்டார் சைக்கிளில் ஊர்வலமாக வந்தவர்கள் ஒரு தொகுதி இளையவர்கள்தான். அந்த ஊர்வலங்களை பார்த்தும் ஒரு செயற்பாட்டாளர் கேட்டார். இதிலும் ஒரு சாகச உணர்வு தெரிகிறது. இந்த சாகச உணர்வை அரசியல் ஆக்க சக்தியாக மாற்ற வேண்டுமென்று. இதே விளக்கம் வாளேந்திந்திய இளைஞர்களுக்கும் பொருந்தும். அதை நாங்கள் குற்றமாகப் பார்க்கப் போகிறோமா அல்லது வழிதவறிய சாகச உணர்வாக பார்க்கப் போகிறோமா?.

அவர்களுக்கு தலைமை தேவையாக இருக்கிறது. அவர்களை அரவணைத்து அவர்களுடைய இளம் இரத்தத்தின் வேகத்துக்கு ஈடுகொடுத்து தலைமை தாங்கி அவர்களை இலட்சியப் பாங்கான வழிகளில் வழிநடத்த தலைவர்கள் இல்லை என்பதே இங்குள்ள பிரச்சினை.

உண்மையிலேயே வாளேந்திய இளைஞர்களின் தோற்றம் என்பது தலைமைத்துவ வெற்றிடத்தில் இருந்து தான்வருகிறது. தமிழ் மக்கள் மத்தியில் பொருத்தமான தலைமைகள் இல்லாத ஒரு வெற்றிடத்தில் தான் ஒரு சிறுதொகுதி இளையோர் இவ்வாறு வழிதவறிப் போகிறார்கள். கடந்த 12 ஆண்டுகளாக இவ்வாறு வழிதவறிய இளையோருக்கு தலைமை தாங்கத் தவறியதற்கு சமூகத்தின் எல்லாத்தரப்புக்களும் பொறுப்பேற்க வேண்டும். இந்த இளையோர் எங்களுக்குப் 'புறத்தியானவர்கள்' அல்ல. அவர்கள் வேற்றுகிரகத்திலிருந்து வேற்றுநாட்டிலிருந்து வந்தவர்கள் அல்ல. அவர்கள் எங்களுடைய பிள்ளைகள். எங்களுடைய வீடுகளில், எங்களுடைய பள்ளிக்கூடங்களில், எங்களுடைய சனசமூக நிலையங்களில், எங்களுடைய விளையாட்டு மைதானங்களில், எங்களுடைய சந்தைகளில், எங்களுடைய ஆலயங்களில், எங்களுக்கு மத்தியில் எங்களால் வளர்க்கப்பட்டவர்கள்தான். அவர்கள் இன்றைக்கு வாள் ஏந்துகிறார்கள் என்று சொன்னால் அதற்கு நாங்கள் எல்லோருமே பொறுப்புதான். யாரோ அவர்களுக்கு வாளைக் கொடுக்கிறார்கள், கஞ்சாவைக் கொடுக்கிறார்கள் என்று சூழ்ச்சிக் கோட்பாடுகளை உருவாக்கிக்கொண்டிருப்பதற்கு

(14ஆம் பக்கம் பார்க்க)



**கடந்த ஒன்றரை ஆண்டுகளில் ஒரு பெரும் தொற்று நோய்க் காலத்திலும் இந்த வாள்வெட்டுச் சம்பவங்கள் ஓயவில்லை. குறிப்பாக அண்மையில் சமூக முடக்கம் நீக்கப்பட்ட பின்னர் மட்டும் சுமார் பத்து சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன எனக் கூறப்படுகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீனாவை எதிர்கொள்ளல்

அ.நிக்ஸன்

இந்தியா, சிங்கப்பூர் ஆகிய இரு நாடுகளும் செய்துகொண்ட 'சீக்கா' எனப்படும் விரிவான பொருளியல் ஒத்துழைப்பு உடன்பாடு (Comprehensive. Economic Cooperation Agreement = CECA) தொடர்பாகக் கடந்த செவ்வாய்க் கிழமை சிங்கப்பூர் நாடாளுமன்றத்தில் சூடான விவாதம் ஒன்று இடம் பெற்றது. இதன்போது அதிகளவு இந்தியர்கள் பிரதான வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதோடு, எந்தவிதமான இடையூறுகளுமின்றி சிங்கப்பூருக்கு வந்து செல்கின்றனர் எனவும் குற்றம் சுமத்தப்பட்டது.

ஆனால் ஆளும் கட்சி அந்தக் குற்றச்சாட்டை மறுத்தது. இந்திய நிபுணர்கள் எந்த நிபந்தனையும் இன்றி சிங்கப்பூருக்கு வர அனுமதி வழங்கவில்லை என்று சுகாதார அமைச்சர் ஓங் யி காங் நாடாளுமன்றத்தில் கூறிச் சமாதானப்படுத்தினார்.

இந்தியர்களுக்கு எதிரான சிங்கப்பூர் மக்களின் எதிர்ப்புகளை ஆளும் சிங்கப்பூர் அரசாங்கம் சமாளித்து 'சீக்கா' உடன்படிக்கையைத் தொடர்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. தமது தொழில்வாய்ப்புகளும் தமது நிபுணத்துவ அறிவும் புறக்கணிக்கப்படுகிறது என சிங்கப்பூர் பிரஜைகள் உணர்ந்திருக்கின்றனர். இதனால் தமது தொழில் உரிமை மறுக்கப்படுவதாகவே சிங்கப்பூர் மக்கள் தமது எதிர்ப்பைக் காண்பித்திருக்கின்றனரே தவிரா அவர்களுக்கு இந்தியாவின் தொழில்சார் அறிவைப் பெறுவதில் பிரச்சினையில்லை.

ஆனால் ஆதிக்க நோக்குடனும் புவிசார் அரசியல் போட்டியோடும் தமது மக்களுக்குரிய நிபுணத்துவ அடிப்படையிலான தொழில் முயற்சிகள் புறக்கணிக்கப்படக்கூடாதென்ற நோக்கிலும் சிங்கப்பூர் அரசாங்கம் தமது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்யுமளவுக்குப் பக்குவமான மாற்று ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.



ஆகவே வல்லரசு நாடொன்றுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை ரத்துச் செய்யாமலும், தமது மக்கள் பாதிக்கப்படாமலும் அதேவேளை வல்லரசு நாட்டுப் பிரஜைகளின் நிபுணத்துவத்தைத் தமது நாட்டுக்குப் பெற்றுக்கொள்ளுகின்ற உத்திகளையும் சிங்கப்பூர் கையாண்டு வருகின்றது.

இலங்கையும் 2016 ஆம் ஆண்டு இந்தியாவுடன் இது போன்றதொரு உடன்படிக்கையை கைச்சாத்திட முற்பட்டு அது தோல்வியில் முடிவடைந்தது. 'எட்கா' எனப்படும் பொருளாதார மற்றும் தகவல் தொழில்நுட்பங்களைப் பரிமாற்றிக் கொள்வதங்கான கூட்டு உடன்படிக்கையைச் (Economic and Technology Cooperative Agreement ETCA) செய்ய முற்பட்டபோது, எதிர்க்கட்சிகள் எதிர்த்தன. மகிந்த ராஜபக்சவை மையப்படுத்தி அப்போது எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஜே.வி.பி மற்றும் பௌத்தகுருமார் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியதால் அந்த உடன்படிக்கை கைவிடப்பட்டது. 'எட்கா' உடன்படிக்கையை எதிர்க்கட்சிகளும் பௌத்த குருமாரும் எதிர்த்ததை சிங்கள ,ஆங்கில ஊடகங்கள்கூட அப்போது ஆதரித்தன. 2005 ஆம் ஆண்டு சிங்கப்பூர் இந்தியாவுடன் செய்துகொண்ட 'சீக்கா' உடன்படிக்கையைப் பயன்படுத்தி சிங்கப்பூர் தனக்குத் தேவையான தகவல் தொழில்நுட்ப அறிவுகள் மற்றும் பொருளாதார நிபுணத்துவ செயற்பாட்டுப் பொறிமுறைகளை எவ்வாறு பெற்றுக்கொண்டு வருகின்றதோ, அதே போன்றதொரு அணுகுமுறையை இந்தியாவுடன் இணைந்து இலங்கையும் பெறவேண்டுமென்ற சிந்தனை சிங்கள, ஆங்கில ஊடகங்களுக்கு இருக்கவில்லை.

ஆனால் சீனாவின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை சிங்கள, ஆங்கில ஊடகங்கள் மிகப் பெரிய குற்றமாக விமர்சிப்பதில்லை. சிங்கள எதிர்க்கட்சிகள்கூட சீனாவின் பொருளாதாரத் திட்டங்களை வரவேற்கின்றன. ஆனால் இலங்கையின் இறைமை பிரிபடக்கூடாது அல்லது இறைமையில் சீனா கைவைக்கக் கூடாதென்ற உணர்வு உண்டு. ஆகவே ஒரு அரசுக்கான அல்லது இன்னுமொரு வல்லரசுக்கான எதிர்ப்பை உள்ளூர் மக்கள் எந்த அடிப்படையில் தெரிவிக்கலாம்? எப்படி எதிர்ப்பை வெளியிடலாம்? என்ற விதிகள் எதுவும் இல்லை.

ஆனால் ஏன் எதிர்க்கிறோம் என்பதற்கான உணர்வுகளை புரியும்படி செய்வதுதான் அரசியல் கட்சிகளின் வேலை. அதைத்தான் சிங்களக் கட்சிகள் செய்கின்றன.

சிங்கப்பூர் மக்கள் இந்தியாவுடனான 'சீக்கா' உடன்படிக்கையை எதிர்ப்பது போன்று காண்பித்து அதனை ரத்துச் செய்யாமல் அந்த உடன்படிக்கையின் மூலமான பலாபலன்களை பெறுகிறார்கள். அதனால் அந்த நாடு வளர்ச்சியடைகிறது. ஆனால் இந்தியாவுடனான இலங்கையின் எதிர்ப்பு அப்படியானதல்ல. கலாசார நோக்கில் இந்தியா தமிழர்களுக்கான நாடு என்றொரு கற்பனை கலந்த அச்சம் சிங்கள மக்களிடையே உண்டு.

அதனாலேயே 'எட்கா' உடன்படிக்கை, கொழும்புத்துறைமுக கிழக்கு முனைய அபிவிருத்தி உள்ளிட்ட பல உடன்படிக்கைகளை சிங்கள ஆட்சியாளர்கள் கைவிட்டார்கள். இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கதியும் அதுதான்.

சீனாவுடன் பௌத்த கலாசார உறவிருப்பதால், அதனை பொருளாதார ரீதியிலும் சிங்கள மக்கள் ஆதரிக்கின்றனர் என்பதையே 1972 ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கம் அமைக்கப்பட்ட நாளில் இருந்து இன்றுவரை நாம் காண்கிறோம். ஆக 1983 ஆம் ஆண்டில் இருந்து 2009 ஆம் ஆண்டு மே மாதம் ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை இல்லாதொழிக்கும் வரையே சிங்கள ஆட்சியாளர்களுக்கு இந்தியா தேவைப்பட்டது.

கடந்த பதினொரு ஆண்டுகள் சிங்கள மக்களின் இந்தியா தொடர்பான மனநிலையும் அதன் நீட்சியான எதிர்ப்பு செயற்பாடுகளும் அதிகரித்தன. இவையே இலங்கையில் இந்தியாவின் செல்வாக்குக் குறையக் காரணமாகின.

சிங்கள ஆட்சியாளர்கள், சிங்கள அரசியல் கட்சிகள் மற்றும் பௌத்த குருமார் ஆகியோரின் தொடர்ச்சியான எதிர்ப்பும் அதற்குரிய அரசியல் வேலைத் திட்டங்களும் இன்று இந்தியா என்றொரு வல்லரசைப் புறந்தள்ளி, அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளோடும் சீனாவுடனும் சமாந்தரமாக உறவைப் பேணும் அளவுக்கு சிங்களத் தேசியம் ஒரு தேசமாக எழுந்திருக்கிறது.

இறைமை உள்ள அரசு என்றொரு கட்டமைப்பு 1972 இல் சிங்கள மக்களுக்குக் கிடைத்தமையே இதற்குச் சாதகமாக அமைந்ததெனக் காரணம் கூறினாலும், ஒரு தேசமாக எழுச்சி பெற வேண்டுமென்ற உணர்வு , ஈழப்போர் ஆரம்பித்ததில் இருந்து இன்று வரை சிங்கள மக்களிடம் தொடர்கிறது. சிங்கள ஆட்சியாளர்கள் தமக்குள் முரண்பட்டாலும் மேற்கு நாடுகளின் புவிசார் அரசியல் போட்டிகளை இலங்கைக்குச் சாதகமாகப் பயன்படுத்த வேண்டுமென்ற அறிவுசார் பக்கபலத்தை சிங்கள ஆங்கில ஊடகங்களும் ,துறைசார்ந்த சிங்களப் பேராசிரியர்களும் கொடுக்கின்றனர்.

இந்தியாவை எதிர்த்தும் சீனாவை எதிர்க்காமலும் அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளை எதிர்ப்பது போல ஒப்பாசாரத்துக்கு எதிர்த்துச் சமாந்தரமான இராஜதந்திர உறவுகளை சிங்கள ஆட்சியாளர்கள் பேணுகின்றனர். ஏனைய ஆசிய நாடுகளான பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, பூட்டான் மற்றும் கசகஸ்தான் போன்ற நாடுகள் தமது நாடுகளின் மீதான சீன ஆதிக்கத்தை எதிர்க்கின்றன. ஆனால் சீனாவின் பொருளாதார நிபுணத்துவத்தைப் பரிமாறிக் கொள்கின்றன. வர்த்தகச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. தென் சீனக் கடற்பகுதியில் - சீனா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் உரிமை கொண்டாடும் கடற் பிராந்தியத்தில்- கடந்த ஒரு மாதத்தில் 200 க்கும் மேற்பட்ட சீன மீன்பிடிப் படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமைக்கு, பிலிப்பைன்ஸ் கண்டனம் தெரிவித்துள்ளது. தென் கிழக்கு ஆசிய நாடான பிலிப்பைன்ஸின், பலாவன் மாகாணத்தின் மேற்குப் பகுதியில் இருந்து, 324 கி.மீ. தொலைவில், தென் சீனக் கடற்பகுதியை, சீனா உரிமை கோருகின்றது. அதாவது சீனா - பிலிப்பைனஸ் இடையே உள்ள கடலில் அமைந்த ஸ்பார்ட்டிலி தீவு மற்றும் ஸ்கார்பாரோ சோகல் ஆகிய தீவுகளை சீனா உரிமை கோருகின்றது.

கடல் வளங்கள் நிறைந்த இந்தப் பகுதியில் மீன் பிடிப்பது தொடர்பாக, இரு நாடுகளும் அடிக்கடி முரண்படுவதுண்டு. இதனால் பிலிப்பைன்ஸ் மக்கள் சீன ஆக்கிரமிப்பை எதிர்க்கிறார்கள், போராடுகிறார்கள், ஆனால் சீனாவின் வர்த்தக மற்றும் பொருளாதார உதவிகளைப் பெற்றுக் கொள்கின்ற பிலிப்பைன்ஸ் சீனப் பொருள்களைக் கொள்வனவு செய்வதை நிறுத்தியுள்ளது. தென் சீனக் கடலில் அமைந்த இந்தோனேசியாவுக்குச் சொந்தமான தீவுப் பகுதிகளை சீனா உரிமை கோருகின்றது.

இதனால் இந்தோனேசியாவில் சீனர்களுக்கு எதிராக வெறுப்புணர்வு வளர்ந்து வருகிறது.


1998ஆம் ஆண்டு இந்தோனேசிய ஜனாதிபதி சுகார்த்தோ பதவி நீக்கப்பட்டப் பின்னர் இடம்பெற்ற உள்நாட்டுக் கலவரத்தில், இந்தோனேசியாவில் வாழ்ந்த சீனர்களின் வர்த்தக நிறுவனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சீனாவுக்கு எதிராக வன்முறைகளும் அகிம்சைப் போராட்டங்களும் அங்கு இன்றுவரை இடம்பெறுகின்றன.

சீனா மீது பூட்டான் அரசுக்கும் நல்லுறவு இருந்ததில்லை. 1959ஆம் ஆண்டில் திபெத்தை சீனாவுடன் இணைத்த பின்னர் சீனாவுக்கு எதிரான திபெத்தியர்களின் கிளர்ச்சியின் போது தலைநகரம் லாசாவில் பௌத்த விகாரைகள், பௌத்த கல்வி நிலையங்கள் இடித்து அழிக்கப்பட்டன. இதனால் பூட்டான் மக்களுக்கு சீனாமீது இன்று வரை வெறுப்புணர்வு உண்டு. வர்த்தகச் செயற்பாடுகள் இருந்தாலும் பூட்டான் சிறிய நாடென்ற முறையில் அங்கு சீனா கால் பதிக்க முடியாத அளவுக்கு எதிர்ப்பு உண்டு.

1960ஆம் ஆண்டு சீனா வெளியிட்ட வரைபடத்தில், பூட்டான் சீனாவின் ஒரு பகுதியாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(11 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாறார், வாறார், வாறார்; வந்திட்டார்!

ந.பரமேஸ்வரன்

பஸில் மாத்தையா வந்திட்டார். பசில் ராஜபக்ச வந்தால் நாட்டில் பாலாறும் தேனாறும் ஓடும்" என்ற மாதிரியான பிரசாரம் தென்னிலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஶ்ரீலங்கா ஜனநாயக சோஷலிசக் குடியரசு வெள்ளையரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலையான நாள் முதல் இன்றுவரை கடனிலேயே உழன்று வருகிறது. இந்தக் கடன் தொல்லையிலிருந்து ஶ்ரீலங்காவை மீட்டெடுப்பதற்கு பஸில் ராஜபக்ச அள்ள அள்ளக் குறையாத அட்சயபாத்திரம் ஏதாவது கொண்டுவந்தாரோ தெரியவில்லை. களநிலவரத்தைப் பார்த்தால் கம்பன் வர்ணித்த இலங்கை வேந்தனின் நிலையிலேயே (கடன் பட்டார் நெஞ்சம் போல) நாடு உள்ளது. இந்தக் கடனை அடைப்பதற்கு பஸில் ராஜபக்ச என்ன மந்திரம் வைத்திருக்கிறாரோ தெரியாது.

பஸில் ராஜபக்ச அல்ல அவரது தந்தையாரான டி.எம்.ராஜபக்ச வந்தாலும் கூட, தற்போதைய கடன் சுமையிலிருந்தோ பொருளாதார நெருக்கடியிலிருந்தோ நாட்டை விடுவிக்க முடியாது என்பதே யதார்த்தம்.

உலகிலுள்ள 195 நாடுகளில் 109 நாடுகளிடம் கடன்பட்டுள்ளது இலங்கை. இதில் வேடிக்கை என்னவென்றால் பொதுவாக வறிய நாடுகளாக அறியப்படும் ஆபிரிக்க நாடுகளிடம் கூட கடன் வாங்கத் தவறவில்லை இலங்கை. சில நாடுகளிடம் 1970 ஆம் ஆண்டு பட்ட கடன்கூட இன்றுவரை திருப்பிச் செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது.

தற்போது இலங்கை அரசாங்கத்தின் மொத்த கடன்தொகை 35.1 பில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்படுகிறது. ஏப்ரல் 2021 வரையான புள்ளிவிபரங்களின் படி, ,கடந்த ஆண்டு கடன்தொகை 2019ல் இருந்ததைவிட 10 வீதத்தால் அதிகரித்துள்ளது. வறுமை 10.9 வீதத்தால் அதிகரித்துள்ளது. 4.6 வீதமாக இருந்த பணவீக்கம் 5.2 வீதமாக அதிகரித்துள்ளது. 2021 ஜனவரி முதல் மார்ச் வரையான காலப்பகுதியில் டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி 6.5% வீழ்ச்சியடைந்துள்ளது. தற்போது நாடு சென்றுகொண்டிருக்கும் பாதையில் தொடர்ந்து பயணித்தால் முதலாம் உலகப்போரின் பின்னர் ஜெர்மனியில் ஏற்பட்டது போன்ற நிலைமை இலங்கையிலும் ஏற்படும் என சர்வதேச பொருளியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

2025 ஆம் ஆண்டு இலங்கை செலுத்தவேண்டிய மொத்த கடன் தொகை 5000 மில்லியன் அமெரிக்க டொலராக இருக்கும் என உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கை அரசாங்கம் பெற்ற குறுங்கால கடன்களை திருப்பிச் செலுத்தாவிட்டால் 2030ல் இலங்கை அரசாங்கம் தனது வருமானம் முழுவதையும் ஏற்கனவே பெற்ற கடன்களை அடைப்பதற்கே செலவிட வேண்டியிருக்கும் என உலக வங்கி எச்சரித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் பெற்ற கடனில் பெருமளவு பிணை முறிகளிலேயே முதலீடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக சீனா வழங்கிய கடனின் பெரும்பகுதி (சீனாக்காரன் புத்திசாலி என்று சொல்லலாம்) பிணை முறிகளிலேயே முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பிணை முறிகளுக்கு ஆண்டுக்கு 4.5% வட்டியை இலங்கை அரசு செலுத்த வேண்டும். இதேபோல் இலங்கையின் உள்நாட்டு உற்பத்தி, ஏற்றுமதி என்பவையும்

| ஏற்றுமதி | வருமானம் (மில்லியன் டொலரில்) 2019 | 2020 |
|---|---|---|
| விவசாயம் | 8030 | 6445 |
| உற்பத்தித்துறை | 1667 | 1516 |
| தைத்த ஆடைகள் | 6330 | 4906 |
| ஏனையவை | 12280 | 10257 |

வீழ்ச்சியடைந்துள்ளன. இதேபோல் தேயிலை, இறப்பர் , அரிசி என்பவற்றின் உற்பத்தியும் அரசிறை வருமானமும் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த கடன்சுமையிலிலிருந்தும் பொருளாதார நெருக்கடியிலிருந்தும் பஸில் எப்படி நாட்டை மீட்டெடுக்கப்போகிறார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

## மதிப்புக்குரிய வடமாகாண ஆளுநர் அம்மாவுக்கு..!



## அவசரமா ஒரு கடிதம்

இது கொரோனாக் காலம். முன்னம் ஒண்டு ரெண்டு எண்டு இருந்த கிருமித் தொத்து இப்ப தினம் ஆயிரம், ரெண்டாயிரம் எண்ட கணக்குக்கு வந்திட்டுது. சனம் நிமிசத்துக்கு நிமிசம் பயந்து சாகுதுகள். எப்ப? என்ன நேரத்திலை? எங்க வைச்சு? கிருமி தொத்தும் எண்டு ஆருக்கும் தெரியாது. "கூட்டத்தில் முகக்கவசமின்றி கலந்துகொள்ள வேண்டாம்" எண்டு சுகாதார அதிகாரியள் தொண்டை கிழியக் கத்தினம்.

அது மட்டுமில்லை முகக்கவசம் போடாமல் போற ஆக்களுக்குப் பொலிஸ் வழக்கு எழுதுது. ஏன், கொஞ்சநாளுக்கு முன்னம் முகக்கவசம் இல்லாமல் வந்தவையளை நாய் பிடிக்கிற மாதிரிப் பிடிச்சுபஸ்ஸிலை ஏத்திக்கொண்டு போறதையும் முகநூலிலை பாத்தனாங்கள். நிலைமை அப்பிடி இருக்க, நீங்கள் கனக்க கூட்டங்களிலை முகக்கவசம் இல்லாமல் திரியிறதைப் பாக்கச் சனத்துக்குக் கோவம் கோவமா வருகுது. ஆளுநருக்குக் கொரோனா கிருமி என்ன நெருங்கின பழக்கமோ? இல்லை மாமான் மச்சானோ? இல்லை அயல் வீடோ? எண்டும் சனங்கள் கேக்கினம். இனி அவைக்குப் பதில் சொல்லிப் பாருங்கோ பாப்பம்.

போன 29.04.2021 ஆண்டு காலமை பத்து மணிக்கு ஆளுநர் செயலகத்திலை நடந்த கொரோனா சம்பந்தப்பட்ட கூட்டத்திலை பல பேருக்கு முன்னாலை என்ன சொன்னனியள் எண்டது உங்களுக்கு ஞாபகமோ?

"அயல் நாடான இந்தியாவிலை சுகாதார நடைமுறையளைச் சனம் சரியாப் பின்பற்றாததாலை தான் இவ்வளவு சீர்கேடாக் கிடக்கு. அப்ப அதைப் பாத்திட்டாவது நாங்கள் கொஞ்சம் கவனமாக இருக்க வேணும். இல்லாட்டி நாங்களும் அவையள் மாதிரிக் கஷ்டப்படத்தான் வேணும். முகக்கவசம் அணிவது மட்டுமல்லாது முகப் பாதுகாப்புக் கவசமும் அணிய வேணும்." எண்டும் அழுத்திச் சொல்லி இருக்கிறியள். அப்பிடிச் சொல்லிப் போட்டு, நீங்களே அதுக்கு எதிரா, மாஸ்க் போடாமல் திரியிறது சரியோ?

அது இருக்கட்டும். போன 2020 நவம்பர் 8 ஆம் திகதி வவுனியாவிலை நடந்த கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டத்தின்ரை கூட்டத்திலையும் நீங்கள் மாஸ்க் போடேல்லை. யாழ்ப்பாணத்தில நாமல் வந்த நிகழ்ச்சியிலையும் மாஸ்க் போடேலை. அதையெல்லாம் ஊடகங்கள் குத்திக்காட்டினது உங்களுக்கும் தெரிஞ்சிருக்கும்.

"நீங்கள் ஏன் முகக்கவசம் போடுறியள் இல்லை?" எண்டு நானும், எங்கட மதகடி கூட்டத்தில கதைச்சன். அப்பதான் அயல் வீட்டுப் பரமசிவத்தின்ரை கதை வந்துது. பரமசிவத்துக்குக் கொரோனா எண்டால் பீத்தல்பயம். அவர் தன்ரை மனுசி வெளியாலை போற ஒவ்வொரு தரமும் "முகக்கவசம் போட்டுக் கொண்டு போ!" எண்டு சண்டைப் பிடிக்கிறவர். ஆனால் அவா போட மாட்டா. ஏன் எண்டு கேட்டதுக்கு "நான் என்ன விலை குடுத்து சொண்டுக்குப் பூசுற லிப்ரிக்ஸ் வேண்டி வைச்சுப் பூசுறனான் தெரியுமோ? முகக்கவசம் போட்டால் அது அழிஞ்சுபோயிடும். பொலிஸ் பிடிச்சு வழக்கு எழுதினாலும் பரவாயில்லை. காசைக் கட்டிப்போட்டுப் போவம். ஆனால் நான் மாஸ்க் போட மாட்டன்." எண்டு துவங்கின சண்டை இப்ப கோர்ட் வரைக்கும் போயிட்டுதாம். அது மாதிரித்தான் முக்க்கவசம் போடாததுக்கு நீங்களும் ஏதென் காரணம் வைச்சிருப்பியளோ எண்டு சனம் சமசியப்படுகுது.

ஆனபடியாலை ஊருக்குத்தான் உபதேசம். எனக்கு இல்லை எண்ட மாதிரி இருக்கப்படாது. சட்டத்தைப் போடுறவையே சட்டத்தை மீறப்படாது. சட்டத்தை மீறலாம் எண்டு பிறருக்குக் காட்டியும் குடுக்கக்கூடாது. நீங்கள் மாஸ்க் போடேலை எண்ட செய்தி, உங்களுக்கு மட்டுமில்லை உங்களோடை நிண்ட நாமலுக்கு, அதிகாரிகளுக்கு, அரசியல்வாதிகளுக்கு, பொது மக்களுக்கு எண்டு எல்லாருக்குந் தான் வெட்கம். இல்லை முகக்கவசம் போடமாட்டன் எண்டு நீங்கள் நினைச்சால், அதைச் சட்டம் ஆக்காதையுங்கோ. சனத்தையும் போடாமல் திரிய அனுமதியுங்கோ.

இப்படிக்கு
**அப்பாவி அன்னமுத்து.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாய்வாரா, பதுங்குவாரா?

விமல் வீரவன்ச, அதன்பின்னர் உதய கம்மன்பில என்று பங்காளிக்கட்சி தலைவர்கள் மீது சரமாரியாக சொற்போர் தொடுத்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் தற்போது சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகரவை இலக்குவைத்து விளாசித்தள்ளிவருகின்றனர். இதனால் அரச கூட்டணிக்குள் மட்டுமல்ல சுதந்திரக் கட்சிக்குள்ளும் குழப்பநிலை உருவாகியுள்ளது.

பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வருவதால் பாரிய மாற்றங்கள் எவையுமே ஏற்படப்போவதில்லை எனவும், சட்டி, முட்டி, பத்திக் என நகைச்சுவைத்தனமான அமைச்சுகளை உருவாக்கியது அவரே எனவும் தயாசிறி ஜயசேகர கருத்து வெளியிட்டதுடன், நாட்டில் சிஸ்டம் சரியில்லை எனவும் கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளார். இதனால் கடுப்பாகிய பஸிலின் சகாக்கள் தயாசிறிமீது பதிலடி தாக்குதலை ஆரம்பித்தனர். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவி கிடைக்காததாலேயே தயாசிறி உளறுகிறார் எனவும், இராஜாங்க அமைச்சு பதவியை அவர் துறக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றனர்.

தயாசிறியும் ஓயவில்லை. "நரிகள் ஊளையிடுவதற்கு அஞ்ச அமைச்சு பதவிய துறக்கமாட்டேன் என சூளுரைத்துள்ளார். இதற்கிடையில் சுதந்திரக் கட்சியின் அவசர கூட்டமொன்று கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது. அவ்வேளை கட்சி கட்டளையிட்டால் அமைச்சு பதவியை துறப்பதற்கும் தயார் என குறிப்பிட்டுள்ளார். இதற்கு பதிலளித்துள்ள சுதந்திரக் கட்சி பக்கம் உள்ள பஸிலின் விசுவாசிகள் சிலர், பஸிலை விமர்சிப்பதை நிறுத்துமாறு தயாசிறிக்கும், ஏனைய சில உறுப்பினர்களுக்கும் தெரிவித்தனர். பஸிலின் வருகையால் அவருக்கு சார்பான அணி, எதிரணி என சுதந்திரக்கட்சி மேலும் பிளவுபட்டுள்ளமை இதன்மூலம் புலப்படுகின்றது.

அரசியலில் புரட்சியை ஏற்படுத்தக்கூடிய நபர்களில் தயாசிறியும் ஒருவர். சுதந்திரக் கட்சி ஊடாக அரசியல் பயணத்தை ஆரம்பித்த அவர் காலப்போக்கில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார். பின்னர் மஹிந்தவுடன் சங்கமித்தார். வடமேல் மாகாண முதல்வராகவும் பதவி வகித்தார். இந்தநிலையில் தற்போது சஜித் பிரேமதாசவை புகழந்து பேசும் தந்திரத்தையும் தயாசிறி கையாண்டுவருகிறார்.மறுபுறத்தில் குமார வெல்கமவும் அழைப்பு விடுத்துவருகின்றார்.

எனவே, மீண்டுமொருமுறை தயாசிறி தாவுவாரா அல்லது அரசுக்குள் இருந்தபடியே போராடுவாரா அல்லது பதுங்கி மௌனபோக்கில் அரசியல் பயணத்தை ஆரம்பிப்பாரா என்பது தற்போது எழும் மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியாகும். ஜனாதிபதியின் விசுவாசியென கருதப்படும் தயாசிறி ஜயசேகர, விமல், கம்மன்பில, வாசு போன்றோருடனும் சிறந்த உறவைப்பேணி வருகின்றார். எனவே, அவரைப் பதவி துறக்க வைப்பது மொட்டு கட்சிக்கு இலகுவான காரியமல்ல என்றே கூறப்படுகின்றது.ஜனாதிபதிக்கும், சுதந்திரக்கட்சி உறுப்பினர்களுக்குமிடையில் முக்கியத்துவமிக்க சந்திப்பொன்று எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதன்போது குழப்ப நிலைக்கு ஓளரவு முடிவு கட்டப்படலாம் என நம்பப்படுகின்றது.

# அறிந்தும் அறியாலும்

சுழியன்


# பஸிலுக்கு ஆப்பா?

மொட்டுக் கட்சி ஆதரவாளர்களின் அழைப்பையேற்று பெரும் எதிர்பார்ப்புடன் நாடாளுமன்ற அரசியலுக்குள் மீண்டும் நுழைந்துள்ளார் பஸில் ராஜபக்ச. அவருக்கு நிதி அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது. மத்திய வங்கி உட்பட அரச வங்கிகள், முதலீட்டுச்சபை, சுங்கம் உள்ளடங்களாக 50 க்கும் மேற்பட்ட நிறுவனங்களும் அவர் வசமாகியுள்ளன.

இலங்கைப் பொருளாதாரத்தை மீட்கவே பஸில் வந்துள்ளார் என ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பரப்புரைகளை முன்னெடுத்தாலும் அவரின் வருகையின் பின்னால் மேலும் சில அரசியல் தந்திரோபாய நகர்வுகள் உள்ளன. கோத்தா, மஹிந்தவை நம்பி அரச இயந்திரம் சுழன்றாலும், கட்சி மற்றும் அரசியல் இயந்திரம் பஸிலிடமே உள்ளது. அவற்றை முறையாக நெறிப்படுத்தினால்தான் ஆட்சியதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள முடியும். அதற்கு அரச பலமும் அவசியம். அந்த நோக்கத்தை அடைவதும் பஸிலின் வருகைக்கான ஓர் காரணம்.

பஸிலின் மீள்வருகையுடன் 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலும் தற்போதே கதை அடிபடுகின்றது. அந்தத் தேர்தலில் பஸில் போட்டியிடுவார் என அவருக்காக பதவி துறந்த ஜயந்த கெட்டகொட பகிரங்கமாக அறிவித்துள்ளார். அதுமட்டுமல்ல மேலும் சில மொட்டுக் கட்சி உறுப்பினர்களும் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் பஸில்தான் என அறிவித்து வருகின்றனர்.

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி பதவியை வகிப்பவருக்கு மீண்டுமொருமுறை அந்தத்தேர்தலில் போட்டியிட அனுமதி உள்ளது. அது அவரின் விருப்பத்தை பொறுத்தது. எனவே, இரண்டாவது தடவை போட்டியிடப்போவதில்லை என்ற அறிவிப்பை கோத்தாபய ராஜபக்ச இன்னும் பகிரங்கமாக அறிவிக்கவில்லை. இந்த நிலையில் பஸிலை முன்னிலைப்படுத்துவது ஜனாதிபதி கோத்தாவுக்கு ஏதேனுமொரு வகையில் சினத்தை ஏற்படுத்தக்கூடும். அடுத்த முறையும் கோத்தா போட்டியிட்டால் பஸிலுக்கான வாய்ப்பு குறையும் என்பதால் அடுத்த முறை மீண்டும் கோத்தாவையும், 2030 இல் நாமலையும் களமிறக்குவதே மஹிந்தவின் அரசியல் திட்டமாக உள்ளது என்ற தகவலும் வெளியாகியுள்ளது.





# சாதனையை நழுவவிட்ட மஹிந்த

அரசியல் களத்தில் மஹிந்த ராஜபக்ச படைக்கவிருந்த மற்றுமொரு சாதனை கைநழுவிப்போயுள்ளது. இலங்கை அரசியல் வரலாற்றில் நிதி அமைச்சு பதவியை வகித்தவர்களில் ரொனி டி மெல் என்பவரே 12 தடவைகள் வரவு செலவுத்திட்டத்தை முன்வைத்துள்ளார். இதுவே இதுவரை சாதனையாக உள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் மஹிந்த ராஜபக்ச இதுவரை 11 வரவு செலவுத் திட்டங்களை நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளார். இந்நிலையில் அடுத்தாண்டுக்கான பாதீட்டை அவர் முன்வைத்திருக்கும் பட்சத்தில் ரொனி டி மெலின் சாதனையை சமப்படுத்தியிருக்கக்கூடும். எனினும், பஸில் ராஜபக்சவுக்கு நிதி அமைச்சு பதவியை மஹிந்த ராஜபக்ச விட்டுக்கொடுத்துள்ளார். மீண்டும் அவர் நிதி அமைச்சு பதவியை ஏற்கும் வாய்ப்பு இல்லை. இதனால் அந்தச் சாதனையை முறியடிக்க முடியாமல் போய்விட்டது.இலங்கை அரசியலில் அதிகூடிய விருப்பு வாக்கு பெற்று நாடாளுமன்றம் தெரிவான உறுப்பினர் என்ற சாதனையை கடந்தாண்டு மஹிந்த படைத்தார்.

# பிரிந்தவர்கள் இணைந்தனர்!

வலுசக்தி அமைச்சர் உதயகம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது எதிர்வரும் 20 ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. இந்தப் பிரேரணை வெற்றிபெறாது என்பதை பிரதான எதிர்க்கட்சி ஏற்றுக்கொண்டுள்ளது. அப்படியானால் எதற்காக இந்தப் பிரேரணை என்ற கேள்வி எழுகின்றது. அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருள்களின் விலையைக் குறைப்பதற்கான அழுத்தத்தை பிரயோகிப்ப தற்கான அரசியல் வியூகம் என ஐக்கிய மக்கள் சக்தி கூறினாலும், அரச கூட்டணிக்குள் உள்ள பிளவை சந்திக்கு கொண்டுவருவதற்காகவே இந்தத் தந்திரம் கையாளப்பட்டது.

பஸில் ராஜபக்சவுக்கும், கம்மன்பிலவுக்குமிடையில் அரசியல் ரீதியில் முரண்பாடுகள் உள்ளன. எனவே, பஸிலின் சகாக்கள் இது விடயத்தில் அதிர்ச்சியளிக்கும் வகையிலான முடிவுகளை எடுக்கக்கூடும் என சஜித் அணி கருதியது. இதற்கேற்ற வகையிலேயே மொட்டுக் கட்சி உறுப்பினர்களும் கருத்து வெளியிட்டுவந்தனர். ஆனால் பஸிலின் வருகையோடு அரசியல் ரீதியிலான குழப்பமும் முடிந்துவிட்டது. இனி நல்லமே நடக்கும் என்ற விம்பத்தை உருவாக்குவதற்கு ஆளுந்தரப்பு முயற்சிக்கின்றது.

குறிப்பாக நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராகவே வாக்களிக்க வேண்டும் என ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு ஆணையிட்டுள்ளனர். இதன்படி மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அந்தப் பிரேரணையை தோற்கடிப்பதற்கு ஆளுங்கட்சி திட்டமிட்டுள்ளது. பிளவுபட்டிருந்த அரச கூட்டணியை மீண்டும் ஐக்கியப்படுத்தியுள்ளது இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை. எனவே, எதிரணியிலுள்ள அதிருப்தியாளர்கள் எதிர்த்து வாக்களிக்காவிட்டாலும் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் நழுவக்கூடும் என நம்பப்படுகின்றது.



# தம்பிக்காக தியாகம்

நாடாளுமன்றம் வரவுள்ள பஸிலுக்கு என்ன அமைச்சு பதவியை வழங்குவது என்பது தொடர்பில் ராஜபக்சக்களுக்கிடையிலான கலந்துரையாடலொன்று கடந்தவாரம் இடம்பெற்றது.

இதன்போது வேறு அமைச்சர்களின் விடயதானங்களில் கைவைக்க வேண்டாம் எனவும், ராஜபக்சக்கள் வகிக்கும் அமைச்சுப் பதவிகளில் இருந்து அவருக்கான பதவியை வழங்குமாறும் மஹிந்த ராஜபக்ச சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்காக நிதி அமைச்சு பதவியையும், முக்கியமான [illegible] வழங்குவதற்கு நான் தயார் எனவும் மஹிந்த குறிப்பிட்டுள்ளார். இதன் [illegible] பஸிலுக்கு நிதி அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதுதான் வெற்றியின் ஏணிப்படி?





ம.மயூரபாலன்

இன்று சமூக வலைத்தளங்கள் மற்றும் ஊடகங்களில் வெற்றியின் உச்சியை அடையவேண்டும், புகழின் உச்சியை அடைய வேண்டும் என்ற கருத்தை பலரும் பலவிதமாக கூறி வருகின்றார்கள். ஆனால் உண்மையான வெற்றி என்றால் என்ன என்பது பற்றி இதுவரை தெளிவாக வரையறை செய்யப்படவில்லை. செல்வம் இருந்தால் அதுதான் வெற்றி என்பார்கள் சிலர். அறிவு இருந்தால் அதுதான் வெற்றி என்பார்கள் சிலர். இவ்வாறு கல்வியா, செல்வமா, வீரமா என்று அதே விவாதம் தொடர்ந்துகொண்டே போகின்றது.

அதுமட்டுமன்றி சிலமணி நேரம் பிரபல்யம் அடைவதற்காக, படபடப்பை ஏற்படுத்தும் செயல்களை செய்து, தமது உயிரையும் கொடுக்க சிலர் தயாராக உள்ளார்கள். மலை உச்சியிலிருந்து, கடற்கரையிலிருக்கும் பாறை மேல்ஏறி, விதம்விதமாக தம்மைத்தாமே படம் எடுக்க முயற்சிசெய்து தமது உயிரை பலி கொடுத்தவர்கள் பலர் உள்ளார்கள். இவ்வாறு வெற்றிகளை, புகழை சம்பாதிப்பதற்காக உயிரையே கொடுப்பது, கண்களை விற்று ஓவியம் வாங்குவதுபோல் ஆகிவிடுகின்றது.

ஒருநாள் ஒரு அரசன் தனது நாட்டின் ஒரு பகுதியை மக்களுக்கு பகிர்ந்தளிக்க விரும்பினான். அதற்காக காலையிலிருந்து மாலை வரை, ஒவ்வொரு குடும்பத்திலும் இருந்து எவரேனும் ஒருவர், எவ்வளவு தூரம் ஓடுகின்றாரோ அவ்வளவு நிலமும் அந்த குடும்பத்துக்கு சொந்தமாகும் என அறிவித்தல் கொடுக்கப்பட்டது. மக்கள் அனைவரும் மிகவும் உற்சாகத்துடன் அதில் கலந்து கொண்டார்கள். ஒவ்வொருவரும் தத்தமது விருப்பத்துக்கும், திறமைக்கும் ஏற்றவாறு ஓடி அந்த அந்த இடங்களை தமதாக்கிக்கொண்டார்கள். ஆனால் ஒரு மனிதனோ ஓடிக்கொண்டே இருந்தான். அவன் மிகவும் களைத்துப்போய், சோர்வடைந்து விட்டான். இருப்பினும் இன்னும் ஒரு அடி எடுத்து வைத்தால் வாழ்க்கை முழுவதற்கும் அந்த நிலம் தனக்கே சொந்தம் ஆகிவிடும் என்ற எண்ணம், அவனை ஓட வைத்துக் கொண்டு இருந்தது. இன்னும் ஒரே ஒரு அடி, இன்னும் ஒரே ஒரு அடி என்று எண்ணி எண்ணி அவன் ஓடிக்கொண்டிருந்தான். இறுதியில் அவன் கீழே விழுந்து இறந்து விட்டான்.

இது உண்மையில் நடந்ததா இல்லையா என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் இந்தக் காலத்திலும் இவ்வாறு நடைபெறுகின்றதா என கேட்டால், ஆம் என்பதுதான் அதற்கான வருத்தத்துக்குரிய பதிலதாக உள்ளது. தனது இளைப்பாறும் காலம் சௌகரியமாக இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு மனிதர் இரவு பகலாக உழைத்தார். சில வருடங்களுக்கு முன்னர் அவரது கடமைக்கான அர்ப்பணிப்பை பாராட்டி, அவரது கடைசி வேலை நாளன்று, அவருக்காக விருந்து பசாரம் கொடுக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சியில் அவர் மாரடைப்பு வந்து இறந்துவிட்டார். இங்கு தேவைக்கும் ஆசைக்கும் இடையே ஒரு இடைவெளி இல்லாமல் போய்விடுகின்றது. இரண்டும் ஒன்றுடன் ஒன்று கலந்து ஒரு கலங்கிய நிலையை, மயங்கிய நிலையை கொடுக்கின்றது. தனிமனிதனுக்கு பேராசை வரும்பொழுது, அது அவனை கொல்கின்றது. அத்துடன் அவனை மட்டுமன்றி, அவனது சமுதாயம், நாடு என உலகத்தையே அது மெதுவாக மெதுவாக அழிக்கின்றது. ஒரு மிகப் பெரிய வீட்டை சிறிய கறையான்கள் மெதுவாக அரித்து அரித்து தரைமட்டமாக்குவது போல, மனிதனின் பேராசை இன்று முழு உலகத்தையுமே அழிவின் எல்லைக்கு தள்ளுகின்றது.

இங்கு சிக்கல் என்னவென்றால், நாம் நம்மிடம் என்ன உள்ளது என்பதை பார்ப்பதற்கு பதிலாக, நம்மிடம் என்ன இல்லை என்பதன் மீது தான் நாம் அதிகம் கவனம் செலுத்துகின்றோம். அது நமக்கு விரக்தியை ஏற்படுத்துகின்றது. அப்பொழுது நமது ஆனந்தம் பறிபோய்விடுகிறது.

ஒரு ஆலமரத்தின் நிழலில், சங்கரன் எனும் மனிதன் வாழ்ந்து வந்தான். அவன் அங்குள்ள ஆலயத்துக்கு சென்று சாப்பிடுவது வழக்கம். அந்த ஆலயத்தில் மணி ஒலிக்கும் பொழுது சாப்பாடு தயார் என அவனுக்குத் தெரிந்துவிடும். உடனே அவனும் ஓடி ஓடிச்சென்று வரிசையில் நின்றுவிடுவான். ஏனெனில் சிறிது நேரம் பிந்தினாலும் உணவுமுடிந்துவிடும். ஒருநாள் அவ்வாறு ஓடும் பொழுது ஒரு மனிதன் சைக்கிளில் செல்வதை அவன் பார்க்கின்றான். அப்படி ஒரு சைக்கிள் இருந்தால் நான் இப்படி ஓடவேண்டிய அவசியமில்லையே என எண்ணி வருத்தப்பட்டான்.

அந்தநேரம் அந்த வழியாலே ஒருவன் மோட்டார் சைக்கிளில் சென்றான். இப்பொழுது அந்த சைக்கிளில் செல்பவன், மோட்டார் சைக்கிளில் செல்பவனைப் பார்த்து, அப்படி ஒரு மோட்டார் சைக்கிள் இருந்தால் இவ்வளவு தூரம் நான் கஷ்டப்பட்டு இந்த சைக்கிளை மிதிக்க வேண்டிய அவசியம் இல்லையே என எண்ணினான். அப்பொழுது அந்தத் தெருவிலே ஒரு கார் வந்தது. அங்கு சாரதி காரை ஓட்டிக் கொண்டிருந்தான். பின்னாலே ஒரு முதலாளி உட்கார்ந்திருந்தார். அந்த மோட்டார் சைக்கிளில் போகிறவன், நான் மழையிலே, வெள்ளத்திலே எவ்வளவு கஷ்டப்பட வேண்டியுள்ளது, அப்படி ஒரு கார் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என எண்ணினான். இப்பொழுது அந்த காரிலே சென்று கொண்டிருந்த முதலாளி, சாப்பாட்டுக்காக ஓடிக்கொண்டிருக்கும் சங்கரனைப் பார்க்கின்றார். அவனைப் பார்த்த முதலாளி, இவனைப் போல எனக்கும் பசி இருந்தால் எவ்வளவு நன்றாக சாப்பிடலாம் என எண்ணுகிறார். இதுதான் அந்த வட்டம். நம்மிடம் உள்ள பொக்கிசங்களை நாம் அறிவதில்லை.

நீங்கள் வெற்றி அடைந்துவிட்டீர்கள் என சொல்வதற்கு, வெற்றிக்கான கோடு என ஒன்றுமே இல்லை. உலகத்தின் இரண்டாவது பணக்காரன் முதலாவது பணக்காரனாக வருவதற்காக இரவுபகலாக உழைக்கின்றான். உலகத்தில் முதலாவது பணக்காரனாக இருப்பவன் தனது நிலையைதக்க வைப்பதற்காக இரவு பகலாக உழைக்கின்றான். ஒலிம்பிக் போட்டியில் உலக சாதனை படைத்த ஒருவனுடைய சாதனையை இன்னொருவன் முறியடிக்கின்றான். அப்படியென்றால் எதுதான் உண்மையான வெற்றி? இன்று நடைபெறும் விஷயங்களை பார்த்தோம் என்றால் ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகின்றது. உலகிலேயே மிகப்பெரிய பணக்காரர்கள் மற்றும் புகழின் உச்சியில் இருந்த பலர் தம்மை தாமே மாய்த்துக்கொண்ட செய்திகள் பல உள்ளன. நாம், இந்த செல்வத்தை, புகழை நோக்கி இரவு பகலாக ஓடுகின்றோம். அதனை ஏற்கனவே அடைந்த பலர், அதனாலே திருப்தியையோ உண்மையான ஆனந்தத்தையோ பெறவில்லை என்றால், அது நமக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும் என்பதற்கு உத்தரவாதம் ஒன்றுமே இல்லை. ஒருகாலத்தில் அலெக்சாண்டர் எனும் மாவீரன் ஏறத்தாழ முழு உலகத்தையும் தன் ஆதிக்கத்தில் வைத்திருந்தான். ஆனால் அவன் இறக்கும்பொழுது தனது கைகளை சவப்பெட்டியின் வெளியே வைக்குமாறு பணித்தான். ஏனெனில் தனது இறுதிக் காலத்தில் அவன் ஒரு விஷயத்தை தெளிவாக உணர்ந்துகொண்டான். தான் அறிந்த விஷயத்தை மற்றய மக்களும் அறியவேண்டும் என விரும்பினான். வெறும்கையுடன் உலகத்துக்கு வந்த அலெக்சாண்டர் வெறுங்கையுடனேயே திரும்பி செல்கிறான் என்ற செய்தியை மக்களுக்கு உணர்த்துவதற்காக தனது இரண்டு கைகளையும் சவப்பெட்டியின் வெளியே வைத்து எடுத்துச் செல்லுமாறு பணித்தான். இவைகள் எல்லாவற்றையும் அறிந்த பின்னரும், நாங்கள் கானல் நீரில் மீன்பிடிக்க போகின்றோம் என அடம்பிடித்தால், அது புத்திசாலித்தனமாக இருக்காது. தனிமனிதனின் பேராசை அவனை அழிக்கும் என்றால் அது ஒரு விஷயம். ஆனால் மனிதர்களின் பேராசை முழு உலகையே அழிவின் விளிம்புக்கு எடுத்துச் செல்லும் என்றால் அது மிகவும் உன்னிப்பாக கவனிக்க வேண்டிய விஷயமாகும்.

இந்தப் பேராசை என்னும் விஷயம், ஒன்றும் நவீனகாலத்து பிரச்சனை அல்ல. பதினைந்தாம் நூற்றாண்டிலே இந்தியாவில் கபீர்தாஸ் எனும் ஒரு ஞானி வாழ்ந்து வந்தார். அவரது இரு வரிக் கவிதை ஒன்றை அண்மையிலேயே படிக்க கிடைத்தது. அதிலே அவர் காமம், குரோதம், மோகம், லோபம் (பேராசை) என்பவற்றின் சுரங்கம் மனிதனின் உள்ளே உள்ளபொழுது, அவன் ஞானியாக இருந்தாலும் சரி முட்டாளாக இருந்தாலும் சரி இரண்டும் ஒன்றுதான் என கூறியுள்ளார். இன்றும், பலநூற்றாண்டுகள் கழிந்த பின்னரும், அந்த கவிதை இந்த காலத்துக்கும் பொருத்தம் உள்ளதாகவே உள்ளது. இந்த தீயகுணங்கள் எல்லாவற்றுக்கும் ஆணிவேராக இருப்பது தான் பேராசை.

இன்று உலகில் விளையும் தானியங்களில் அதிக அளவு கடலில் வீசப்படுகின்றன. ஏராளம் தொன்கள் எடையுள்ள உணவு கடலினுள் வீசப்படுகின்றன. ஒருபுறம் மக்கள் பட்டினியால் இறந்து கொண்டு இருக்கும்பொழுது இவ்வளவுதூரம் உணவை விரயம் ஆக்குவது ஒரேஒரு காரணத்துக்காகதான். சந்தையிலே அந்த உணவுப் பொருளின் விலை குறையாமல் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு செய்யப்படுகின்றது. நாங்கள் உலகம், சமுதாயம் என குறை கூறினாலும், இந்த சமுதாயம் தனிமனிதர்களால் உருவாக்கப்பட்ட ஒன்றுதான். உலகம் மாறவேண்டும் என விரும்பினால் ஒவ்வொரு தனிமனிதனும் மாற வேண்டியது அவசியமாக உள்ளது.

அதற்காக வாழ்க்கையிலே எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஒரு துறவியாக போகவேண்டும் என்று அர்த்தம் அல்ல. இது, நாம் நம்மிடம் உள்ளவற்றை வைத்துக்கொண்டு ஆனந்தமாக வாழ்க்கையை வாழ்வது பற்றியது. நாளை நாங்கள் மகிழ்ச்சியாக இருப்போம், நாளை நாங்கள் ஆனந்தமாக இருப்போம் என எண்ணி ஒவ்வொரு நாளையும் வீணாக்குவது நல்லதல்ல.

ஏனெனில் நிச்சயமாக கடைசி நாள் என்ற ஒன்றுவரத்தான் போகிறது. நாம் இவ்வளவு காலத்தையும் வீணாக்கிவிட்டோமே என்ற கவலையோ துக்கமோ அந்த நாளில் நமக்கு ஏற்படக்கூடாது. மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால் இன்னமும் காலம் கடந்துவிடவில்லை.



உள்ளே ஏதோ ஒன்று கிடைக்கும் என எண்ணி வெங்காயத்தின் தோல்களை ஒவ்வொன்றாக உரித்து உரித்து குப்பைத்தொட்டியில் போட்டுவிட்டு, நாங்கள் குப்பைத்தொட்டியில் எறிந்தவை தான் உண்மையிலேயே உபயோகமான பொருள் என்பதை இறுதியில் அறிந்து கொள்வது போல நமது வாழ்க்கை இருக்கக் கூடாது. ஒவ்வொரு நாளையும் நம்மால் இயன்ற அளவு மகிழ்ச்சியாக நாம் வாழ்ந்து வந்தால், அந்த இறுதிநாள் ஒரு ஏமாற்றம் தருகின்ற நாளாக இருக்காது. ஒருமனிதன் தனது வாழ்வை அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழமுடிந்தால் அதுதான் அவன் அடையக்கூடிய உண்மையான வெற்றியாகும். சொல்லப்பட்டது போல வெற்றி அடைவதாலே ஆனந்தம் கிடைப்பதில்லை, ஆனந்தத்தினால் தான் வெற்றிகிடைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



○ சிவா செல்லையா

# வல்லரசுகளும் சிறுபான்மையினரும்

உலக வல்லரசுகள் தமது நலனுக்காக நவீன காலனித்துவக் கொள்கைகளை கடைப்பிடிக்கின்றன. இவை நேரடி இராணுவ ஆக்கிரமிப்பாகவோ, இராணுவ ஒத்துழைப்பு முயற்சிகளாகவோ, பொருளாதார முதலீடுகளாகவோ, பொருளாதார ஒத்துழைப்புகளாகவோ அமைகின்றன.

இத்தகைய ஆக்கிரமிப்பு வல்லரசுகளில் ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா என்பவை 20 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பாதிக் காலத்தில் போட்டி போட்டன. தற்போது அந்த இடத்தை சீனா நிரப்பி, உலகில் முதன்மை வல்லரசாக வர முயற்சிக்கின்றது. இதனை அண்மைய சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 100 வருட கொண்டாட்டத்தின் போது சீன ஜனாதிபதி தெளிவாகக் கூறியுள்ளார்.

தற்போதைய பூகோளப் பெருந்தொற்றுப் பேரிடர் நிலையில் உலகில் அமெரிக்க சார்பு முதலீட்டுப் பெறுமானம் குறைந்து சீன சார்பு முதலீட்டுப் பெறுமானம் அதிகரித்துள்ளது. இனி எதிர்வரும் காலங்களில் மேற்குலகின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்து கிழக்குலகில் சிங்கப்பூர், ரோக்கியோ, சியோல் போன்ற நகரங்கள் எழுச்சி பெறலாம்.

சீன சார்பு அரசை எதிர்த்தே தமிழர்கள் தமது இருப்பைக் காப்பாற்ற வேண்டிய சூழல் ஏற்பட்டு உள்ளது. இது மிகவும் பலவீனமான சூழல் ஏகும். சீனாவின் செல்வாக்கு மத்திய கிழக்கில் எவ்வாறு விஸ்தரிக்கின்றதோ அதன் தாக்கத்தைப் பொறுத்தே ஈழத்தமிழரின் அரசியல் பயணம் எதிர்காலத்தில் அமையும். இதற்காக ரஷ்யாவும் ஐக்கிய அமெரிக்காவும் ஆப்கானிஸ்தானில் கடந்த காலத்தில் பெற்ற விளைவுகளை நாம் விரிவாக ஆராய வேண்டும்.

ஐக்கிய அமெரிக்காவின் இராணுவச் செலவீனங்கள் மத்திய கிழக்கில் மட்டுப்படுத்தப்படவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் தனது ஆக்கிரமிப்பில் ஆப்கானிஸ்தானில் இருந்து தனது படைகளை வாபஸ் பெறும் சூழல் உள்ளது. ரஷ்யா, ஆப்கானிஸ்தானில் இருந்து விலகியபோது அங்கு அமெரிக்கா கால் பதித்தது.

தற்போதைய சூழலில் இவ்வாறே ஐக்கிய அமெரிக்கா ஆப்கானிஸ்தானை விட்டு விலகும் சூழலில் சீனா இங்கு பொருளாதார முதலீடுகள் மூலம் கால் பதிக்க உள்ளது. இது மத்திய கிழக்கு நாடுகளில் சீனாவின் பலம் அதிகரிக்க ஏதுவாக அமையும். இஸ்லாமியத் தீவிரவாதம் ஆரம்பத்தில் ரஷ்யாவுக்கு எதிராகவும் பின்னர் அமெரிக்கா உட்பட மேற்குலகுக்கு எதிராகவும் எவ்வாறு உருவாகியதோ அவ்வாறே புதிய உலக ஒழுங்கில் இஸ்லாமியத் தீவிரவாதம் சீனாவுக்கு எதிராகவும் உருவாகும்.

மத்திய கிழக்கில் தொடர்ந்து இரத்தக்களரி ஏற்படாது இருப்பதற்கு சிறந்த விழிப்பை மனிதநேய செயற்பாட்டார்கள் ஏற்படுத்த வேண்டும். எந்த சுதேச மக்களும் தமது வளங்கள் சுரண்டப்படும்போது அதனை எதிர்ப்பது வழமை. ஆனால் உலக வல்லரசுகள் தமது நலன்களுக்காக ஆட்சி மாற்றங்களையும் யுத்தங்களையும் உருவாக்குகின்றன. தற்போதைய மாற்றமடையும் புதிய ஒழுங்கில் ஆப்கானிஸ்தான் மட்டுமல்ல இலங்கையும் ஒரு முக்கிய கேந்திர மாற்ற நிலையமாக உள்ளது. உலகில் சீனாவின் முதலீட்டுக்கு இணையாக ஏனைய வல்லரசுகளால் முதலிட முடியாது. இந்த நிலையில் இலங்கையில் பிராந்திய ரீதியான வல்லரசு ஆதிக்கங்கள் நிகழலாம். இலங்கையின் வடக்கு கிழக்கு மலையகப் பகுதிகள் இந்திய அரசின் செல்வாக்கால் அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்கு உட்படலாம். அதாவது இலங்கையின் திருகோணமலையில் ஐக்கிய அமெரிக்கா இந்தியாவுடன் இணைந்து ஒரு கடற்படைத்தளத்தை உருவாக்கலாம். ஏனெனில் ஆப்கானிஸ்தானில் சீனா காலூன்றும்போது, அதனைக் கண்காணிக்க இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த புள்ளியாக திருகோணமலை அமையும். மத்தியகிழக்கில் சீனாவைக் கட்டுப்படுத்த இலங்கையை சிறந்த தெரிவாக இஸ்ரேல் கருதுகின்றது. இதனால் புலம்பெயர் தமிழர்களை வடக்கு கிழக்கு அரசியலில் நேரடியாக ஈடுபடுத்தும் நிலை வரும். எனினும் உலக வல்லரசுகளின் ஆதிக்க ஒழுங்கில் அகப்பட்டு அழியும் இனங்களில் ஒன்றாக இஸ்லாமியர்களும் தமிழர்களும் அமைவது துர்லாபமே.






# எகிறும் நோயும் எரியும் வயிறும்!

வேலணையூர் சுரேஷ்

06. வழியெலாம் அழுகுரல், இரத்தக் கண்ணீர்
வடிக்கிறார் மாந்தர்; முதிர் வாழை,
பழக்குலை போலவே தலையைக் குத்தி,
பதறுறார் எங்கும் ஒப்பாரி ஓலம்!
விளப்பம் குன்றி வெம்புகின்றார்
விளங்கா நோய்க்கு அஞ்சுகின்றார்!
குழப்பம் மிஞ்சி இயல்பு வாழ்வில்
குலுங்கிப் போனார் கொரோனா வாலே!

07. கண்ணில் படாமல் வித்தை காட்டி,
கச்சித மாகவே நுழைந்து தாக்கி,
எண்ணற் றடங்காது எங்கும் பரவி,
எகிறிப் போச்சு கொரோனா "வைரஸ்"!
விண்ணுக்கு ஓடம் விட்டவர் கூட
விறைந்தா ரிந்தக் கொள்ளை நோய்க்கு!
நுண்ணங்கி ஆட்டும் ஆட்டத்தாலே
நுடங்கிப் போய் இவ்வுலகம் பாழே!

08. மணித்துளிப் பொழுதும் மரண வாடை
மனித முகத்தில் பயத்தின் சாடை!
இனித்துளி கூட நம்பிக்கை அற்று
இருப்புக்கு இறப்புக் கிடையிற் பாடை!
கணிப்பறி கின்ற விஞ்ஞானம் பொய்க்க,
காலக் கொடுநோய் கொன்று தீய்க்க,
இனிமேல் தவறின் கொரோனாக் காரர்
இடையில் விழுந்தே எழும்ப வேண்டும்?

09. மனக் கவலை, விரக்தி முற்றி,
மகிழ்ந்தே அறியா ஏழை, எளியோர்
தினக் கவலை நோயால் உற்றார்!
திமிறி யெழும்பும் வழியும் அற்றார்!
நினைத் தெவரைத் தாக்கும் என்று
நினைக்க முடியாக் கொள்ளை நோயால்;
அனைத்துப் பேரும் ஏக்கம் மிஞ்சி!
அரைச்சாண் குடலிற் கேது கஞ்சி?

10. சாவலை வீசிய கொரோனா கூடி
சாலைகள் தோறும் உடல்கள் மூடி!
மாமலை ஒத்த மனிதர் செத்தும்
மனிதரை மனிதர் தொடவும் பீதி!
ஆவலைக் கூட நிறைவேற் றாமல்
அவரவர் பாட்டில் அவரவர் செல்ல
காவோலை எரிவது போலவே எரியக்
கடவுளே மனிதருக்கு ஏனிவ் விதியோ?

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்கு அறிஞர்



ஒரு அறிஞர் ஆராய்ச்சி நூல் ஒன்று எழுதுவதற்காக அமைதியான இடத்தைத் தேடிக் கொண்டிருந்தார். அவர் அறியாமல், அரக்கர்கள் இருந்த பள்ளத்தாக்கை தன் இடமாகத் தேர்ந்தெடுத்தார். கோபமடைந்த ஒரு அரக்கன் அவரைப் பார்த்துக் கேட்டான்.

"யார் நீ? இந்த அமைதியான பள்ளத்தாக்கை கெடுக்க வந்தாயா?" என்றான்.

"தயவுசெய்து என்னை மன்னித்து விடு. நான் ஒரு அறிஞன். அமைதியான இடத்தைத் தேடிக் கொண்டிருந்தேன். அதனால், இங்கு வந்தேன்!" என்றார்.

"இதற்கு ஒரு விலை நீ கொடுக்க வேண்டும். நான் உன்னைக் குரங்காக மாற்றி விடுவேன். அதுதான் உனக்குத் தண்டனை!" என்று அந்த அரக்கன் கூறினான்.

அடுத்த கணம், அந்தக் அறிஞர் குரங்காக மாறிவிட்டார். அவர் விம்மி விம்மி அழுதார். ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குத் தாவிக் கொண்டிருந்தார். குரங்குகளைப் போல் பழங்களைத் தின்று வந்தார்.

அவர் நகரத்தை அடைந்தார். அங்கு ஒரு கப்பல் பாக்தாத் பட்டணத்துக்குப் புறப்பட இருந்தது. அவர் அதில் தாவி ஏறினார். அதிலிருந்த பயணிகள் கூச்சலிட ஆரம்பித்தனர்.

"குரங்கை வெளியே அனுப்புங்கள்; கொன்றுவிடுங்கள்!" என்று கத்தினர்.

கப்பலின் தலைவன் அந்த விலங்குக்காக வருத்தப்பட்டுச் சொன்னார்.

"வேண்டாம். அதுவும் நம்முடன் வரட்டும். யாருக்கும் அது தொந்தரவு தராதவாறு நான் பார்த்துக் கொள்கிறேன்!"

அந்தக் குரங்கு கப்பல் தலைவனுக்கு நன்றி உடையவனாய் இருந்தது. பாக்தாத்தில் ஒரு செய்தி பரவி இருந்தது. அரசருக்கு ஆலோசனை கூறுபவர் இறந்துவிட்டார் என, அரசர் அந்த இடத்துக்குத் தகுந்த ஆளைத் தேர்ந்தெடுக்க விரும்புகிறார் என அறிவித்திருந்தார். இப்பதவியை விரும்புவோர் ஏதேனும் ஒரு செய்தியைத் தகுந்த முறையில் எழுதி அனுப்பலாம். அவற்றுள் எது மிகவும் நன்றாக உள்ளதோ, அதை எழுதியவர் ஆலோசகராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்தக் குரங்கு அறிஞரும் செய்தியை எழுதினார். அரசருடைய சேவகர்களும், மற்றவர்களும் நகைத்தனர். ""இங்கே வேடிக்கையைப் பார். இந்தக் குரங்கு அரசருக்கு ஆலோசகராகப் போகிறதாம்!" என்று கேலி செய்தனர். ஆனால், எல்லாச் செய்திகளும் அரசரிடம் எடுத்துச் செல்லப்பட்டன. அரசர் எல்லாவற்றையும் படித்தார். அந்தக் குரங்கின் செய்தி மிகவும் நன்றாக இருந்தது.

அந்தக் குரங்கை நேர்முகத் தேர்வுக்காக அரசர் வரச் சொன்னார். அக்குரங்கு நல்ல கம்பீரமாக உடையணிந்து குதிரைமேல் ஏறி, பாக்தாத் தெருக்களில் ஊர்வலமாக வந்து அரசரைச் சந்தித்தது. அரசவையில் அதனிடம் நிறைய கேள்விகள் கேட்கப்பட்டன. அது எல்லாக் கேள்விகளுக்கும் அறிவுபூர்வமான சரியான விடைகளைக் கூறியது. அரசருக்கு அதை மிகவும் பிடித்து விட்டது. ஆனால், மந்திரிகள் தடுத்தனர்.

"எப்போதும் அதனால் பேச முடியாது. எப்படி ஒரு குரங்கு தலைமை ஆலோசகர் ஆகமுடியும்?" என்றனர்.

அரசர் தீர்மானமாக இருந்ததால் அவர் குரங்கையே தலைமை ஆலோசகராக நியமித்தார். அவருடைய புதல்வி, இளவரசி இந்தக் குரங்கு உண்மையில் குரங்கு அன்று. ஏதோ அரக்கர்களின் மாயத்தால் இவ்வாறு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறிந்தாள். அரக்கர்கள், அவர்களின் மந்திர வித்தைகள் போன்றவற்றை அவள் படித்துள்ளாள். அந்த மந்திரத்தால் குரங்குத்தன்மை மாறும்படி செய்தாள். அறிஞர் தன் பழைய நிலையை அடைந்தார். அவர் இளவரசிக்கு நன்றி கூறினார். பல ஆண்டுகள் அங்கு தங்கி நன்றியறிதலோடு அரசருக்குத் தகுந்த ஆலோசனைகளை வழங்கினார்.

**நீதி: அறிவுடையோர் எவ்வுருவில் இருந்தாலும் மதிக்கப்படுவர்.**





## விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்புக்களும்

மின்குமிழைக் கண்டுபிடித்தவர்?
**தோமஸ் அல்வா எடிசன்**

வானொலியைக் கண்டுபிடித்தவர்?
**மார்க்கோனி**

தொலைக்காட்சியைக் கண்டுபிடித்தவர்?
**ஜோன் லொகி பயாட்**

தொலைபேசியைக் கண்டுபிடித்தவர்?
**அலக்சாண்டர் கிரகம்பெல்**

கணினியைக் கண்டுபிடித்தவர்?
**சார்ள்ஸ் பபேஜ்**

தொலைநகலைக் கண்டுபிடித்தவர்?
**ஆர்தர்கோன்**

**ஷஸ்டிகா.செந்துராஜ்**
அங்கத்துவ இலக்கம் 140
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



## வாத்து

குள்ளக் குள்ள வாத்து
குளத்தில் நீந்தும் வாத்து
பள்ளம் மேடு பார்த்துப்
பைய நடக்கும் வாத்து!

வெள்ளை கறுப்புப் போன்ற
வேறு வேறு வண்ணம்
உள்ள போதும் கூட
ஒன்றாய்ச் செல்லும் வாத்து!

பள்ளிக்கூடம் செல்லும்
பாப்பாக் கூட்டம் போல
மெல்லச் செல்லும் நீரிலே


## வழிகாட்டுவோம்





## பிஞ்சு தூரிகை

**அன்றியா தகஷ்ரா காண்டீபன்**
தரம் 3A
யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி



## வால் இல்லாமல் பட்டம் பறக்காதா...?

வால் இல்லாமலும் பட்டம் பறக்கும். ஆனால், வாலுடன் பட்டம் பறக்கும்போது அதிகமாகக் காற்றில் அலைக்கழிக்கப்படாது. பட்டத்துக்கு சமநிலையைக் கொடுக்கும். வாலின் நீளமும் எடையும் அதிகரிக்க அதிகரிக்க பட்டம் நன்றாகப் பறக்கும். பட்டத்தின் நீளத்தைப் போல் மூன்று முதல் எட்டு மடங்கு வரை நீளமான வாலை வைத்துக்கொள்ளலாம்.


**துஷானி**, தரம்-9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்புரை (Cataract)






**என் அம்மாவுக்கு 60 வயதுக்கு முன்னர் கண்பார்வையில் எதுவும் பிரச்சினை ஏற்படவில்லை. ஆனால் இப்பொழுது பார்வை மங்குவதாக கூறவில்லை. வெளிச்சமான பொருள்களைப் பார்க்க முடியாமல் கூசுகின்றது எனவும் கூறுகின்றார். இது கட்றாக்ட் நோயா? அவ்வாறிருப்பின் சத்திரசிகிச்சை அவசியமா டாக்டர்? ஏன் இந்த நிலை ஏற்படுகிறது?**




சக்கரை நோய், ரத்தக் கொதிப்பு உள்ளவர்களுக்கு கண்புரை நோய் எளிதில் ஏற்பட்டு விடுகிறது. கேட்ராக்ட் வந்துவிட்டது என்ற உடன் கண்ணாடி அணிந்தால் போதும் சொட்டு மருந்து விட்டால் போதும் என்று நினைத்தால் அது தவறான எண்ணம்.
அறுவை சிகிச்சை மூலம் மட்டுமே கண்புரையை அகற்ற முடியும்.

## கண்புரை என்றால் என்ன?

பொதுவாக நமது கண்களிலுள்ள லென்ஸ் புரோட்டின் மற்றும் நீரினால் ஆனது. புரோட்டின் ஒரே மாதிரியான வரிசையில் உருவாகிக் கொண்டிருக்கும். இதனால்தான் நமது பார்வை சீராகவும், தெளிவாகவும் தெரிகிறது.

வயது ஆக ஆக அந்த புரோட்டின் சீராக உருவாகாமல் ஒரே இடத்தில் மாறி மாறி கூட்டமாக உருவாகும்போது அது திசுப்போல் உருவாகிறது. அதுதான் கண்புரை.

அது புரோட்டின்சேர சேர வளர்ந்து பெரிதாக காண்பிக்கிறது. இதனால் கண்பார்வை தெரியாமல் போய்விடும்.


ஆங்கிலத்தில் இதன் பெயரான கட்ராக்ட் என்பது இலத்தீனில் நீர்வீழ்ச்சி என்பதற்கான சொல் cataracta என்பதிலிருந்து வந்தது. தெளிவான நீர் ஓர் அருவியிலிருந்து கொட்டும்போது வெண்மையாக காட்சியளிப்பது போன்று கண்பார்வை மங்கலை இது குறிக்கிறது. பேச்சுவழக்கில் ஆங்கிலத்தில் இது pearl eyed என்றும் அழைக்கப்படுகிறது.

கண்புரைகள் தன் இயல்புநிலையிலிருந்து மாற்றமடைந்த ஒருவித புரதத்தால் ஆனவை பல ஆண்டுகள் ஆன பின்பும் கண்புரை (பெரும்பாலும்) பெரியளவு தீங்கு விளைவிப்பதில்லை என்றாலும் புரை முற்றிய பின்பு விழித்திரையை அடையும் ஒளியின் அளவு வெகுவாகக் குறைந்து பார்வையில் குறைவோ பார்வை முற்றிலும் பறிபோகக் கூடிய நிலையோ ஏற்படலாம். இதை அறுவை சிகிச்சை மூலம் சரி செய்யலாம். பொதுவாக இது இரு கண்களிலும் ஏற்படுமாயினும் ஒரு கண்ணுக்கும் மற்றொன்றுக்கும் இடையே கால இடைவெளி இருக்கும்.

கண்புரை நோய் ஒரு கண் அல்லது இரண்டு கண்களிலும் தோன்றலாம். பொதுவாக வேறுபட்ட கால இடைவெளிகளில் தோன்றும் . ஆனால் அது ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு பரவாது.



மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்
(யாழ்.போதனா மருத்துவமனை,
– சிலாபம் மாவட்டப்
பொது மருத்துவமனை)



துவக்கக் காலங்களில் கண்பார்வையில் சற்றே திறன் குறைந்து வெளிச்சமான பொருள்களைக் காண்கையில் கண் கூசும். இரவு நேரங்களில் வண்டி ஓட்டுபவர்கள் எதிர்வரும் வாகனங்களின் ஒளியால் அவதியுறுவர். ஒளிமாறுபாடுகளைக் கண்டறியும் திறன் பாதிக்கப்படும். இதனால் நிழல்கள், வண்ண மாற்றங்கள், வரி வடிவங்கள் காண்பது கடினமாகும். இந்த அறிகுறிகளைக் காணின் கண்மருத்துவர் ஒருவரை நாடுதல் வேண்டும். கண்புரை முதிர்ந்த நிலையில் பார்வை முற்றிலும் குறைபடுகிறது.

நகரப்பகுதிகளில், சர்க்கரைநோய் போன்ற காரணிகளால் புரை தோன்ற வாய்ப்புகள் உள்ளவர்கள் தெரு விளக்கைச் சுற்றி ஓர் ஒளிவட்டம் கண்டால், அதிலும் ஒரு கண்ணில் மட்டும், கண்மருத்துவரை நாடுதல்.

## நோயின் அறிகுறிகள்

கண்புரையை ஆரம்பத்தில் உணர்வது சற்று கடினமாக இருக்கலாம். இது தீவிரமாகும் நிலை என்றாலும், நோயின் தாக்கங்கள் மெதுவாக இருப்பதால், நீங்கள் மாற்றங்களைக் கவனித்திருக்கமாட்டீர்கள்.
பெரும்பாலும் பார்வையில் ஏற்படும் மாற்றங்கள் முதுமையை சார்ந்து இருக்கும்.

- மங்கலான அல்லது தெளிவற்ற பார்வை.
- இரவு நேரங்களில் பார்ப்பதில் சிரமம்.
- தெளிவாக பார்ப்பதற்கு பெரிய எழுத்துக்களாக இருத்தலும் கூடுதல் வெளிச்சமும் தேவைப்படுகிறது.
- வண்ணங்கள் பிரகாசமற்று தெரிதல்.
- சூரிய ஒளி அல்லது விளக்குகளை பார்க்கும் போது கண்களில் கூச்சம் ஏற்படுதல்.
- இரட்டை பார்வை.
- வெளிச்சமான/ஒளிரும் பொருள்களைச் சுற்றி ஒரு வளையம் அல்லது ஒளிவட்டம் தெரிதல்.
- மருந்தின் முறை மற்றும் கண்கண்ணாடி எண்ணில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்படுதல்.

## நோய் தாக்குதலுக்கான முக்கிய காரணங்கள்

*கண்புரை ஏற்படுவதற்கான காரணங்கள் பின்வருமாறு:*

1. வயது அதிகரிப்பு.
2. லென்ஸை உருவாக்கும் திசுக்களில் மாற்றங்கள்.
3. மரபணு கோளாறுகள்.
4. நீரிழிவு நோய் போன்ற பிற உடல் நலப் பிரச்சினைகள்.
5. அறுவை சிகிச்சை, தொற்று போன்ற முந்தைய கண் பிரச்சினைகள்.
6. ஸ்டெராய்டுகளின் நீண்டகால பயன்பாடு.
7. சர்க்கரை நோய், ரத்த கொதிப்பு உள்ளவர்களுக்கு கண்புரை நோய் எளிதில் ஏற்பட்டு விடுகிறது.

கேட்ராக்ட் வந்து விட்டது என்ற உடன் கண்ணாடி அணிந்தால் போதும், சொட்டு மருந்து விட்டால் போதும் என்று நினைத்தால் அது தவறான எண்ணம். அறுவை சிகிச்சை மூலம் மட்டுமே கண்புரையை அகற்ற முடியும்.

## மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள்

1. வாசிக்கும் துல்லியத்தை கணிப்பிடும் பரிசோதனை
2. லென்ஸ், கருவிழி, கண் விழிவெண்படலம் ஆகியவற்றின் இடைவெளியை பரிசோதித்தல். - Stit lamp test
3. கண்புரையை கண்டறியும் பரிசோதனைகள்

## கண்புரையின் வகைகள்

| | |
|---|---|
| முதுமைப் புரை | பொதுவாக 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஏற்படும் புரைகளில் 80 % இதுவாகும். |
| பிறவிப் புரை | குழந்தைகளுக்கு ஏற்படுவதும் பரம்பரையாகவோ, கர்ப்ப காலத்தில் தாய்க்கு உண்டாகும் நோயின் காரணமாகவோ ஏற்படலாம். |
| கண்ணில் ஏதும் அடிபடுவதால் ஏற்படும் புரை | எவ் வயதினருக்கும் ஏற்படலாம் பலத்த அடி, வெட்டுக்காயம், இரசாயன பொருள்கள் கண்ணில்படுவது, விபத்து போன்றவற்றால் ஏற்படுவது. |
| மருந்துகளால் ஏற்படும் புரை | நீண்ட நாள் ஸ்டீரொயிட் சொட்டு மருந்து உபயோகம் பொதுவாக ஆஸ்துமா? மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கு ஏற்பட வாய்ப்பு அதிகமுண்டு. |

## சிகிச்சை

**5 நிமிடங்களில்...**

- **உறையிலிருந்து வில்லையை நீக்குதல்** (extracapsular cataract extraction, or ECCE)
- **உறையுடன் வில்லையை நீக்குதல்** (intracapsular cataract extraction, or ICCE).

இரண்டு முறைகளிலும் புரைவிழுந்த கண்வில்லை நீக்கப்பட்டு அதனிடத்தில் நெகிழ்வினால் ஆன வில்லையொன்று நிலையாகப் பொருத்தப்படுகிறது.

கண்களில் அறுவை சிகிச்சை என அச்சம் தேவையில்லை. ஊசி இல்லை. தையல் இல்லை. வலி இல்லை, நவீன மருத்துவ முறையில் பாக்கோ எமுல்சிபிகேஷன் முறைப்படி மிக எளிதாக 5 நிமிடங்களில் கண்புரை அகற்றப்பட்டு அன்றே வீட்டுக்கு திரும்பலாம். பாக்கோ முறையில், பாதிக்கப்பட்ட கண் உள்விழி லென்சை அகற்றிவிட்டு செயற்கையாக உள்விழி லென்ஸ் பொருத்தப்படுகிறது. இவை அனைத்தும் 5 நிமிடங்களில் செய்யப்பட்டு இழந்த பார்வையை மீட்டுத் தருகிறது.

வெளிநாடுகளிலும், உள்நாடுகளிலும் தயாரிக்கப்பட்ட தரமான, நவீன லென்ஸ்கள் கிட்டப்பார்வை, தூரப் பார்வைக்கு ஏற்றபடி உள்விழி லென்ஸ் பொருத்தப்படுகிறது. கண்புரை ஏற்பட்ட உடன் உரிய கண் மருத்துவரை அணுக வேண்டும். அவரது ஆலோசனைப்படி கண்புரை தொடக்க நிலையில் இருந்தால் பெக்கோ முறையில் கண்புரையை அகற்றிவிடலாம். கண்புரையை வளர விடுவது நல்லதல்ல.

கண்புரை அறுவை சிகிச்சைக்குப் பின்னர் மறுநாளே அனைத்து வேலைகளையும் செய்யலாம். கண்களை மறைக்கும் பச்சைக்கலர் துணி தேவையில்லை. கருப்பு கண்ணாடி மட்டும் 5 நாள்கள் அணிந்தால் போதும். சொட்டு மருந்து 30 நாள்களுக்கு கண்ணில் ஊற்றிக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ ரேச்சல்.ம

# நானாகிய நதிமூலமே..!



அன்று ஞாயிற்றுக் கிழமை. ஆறுதலாகத் தன் அறையை அடுக்கத் தொடங்கியவள்,தான் இறுதியாக மேடையில் தோன்றிய பரிசளிப்பு விழாவின் புகைப்படங்கள் கண்ணில் தட்டுப்பட்டதும் அவற்றைக் கூர்ந்து பார்த்தபடி அமர்ந்துவிட்டாள். அவளின் அழகிய பள்ளிப்பருவம் மின்னலைகள் கண்முன் வெட்டி மறைய லேசாகப் பனித்த கண்களை மூடிக் கொண்டே அந்த அல்பத்தை தன் நெஞ்சோடு அணைத்துக்கொண்டாள். அவை வெறும் புகைப்படங்களல்ல. அவள் ஆன்மாவின் ஓர் அங்கமாகிப்போன வாழ்வின் தருணங்கள்.

"எக்ஸ்க்யூஸ் மீ மிஸ், ஆராதனாவை அஞ்சலி மிஸ் வரட்டாம் "

மூன்றாம் பாடவேளை, விஞ்ஞான ஆசிரியை தரம் '10ஏ' மாணவர்களுக்கு 'எலக்ட்றோலைசிஸ்' பற்றி விளக்கிக் கொண்டிருந்தபோது உயர்தர வகுப்பு மாணவி மாதவி வந்து வாசலில் நின்றாள். பாடப்புத்தகத்தை மேசையில் சட்டென்று வைத்துவிட்டு ஆராதனாவை நோட்டம் விட்டார் ஆசிரியை. அவள் அழைக்கப்பட்டதன் காரணம் இருவருக்கும் தெரியும்.

"போ, இனி பிறைஸ் டே முடியுமட்டும் உன்ன காணக் கிடைக்காது இப்பிடியே திரி, ஓ.எல்ல என்ன பிரட்டுறாயெண்டு பாக்கத்தானே போறன்"

நக்கல் கலந்த கடுகடுப்புடன் கூறிவிட்டு அவளை வெறித்துப் பார்த்தபடி நின்றார் அவர். ஆராதனா மெதுவாகத் தன் புத்தகத்தை மூடியவாறே எழுந்து "தங்க்யூ மிஸ்" என்று முனகிவிட்டு தன் சிவப்பு நிற பைஜாமாவையும் எடுத்துக்கொண்டு மாதவி அக்காவைப் பின்தொடர்ந்தாள்.

"அக்கா நான் யாரோட?"

அவள் வகுப்பு இருந்த கட்டடத் தொகுதியைத் தாண்டிய போது மெதுவாக கேட்டாள் ஆராதனா.

"எங்களோடதான், சின்ன ஆக்களுக்கு ஷாலினி மிஸ் பழக்கிறா" மாதவி அக்கா கூறிக்கொண்டே வேக வேகமாக நடந்தார். ஒரு நிறைவான புன்னகையுடன் பின்தொடர்ந்தாள் ஆராதனா. இருவரும் நடன அறைக்குள் நுழைந்தபோது அஞ்சலி மிஸ் தட்டுக்கழி தெறிக்குமளவு உரமாக ஜதிக்கட்டுக்களை சொல்லிக் கொண்டிருந்தார். அவரின் முன்பாக நான்கு உயர்தர மாணவிகள் நிலம் அதிர கோர்வைகளைப் பொழிந்து கொண்டிருந்தார்கள்.

"மாதவி, உங்கட ஜதிய அவக்கு சொல்லிக்கொடுங்கோ, வாறன்"

அவர்களின் பயிற்சி முடிந்ததும் மாதவி அக்காவுக்கு உத்தரவு பிறப்பித்துவிட்டு அஞ்சலி மிஸ் வெளியே சென்றார். அது அவரின் ரீ ரைம்'.

"ஆரா, வாரும்" மாதவி அக்கா அந்த அறையின் பின் மூலைக்கு அழைத்துச்சென்று அதுவரை தான் பயின்ற ஜதிகளை அவளுக்கு சொல்லிக்கொடுக்கத் தொடங்கினார். ஆராதனா மிகச்சிறிய வயதிலேயே பரதம் பயிலத் தொடங்கிவிட்டாள். அவளிடம் இயல்பாகவே இருந்த நளினமும் நடனத்தின் மீது அவள் கொண்டிருந்த காதலும் அவளின் வயதையொத்த மாணவிகளை விட அவளை சற்று துலக்கமானவளாக்கியது. அவளின் வயதுக்கு சற்று மீறிய உருப்படிகளை ஆடுவதில் அவளுக்கு அதிக சிரமம் இருந்ததில்லை . ஓரிரு முறைகளுக்குள் கோர்வைகளைப் புரிந்துகொள்வாள். அவற்றை இயல்பாக நினைவில் இருத்திக்கொள்வாள். எல்லாவற்றுக்கும் மேலாக, தனக்கே உரிய அழகிய புன்சிரிப்புடன் அவையோர் அனைவரையும் கவர்ந்து கொள்வாள். தரம் ஆறிலிருந்தே அநேகமாக ஒவ்வொரு வருடமும் தமிழ் விழாவிலும் பரிசளிப்பு விழாவிலும் மேடையேறி விடுவாள்.

✦✦✦✦

"ஆரா! இங்க வாரும், இவன் சிணுங்கிறான் "

வரவேற்பறைக் கூடத்திலிருந்து ஆதித்தன் அழைப்பது கேட்டு சுயநினைவுக்குத் திரும்பினாள் ஆராதனா.

" ஓம் வாறன்!"

அவசர அவசரமாக அந்த அல்பத்தை தன் தலைமாட்டில் மெத்தைக்கடியில் புதைத்து விட்டு வரவேற்பறையை நோக்கி விரைந்தாள். அங்கு அவள் கண்ட காட்சி அவளால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

"என்ன ஐசே இது?" அவள் சிரித்துக்கொண்டே ஆதித்தனிடமிருந்து தன் மகன் ராகுலனை வாங்கிக் கொண்டாள். "இங்கே, இவன் சூ அடிச்சிட்டான் எனக்கு மேல " ஆதித்தன் முறைப்பட்டுக் கொண்டான்.

"உம்ம என்ன சொன்னான்? பம்பஸ் போட்டு விடும் எண்டு..."

"அட, அத எப்பிடி போட்ற எண்டு கண்டு பிடிக்கிறதுக்குள்ள ஊத்த வேல பாத்திட்டான் இவன், பௌசர்" ஆதித்தன் இடைமறித்துக் கூறினான்.

"உம்மட பெடி யாரப் போல இருக்கும் பின்ன!" அவள் சிரித்துக் கொண்டே தன் குழந்தையை குளியலறைக்குள் எடுத்துச்சென்றாள். "இங்க வந்து பாரும் எப்பிடி போடுற எண்டு, ஆதீ..."

"வாறேன்..." அவனும் கூவிக்கொண்டே வந்து சேர்ந்தான், பம்பஸ் போடுவது எப்படி என்று கற்றுக்கொள்ள. பிள்ளை வளர்ப்பு பற்றி எதையுமே அறிந்திராத தன் கணவனின்

## சிறுகதை

ஆண் உலகம் அவளுக்கு இடைக்கிடை வெறுப்பூட்டினாலும் தன் பங்குக்கான பொறுப்புக்களை உணர்ந்து அவற்றை ஏற்றுக்கொள்ள முன்வரும் ஆதித்தனின் அன்பை அவளால் பாராட்டாமல் இருக்கமுடிவதில்லை. அன்பான கணவனாக மட்டுமல்லாமல், பொறுப்பான தந்தையாகவும் இருக்கத் துடிக்கும் தன் ஆதியை எண்ணி அவள் பூரித்துப் போவதுண்டு. அன்று ஞாயிறு விடுமுறை என்பதால், தன் மகனைத் தன் பொறுப்பில் விட்டுவிட்டு வேறு வேலைகளை பார்த்துக்கொள்ளுமாறு அவன் கூறியபோதும் அவள் அவ்வாறே பூரித்துப் போனாள். ஆனாலும், ஆதித்தன் அடிக்கொருமுறை தன்னைக் கூப்பிடுவான் என்பது அவளுக்கு நன்றாகவே தெரியும். ஏனெனில் அவனிடம் ஆர்வம் இருந்த அளவுக்கு ஆயத்தம் இருப்பதில்லை. திருமணம் முடிந்த நாளிலிருந்தே ஆராதனாவுடன் வீட்டு வேலைகளைப் பங்கிட்டுக்கொள்வதில் அவன் அதிக கரிசனை எடுத்துக் கொண்டான்.

"ரெண்டு பேரும் வேலைக்கு போறம், உழைக்கிறம். ரெண்டு பேரும் தான் இங்க இருக்கிறம். ரெண்டு பேரும் தான் சாப்பிடுறம், சோ, வேலையும் ரெண்டு பேரும் தான் செய்ய வேணும். ஃபிஃப்டிஃபிஃப்டி" ஆராதனா அவனைப் பேசாமல் இருக்குமாறு சொன்னால் இப்படி ஏதாவது காரணங்கள் கூறி தானும் இணைந்து கொள்வான். ஆனால் ஆராதனா அவனைத் தன் வேலைகளில் அனுமதிக்காததற்கு மிக முக்கிய காரணம், ஆதித்தனுக்கு வீட்டு வேலைகளில் எழும் சந்தேகங்களை தீர்த்து வைப்பதற்குள் அவளின் பாதி ஜென்மமே முடிந்துவிடும்! சமையலென்று போனால், "ஆரா, உப்பு எங்க?" "தூள் எங்க?" "வெங்காயம் எப்பிடி வெட்டுற?" "சின்ன வெங்காயமா பெரிய வெங்காயமா?" சலவை செய்வதென்றால், "சேர்வெக்ஸல் எங்க?" "எங்க காயப்போட?" "உம்மட உடுப்பு இருந்தா தாரும்" "ஓய், இந்த ஷேட் மிஷின்ல தோய்க்கவா கையால தோய்க்கவா?"

வீட்டைத் துப்புரவுசெய்யும்போது, " இந்த கோர்ட்டின மாத்துவம்" "மேல தூசி, ஃபான் நான் துடைக்கிறன் நீர் இறங்கும் " "மொப் பண்ண வேணும், லைஸோல் எங்க?" என்று எல்லாவற்றிலும் அவனுக்கு ஆயிரம் கேள்விகள் பிறக்கும். ஆனால் ராகுலன் பிறந்த பிறகு ஒரே விடயம் தான்,

"ஆரா! இவன் சிணுங்கிறான் "

**"நீர் அல்பம் பாத்தது, அத கட்டிபிடிச்சுக் கொண்டிருந்தது, கொஞ்சம் கண்ணீரும்... நான் கண்டனான்" ஆதித்தன் அவள் தலைமாட்டைப் பார்த்தபடி பேசினான். அங்கு மறைக்கப் பட்டிருந்த அவளின் ஆன்மாவோடு உரையாடுவது போல.**



சில நேரங்களில் ஐ.ஐ.டியில் பயின்ற பொறியிலாளனா இது என்பது போலிருக்கும் ஆராதனாவுக்கு எப்படி இருந்தாலும் அவனின் எல்லாப் பரிணாமங்களையும் அவள் மனதார நேசித்தாள். அதே போல அவளின் அத்தனை அவதாரங்களையும் அவனும் ஆழமாக அன்பு செய்தான்.

"அடே! இவ்வளவு தானா! இனி பாரும் எப்பிடி மாத்திறனெண்டு.." கண்ணடித்துக் கொண்டே தன் மகனைத் தூக்கிக்கொண்டு வரவேற்பறையை நோக்கி நடந்தான். தன் தந்தையின் ஸ்பரிசத்தால் நிறைந்த அந்தப்பாலகன் அழகாக கண்களைச் சிமிட்டியவாறே அவன் தோள்களில் சாய்ந்து கொண்டான். ஆராதனா மெல்லிய சிரிப்புடன் அறைக்குள் சென்றாள். அறையினுள் அடுக்க வேண்டியவை நிறையவே இருந்தன.

"குட்டி நித்திரையா?" கேட்டுக்கொண்டே அவள் அருகில் வந்து அமர்ந்தான் ஆதித்தன். "ஓம் ஆதி, இப்ப தான் நித்திரையாப் போனான். நீர் படுக்கேலயா?" அவள் அவனைப் பார்த்து அமர்ந்துகொண்டாள்.

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

ந.பரமேஸ்வரன்

# யாழ்ப்பாண வரலாறு

## 1505-1948 வரை

**1624** ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆரம்பமான கோட்டை கட்டும் பணி 1632 இல் முடிவடைந்தது. இந்தக் கோட்டை கிரேக்க கட்டடக்கலை வடிவில் சற்சதுரக் கோட்டையாக அமைந்திருந்தது. நல்லூர் கந்தசாமி கோயிலை இடித்த கற்களைக் கொண்டே யாழ்ப்பாணத்தவர்களை நல்லூரிலிருந்து கோட்டை வரை மனிதச்சங்கிலியாக நிற்க வைத்து கைகளால் கற்களை பரிமாறியே கோட்டை கட்டப்பட்டதாக 'செங்கை ஆழியான்' குறிப்பிட்டுள்ளார். கோட்டையினுள் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றும் கட்டப்பட்டது; இந்தத் தேவாலயத்துக்கு புதுமைமாதா அல்லது அற்புதமாதா ஆலயம் என( Our Lady Miracle Church) பெயர் சூட்டப்பட்டது. திருக்கேதீஸ்வரம் சிவன்கோயிலை இடித்த கற்களை கப்பல் மூலம் எடுத்து வந்தே இந்த ஆலயம் கட்டப்பட்டது; நல்லூர்க் கந்தசாமி கோயில் கூரை புதுமை மாதா ஆலயத்துக்கு பொருத்தப்பட்டது.( ஆதாரம் Catholic Guardian 15.4.1916.)

யாழ்ப்பாணம் புதிய தலைநகராக உருவெடுத்தது. யாழ்ப்பாண ஆளுநர் ஒலிவேறாவின் அலுவலகமும் வசிப்பிடமும் கோட்டைக்குள் இருந்தன. ஊர்காவற்றுறையிலும் ஒரு கோட்டை அமைக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கோட்டையில் 150 போர்த்துக்கீச வீரர்களைக் கொண்ட மூன்று படையணிகளும் (battalion) ஊர்காவற்றுறையில் 50 வீரர்களைக் கொண்ட படையணியும் இருந்தன. இவர்களுடன் உள்ளூர்ச் சிப்பாய்களைக் கொண்ட படையணியும் (Lascarine) இருந்தது.



ஊர்காவற்றுறைக் கோட்டை இது. ஊருண்டிக் கோட்டை என அழைக்கப்படுகிறது

யாழ்ப்பாணவாசிகள் கோட்டைக்குள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். இவர்கள் காலை 7 மணி முதல் 11 மணி வரையும் மாலை 2 மணி தொடக்கம் 5.00 மணி வரையும் வேலை செய்தனர். கோட்டைக்கு வெளியே 300 போர்த்துக்கீசக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. ஊர்காவற்றுறைக் கோட்டை இப்போதும் காணப்படுகிறது. இது ஊருண்டிக் கோட்டை என அழைக்கப்படுகிறது.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தை 32 கோயிற்பற்றுகளாகவும், வன்னியை 6 கோயிற்பற்றுகளாகவும் மன்னாரை 7 கோயிற்பற்றுகளாகவும் பிரித்து ஆட்சிசெய்தனர். ஒவ்வொரு கோயிற்பற்றிலும் ஒவ்வொரு தேவாலயமும் இயேசு சபை பாடசாலையும் இருந்தன. இவ்வாறு பிரிக்கப்பட்ட கோயிற்பற்றுகள் வருமாறு:

**வலிகாமம் 14**
நல்லூர், சுண்டுக்குழி, வண்ணார்பண்ணை, மானிப்பாய், சங்கானை, பண்டத்தரிப்பு, மயிலிட்டி, வட்டுக்கோட்டை, அச்சுவேலி, தெல்லிப்பழை. புத்தூர், கோப்பாய்

**வடமராட்சி 03**
உடுப்பிட்டி, கட்டைவேலி, பருத்தித்துறை

**தென்மராட்சி 05**
சாவகச்சேரி, எழுதுமட்டுவாள், வரணி, கச்சாய் , நாவற்குழி

**தீவகம் 06**
காரைதீவு, அல்லைப்பிட்டி, நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, ஊர்காவற்றுறை.

**பச்சிலைப்பள்ளி 04**
புலோப்பளை, தம்பகாமம், முகமாலை, முள்ளிப்பற்று.

**வன்னி 06**
பூநகரி, பலவராயன்கட்டு, பெருங்களி, மாந்தை, நானாட்டான், அரிப்பு.

**மன்னர் 07**
எருக்கலம்பிட்டி, சீதாரி, தோட்டவெளி, பேசாலை, கரிசல், சம்பேதுரு, தலைமன்னார்.

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர் அமைத்த பாடசாலைகளுக்கு போர்த்துக்கல் அரசரால் நியமிக்கப்பட்ட காப்பாளர்களின் விபரம்.

| | |
|---|---|
| பளை | Crucifix |
| அச்சுவேலி | Holy Ghost |
| மல்லாகம் | St Ignatias |
| தெல்லிப்பளை | St Paul and St Peter |
| பண்டத்தரிப்பு | Our Lady Remedies |
| வட்டுக்கோட்டை | Assumption of Our Lady |
| சங்கானை | Hloy Trinity |
| காரைதீவு | Our Lady Remedies |
| மயிலிட்டி | Our Lady Angeis |
| தம்பகமம் | Native of Our Lady |

1623 ஆம் ஆண்டு ஒலிவேராவின் கட்டளைப்படி தோம்பு எழுதப்பட்டது.

1627 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் கடும் புயல் வீசியதுடன் இராட்சத அலைகள் கோட்டை மதிலுக்கு மேலால் நீரை கோட்டைக்குள் வாரி இறைத்தன; கோட்டைக்குள் இருந்தவர்கள் அனைவரும் புதுமைமாதா ஆலயத்தினுள் தஞ்சமடைந்தனர். ஊர்காவற்றுறையிலும் இதேநிலைதான். பண்ணைக் கடற்கரையில் நின்ற படகுகள் ஒரு மைல் தூரத்துக்கு அடித்துச் செல்லப்பட்டிருந்தன.

1628 ஆம் ஆண்டு மட்டக்களப்பும் திருகோணமலையும் யாழ்ப்பாண நிர்வாகத்தின் கீழ்கொண்டு வரப்பட்டன. யாழ்ப்பாண நகரத்தில் டொமிக்கன் சபையும் புனித பிரான்சிஸ் சபையும் கன்னியர்மடமும் இருந்தன. இவற்றில் முறையே நாற்பது ஐம்பது குருமார் இருந்தனர். ஒருவாறு உள்ளூர்க் கலகங்கள் யாவும் அடக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் அமைதி நிலவியது.

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கீசருக்கு கோட்டை இராச்சியத்தைப் போல் பெரிதாக நிலங்கள் தேவைப்படவில்லை. காரணம் கோட்டை இராச்சியத்தில் பாக்கு, மிளகு என்பவை உற்பத்தி செய்யப்பட்டன. யாழ்ப்பாணத்தில் அவ்வாறு எதுவும் உற்பத்தி செய்யப்படவில்லை .

போர்த்துக்கீச வீரர்கள் தங்குவதற்கு மட்டும் இடம் தேவைப்பட்டது. முதல் பத்து ஆண்டுகள் கோட்டை இராச்சியத்தில் ஏற்பட்ட அதேநிலை யாழ்ப்பாணத்திலும் போர்த்துக்கீசருக்கு ஏற்பட்டது. யாழ்ப்பாணவாசிகள் போர்த்துக்கீசருக்கு நிலங்களைக் கையளிக்க விரும்பவில்லை.

போர்த்துக்கீசர் நிலம் தொடர்பாக வங்குரோத்து வேலைகளில் ஈடுபடவில்லை. ஆயினும் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் கொஞ்ச நிலம் போர்த்துக்கீசருக்குரியதாகவிருந்தது. நாட்டை விட்டு வெளியேறிய அரச குடும்பத்தினரின் காணிகள், கலகம் விளைவித்தவர்களின் காணிகள், வாரிசு இல்லாமல் இறந்ததால் முடிக்குரிய காணிகளாக மாற்றப்பட்ட நிலங்கள் என்பவை போர்த்துக்கீசருக்கு சொந்தமானவையாக இருந்தன. இந்தக் காணிகள் இராணுவத் தேவைகளுக்காகவும் இராணுவத்தில் பணியாற்றிய கப்டன், மேஜர் போன்றவர்களின் நண்பர்களுக்காகவும் ஒதுக்கப்பட்டன.

(வரலாறு நீளும்)



# சீனாவை...

இதனால் சீனா மீது பூட்டான் மக்களுக்கு இன்னும் வெறுப்புணர்வை ஏற்பட்டது.

2018 ஆம் ஆண்டு கசகஸ்தான் நாட்டில் சீனா கனிம வளங்களை எடுப்பதற்கு வசதியாக , அந்த நாட்டு அரசாங்கம் நிலச் சீர்திருத்தச் சட்டத்தை அறிமுகப்படுத்தியது. இதனை கசகஸ்தான் மக்கள் ஏற்கவில்லை. தமது அரசாங்கத்துக்கும் சீன நிறுவனங்களுக்கும், எதிரான போராட்டங்களை நடத்தினர். சீன நாட்டின் சிஞ்சியாங் மாகாணத்தில் வாழும் உய்குர் இஸ்லாமியப் பழங்குடி மக்களுக்கு எதிராக சீன அரசு நடத்தும் மனித உரிமை மீறல்களாலும் கசகஸ்தான் மக்கள் வெறுப்புணர்வு கொண்டுள்ளனர். இந்த இரு நாடுகளுக்கிடையேயும் வர்த்தகச் செயற்பாடுகள் கூடப் பெரியளவில் இல்லையெனலாம்.

இதேவேளை, சீனாவின் கோர முகத்தை நினைவூட்டும் தியனன்மென் சதுக்கம் படுகொலை (1989 Tiananmen Square protests) நினைவு நாள் கடந்த ஜூன் மாதம் தலைநகர் பீஜிங்கில் நடைபெற்றது. 1989 ஆம் ஆண்டு ஜனநாயகக் கோரிக்கையுடன் சீனாவில் ஒரு மகத்தான இயக்கம் இயங்கியது. சீனாவின் சீர்திருத்தவாதியான ஹ யோபாங்கின் இறப்பில், சதி உள்ளதாக, ஜனநாயக ஆதரவு மக்கள் சந்தேகித்தனர்.

அப்போதைய சீன கம்யூனிஸ்ட் அரசாங்கத்துக்கு எதிராக மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பெரும் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன்போது, சுமார் 10 ஆயிரம் மக்கள் சீனா இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர். 32 ஆண்டுகளின் பின்னர் இந்த நினைவு நாள் சென்ற ஜூன் மாதம் அனுஷ்டிக்கப்பட்டதுடன் சீனாவின் உல ஆக்கிரமிப்புகள் மற்றும் ஊடக சுதந்திரம் மற்றும் உய்குர் இஸ்லாமிய மக்கள் மீதான மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கப்பட்டது.

ஆகவே இதன் பின்னணியில் ஈழத்தமிழர்கள் வடக்கு, கிழக்கில் சீன முதலீடுகள் குறித்துச் சிந்திக்கலாம். ஆனால் அமெரிக்க, இந்திய அரசுகளின் தேவைக்கு ஏற்ப எதிர்ப்புகள் அமையக்கூடாது. அத்துடன் பௌத்த தேசியத்தை உள்வாங்கி சீனாவும் வடக்கு, கிழக்கில் பொருளாதாரத் திட்டங்களை முன்னெடுக்க முடியாதென்ற கருத்துக்கள் உணர்த்தப்பட வேண்டும். அரசு அல்லாதவொரு நிலையில், அரசியல் விடுதலை கோரி , போரால் பாதிக்கப்ப - தேசிய இனமாக ஈழத்தமிழர்கள் தம்மை வெளிப்படுத்தும்போது சீனா போன்ற வல்லரசுகள் அதனைப் புறம்தள்ள முடியாது. இந்தியத் தூதுவரைச் சந்திக்க முற்படும் வேகம் சீனத் தூதுவரைச் சந்திப்பதிலும் இருக்க வேண்டும். இந்தியப் பொருளாதாரத் திட்டங்களுக்கு எதிரான சிங்கள அரசியல் கட்சிகளின் போராட்டங்களை ஜனநாயகமாகவும், சீனாவுக்கு எதிரான மென்போக்கு எதிர்ப்புகளை அன்பாகவும் சித்தரிக்கும் சிங்கள ஆட்சியாளர்கள், ஈழத்தமிழர்களின் அரசியல் கோரிக்கையை மட்டும் பயங்கரவாதமாகக் காண்பிக்கும் அநியாயம் பற்றியும் உரத்துச் சொல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதுபெரும் எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் (கி.ரா.வின்) நண்பரும் எழுத்தாளருமான பேராசிரியர் அ.ராமசாமி, அவரின் 40 ஆண்டு கால நண்பர். அவரோடு கொண்ட நட்பை 'உதயன் - சஞ்சீவி' வாசகர்களுக்காக நினைவுக் குறிப்புகளாகத் தருகிறார்.

**பேராசிரியர் அ.ராமசாமி**
தமிழ்த்துறை (பணி நிறைவு) மனோன்மணி சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு.

# கி.ரா.: நினைவுகள்

24



புதுச்சேரி பல்கலைக்கழகத்துக்கு வருவதற்கு முன்பே சிறு கதைகளை நாடகமாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தேன். சுந்தரராமசாமியின் 'பல்லக்குத்தூக்கிகள்' சிறுகதையை நாடகமாக்கிப் பலதடவை மேடையேற்றியிருந்தேன். திருவண்ணாமலை. சென்னை பரிக்ஷா குழுவினர் கூட அந்தப் பிரதியை மேடையேற்றினார்கள்.

அதைப்போலவே புதுமைப்பித்தனின் 'சிற்பியின் நரகம்' கதையையும் நாடகமாக்கி ஒத்திகை பார்த்துக்கொண்டிருந்தோம். மதுரை நிஜ நாடக இயக்கத்தின் கலைவிழாவில் மேடையேற்றுவதற்காகக் கூட்டுக்குரல் நாடகக் குழுமூலம் வேலை செய்து கொண்டிருந்தோம். எங்களது ஒத்திகைகள் பெரும்பாலும் பாண்டிச்சேரியின் மிஷன் தெருவில் உள்ள கல்வே கல்லூரியின் மைதானத்தில் அல்லது திறந்திருக்கும் வகுப்பறை ஒன்றில் நடக்கும்.

புதுமைப்பித்தன் கதையை நாடகமாக்கியிருந்த தகவலை கி.ரா.விடம் சொல்லியிருந்தேன். கல்வே கல்லூரிப் பக்கம் வந்தால் ஒத்திகையைப் பார்த்து கருத்துச் சொல்லுங்கள் என்றும் சொல்லியிருந்தேன்.

ஒருநாள் வருகிறேன் என்று சொல்லியிருந்தார். அம்மாவோடு வந்து பார்த்துவிட்டுக் கடற்கரைக்குப்போகும்திட்டம். அதன்படி வந்து பார்த்துவிட்டுக் கடற்கரைக்கு மாலை நேரக்காற்று வாங்கப்போய்விட்டார். கருத்து எதுவும் சொல்லவில்லை. 'வீட்டுக்கு வாங்கோ, பேசலாம்' என்று சொல்லிவிட்டுப் போனார்.

ஒருநாள் கழித்து அவர் வீட்டுக்கு போனபோது புதுமைப்பித்தன் கதையில் இல்லாத பகுதியையெல்லாம் சேர்த்த மாதிரி இருக்கே. அத்தோட அவரோட கதையிலெ' ஒரு தேவாரப்பாட்டு இருக்கு; ஆனா ஒங்க நாடகத்திலெ நாட்டுப் புறப்பாட்டெல்லாம் இருக்கு' என்று சொல்லிவிட்டு, நாடகம் முடியும்போது புதுமைப்பித்தன் கதையில் விவரிக்கும் விவாதம் இருக்கு. பொதுவா ஒரு வடிவத்திலிருந்து இன்னொரு வடிவத்துக்குப்போகும்போது அதன் பகுதிகளை விடவேண்டியது இருக்கும், ஆனா புதுசா சேர்த்தா. எழுதினவன் கதை காணாமல் போயிடுமில்ல என்று கேட்டார். இன்னொரு வடிவத்துக்கு மாற்றும்போது விடுற மாதிரி கூடுதலாச் சேர்க்கிறதும தவிர்க்க முடியாதுன்னு சொன்னேன. ஒரு கதை ஒருவரின் வாசிப்புக்கானது; நாடகம், சினிமால்லாம கூட்டமா ஒக்காந்து பார்க்கிற பார்வையாளர்களுக்கானது; அதனாலெ அதிலெ சேர்க்க வேண்டிய கூறுகளெச் சேக்கவும் வேணும். அந்த அடிப்படையிலெ தான் புதுமைப்பித்தன் கதையிலெ கதைசொல்லியெ தூக்கிட்டு. ஒரு குழுவ வைச்சு நாடகத்தின் நிகழ்வுகளெச் சொல்ல வச்சிருக்கேன். அந்தக் குழு பாட்டு மூலமா பார்வையாளர்களுக்கு நாடக நிகழ்வுகளெ முன்வைக்குது" என்று விளக்கினேன்.

"நீங்க இப்படி சொல்றீங்க; ஆனா என்னோட நாற்காலி கதையெ கோமல் சுவாமிநாதன் நாடகமா ஆக்கினாரு. கோமல் குழுவில இருந்த வாத்தியார் ராமனெல்லாம் அதில நடிச்சாரு. அந்த நாடகப் பிரதியெ எனக்கு அனுப்பியிருந்தாரு. மேடையேத்திறதுக்கு அனுமதி வேணும்னு கேட்டாரு. நானும் படிச்சுப் பார்த்துட்டு பேஷாப் போடுங்கோன்னு சொல்லிட்டேன். சென்னையில ஒரு எழுத்தாளர் மாநாட்டில தான்போட்டாரு. நான் போய்ப்பாக்கல" என்று சொல்லிவிட்டு சுந்தரராமசாமியோட கதையெ நாடகமாக்கினீங்களே; அவர் பாக்க வந்தாரான்னு கேட்டார். முதல் மேடையேற்றத்துக்கு மதுரைக்கு வருகிறேன் எனச் சொன்னார். ஆனால் அந்த நாளுக்கு முன்னால்' பல்வலி, அதனாலெ வர இயலாது; நாடகமாப் போடலாம்னு எழுதி ஒரு கார்டு போட்டிருந்தார்' என்றேன். அதன் பிறகு நாவல், சிறுகதைகளைச் சினிமாவாக்குவது பற்றி பேச்சு திசைமாறி முடிந்தது.

"நீங்க என்னோட சிறுகதைகள்ல ஏதாவது ஒன்னெ நாடகமாக்கலாமே" என்றார். அப்படி நேரடியாகச் சொல்வார் என்று நினைக்கவில்லை. அவரது சிறுகதைகள் பலவும் நடப்பியல்கதைகள். ஒன்று அல்லது இரண்டு நிகழ்வுகளை விவரிப்பதின் வழியாக முடியும் வடிவம் கொண்டவை. அதற்குள் பாத்திரமுரண்கள் குறைவு. கதை எழுப்பும் நிகழ்வுகளோடு வெளியே இருக்கும் சமூகத்துக்கு முரண் உண்டு. கருத்தியல் முரண்கள் இருக்கும். அதேநேரத்தில் கதை சொல்வதற்கு ஒரு எடுத்துரைப்பாளரை உருவாக்கி அவரது கதைகளை நாடகமாக்க முடியும் என்று சொல்லிக்கொண்டிருந்தேன். முயற்சி செய்கிறேன் என்று சொல்லிவிட்டுவந்தேன். பணத்தின் நகர்வை மையப்படுத்தியதைப் பார்த்து கதையை அப்படி முயன்று பார்த்தேன். கதவையும் வேட்டியையும் இணைத்து ஈரங்க நாடகமாக்கவும் முயன்றேன். அந்த முயற்சிகள் இன்னும் மேடையேறாமலேயே இருக்கின்றன. நிகழ் தலைமுறையினர் விட்டுவராமல் இருந்திருந்தால் அவை மேடையேற்றப்பட்டிருக்கலாம்.

(தொடர்ச்சி)

# நானாகிய நதிமூலமே...!

அவர்களின் கட்டில் அருகில் இருந்த தொட்டிலில் ராகுலன் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தான்.

"படுப்பம், உம்மோட கொஞ்சம் கதைக்க வேணும்" ஆதித்தனின் குரலில் மெலிதாக ஒரு குழப்பத்தின் சாயல் தொனித்தது.

'என்ன?' என்பது போல் பார்த்தாள் அவள். அவன் மெதுவாக அவளின் கைகளைப் பற்றியவாறு பேசினான். "கோவிக்க கூடாது. என்னட்ட ஏதும் சொல்லலாம்.."

"என்ன விசர்க்கதை" அவள் சற்று கோபமாகவே கேட்டாள்.

"அடே... நான் சொல்றதைக் கேளுமன்... உம்மட விருப்பங்கள் ஏதும் எனக்கு சொல்லாம வச்சிருக்கிறீரா?" அவன் மென்மையாகப் பேசினான்.

"ஆதி என்ன கதை இது? உமக்கு நான் எப்ப எத சொல்லாம விட்டனான்?" அவள் அவன் கண்களை உற்று நோக்கியவாறு பேசினாள். அவன் கேட்ட விடயம் அவளைச் சற்றுக் காயப்படுத்தியது.

"நான் காலமை கண்டனான்.." அவன் அவள் கைகளை வருடியவாறு கூறினான். அவள் கண்களில் குழப்பத்தின் சாயல் படர சட்டென்று தன் கண்களைத் தாழ்த்திக் கொண்டாள் ஆராதனா.

"நீர் அல்பம் பாத்தது, அத கட்டிப்பிடிச்சுக் கொண்டிருந்தது, கொஞ்சம் கண்ணீரும்... நான் கண்டனான்" ஆதித்தன் அவள் தலைமாட்டைப் பார்த்தபடி பேசினான். அங்கு மறைக்கப்பட்டிருந்த அவளின் ஆன்மாவோடு உரையாடுவது போல.

" அதுக்கென்னப்பா... பழைய ஃபோட்டோஸ் பாத்தா ஒரு சின்ன கவலை வாறது நோர்மல் தானே... கைண்ட் ஓஃப் நொஸ்டால்ஜியா' அவள் ஒரு அசட்டுப் புன்னகையுடன் குனிந்துகொண்டாள்.

"கண்ண பாத்து சொல்லும். வோஸ் இட் ஜஸ்ட் எ நொஸ்டால்ஜியா?" அவள் படக்கென்று தன் முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டாள். அவள் கண்களில் சூடான திரவம் நிறைந்தது.

"ஆரா ஆர் யூ ஓகே?" அவன் சற்றுப் பதறிவிட்டான். அவள் ஆமென்று தலையாட்டினாள். ஆதித்தன் தன் அன்பு மனைவியின் தலையைத் தன் தோளோடு சாய்த்துக்கொண்டான். "யூ கான் டோக்டு மீ, யூ நோ?" அவள் கூந்தலை வருடிக்கொடுத்தவாறே சொன்னான். அவள் கண்களில் நிறைந்த திரவம் இப்போது கன்னங்களில் வடிந்தது.

"அணே... இப்ப ஏன் அழுறீர்? ஏதோ இருக்கு, சொல்லும். ஐம் ஹியர்" அவன் அவள் தோள்களை இறுகப் பற்றியவாறே கூறினான்.

"ஆதி, ஐ வோண்ட்டு டூ எ பெஃபோமன்ஸ்" சில நொடி மௌனத்தைத் தொடர்ந்து தன் கன்னங்களில் வடிந்த கண்ணீரைத் துடைத்தவாறே அவள் சொன்னாள். " அரங்கேற்றம் செய்ய வேணுமெண்டு ஒரு ஆசை இருந்தது. பட்..." மீண்டுமொரு நிசப்தம் அவர்களைத் தழுவிக்கொண்டது. சௌகரியமான அந்த அமைதியை அவர்கள் இருவரும் சிறிது நேரம் ஸ்பரிசித்தார்கள். அதை அவள் மீண்டும் கலைத்தாள்.

"பட், யூ நோ ரைட்... ஏ . எல் லுக்கு பிறகு யுனி கொழும்பில் , அப்பிடியே ஜொப் அரங்கேற்றம் இல்லாட்டியும் மரி பண்ண முதல் க்ரேட் ஆவது முடிக்கோணுமெண்டு நினைச்சன்..." ஒரு பெருமூச்சுடன் தொடர்ந்து பேசினாள். " லைஃப் இஸ் நொட் ஓல்வேய்ஸ் தட் ஃப்யார்.. ஆனா ஆதி, அது ஒரு சின்ன கனவு தான். நான் ஆசைப்பட்ட வேற நிறைய விஷயங்கள் செய்திருக்கிறன். அது ஒண்டும் பிரச்சினை இல்லை.. இப்பிடி பழைய ஃபோட்டோஸ் பாத்தா ஒரு கவலை , மற்றபடி ஒண்டுமில்ல ஆதி.." அவள் இப்போது சிரித்தாள். மனதை அழுத்திய சுமை ஒன்றை இறக்கி வைத்தது போலிருந்தது அவளுக்கு.

"ஹே.. சின்னனோ பெருசோ, இட்ஸ் யுவர் ட்றீம் ரைட்; நீர் கண்கலங்கிற அளவுக்கு உமக்கு இம்போட்டன் ட்றீம்!" அவன் கொஞ்சம் அழுத்தமாகக் கூறினான்.

"இங்க பாரும் ஆதி, எத்தினையோ பேருக்கு எத்தினையோ கனவுகள் கலையுது.. அப்பிடி பாக்கேக்க நான் ஆசைப்பட்டதை விட பெற்றர் லைஃப் எனக்கு கிடச்சிருக்கு. விரும்பின படிப்பு, உம்ம போல ஒரு ஹஸ்பண்ட், நல்ல வேலை, செல்ல மகன் ஐம் ஃபைன் ஆதி!" அவள் உண்மையான மகிழ்வுடன் கூறினாள்.

"யூ ஜொய்ன் த க்ளாஸஸ்" சற்றும் தாமதிக்காமல் சட்டென்று கூறினான் ஆதித்தன். அதிர்ச்சியில் ஆராதனாவின் கண்கள் சட்டென்று விரிந்தன. இருந்தாலும் தன்னை சுதாகரித்துக்கொண்டாள்.

"ஹா ஹா விளையாடுறீரா? ஜொப், இவன், வீட்டு வேலை, எல்லாத்தையும் விட 10 வருஷத்துக்கு மேல டச் இல்ல. இப்ப ஆடப் போனா... பேசாம படும் " அவள் சிரித்துக் கொண்டே விளையாட்டாக அவன் தோளில் தட்டினாள்.

"இதெல்லாம் சாட்டு, உமக்கு விருப்பமெண்டா இப்பவும் ஆடலாம்." அவள் இல்லை என்பது போல தலையாட்டினாள்.

"எனக்குத் தெரியும் உம்மால ஆடமுடியும்!" அவன் அவளைப் பார்த்து உறுதியுடன் புன்னகைத்தான்.

"உண்மையாத்தான் சொல்லுறீரா?" அவள் சற்று குழப்பத்தோடு கேட்டாள்.

"நான் உம்மை ஒரு பாட்டி மாதிரி நினைக்கேல, அதனால ஆடுவீர் எண்டு நம்பிறன்" அவன் சிரித்துக்கொண்டே சொன்னான்.

"ஆஹ்ஹா ... அப்பிடி எண்டால், ஏதாவது ஒரு மியூசிக்குக்கு ஆடலாம்" அவள் ஒரு அசட்டுச் சிரிப்புடன் அறையை விட்டு வெளியேறினாள்.

ஆதித்தன் தன் கைபேசியில் அவளின் விருப்பமான பாடலைத் தெரிவு செய்து இயக்கியவாறே அவளைப் பின் தொடர்ந்தான். அஞ்சலி மிஸ்ஸின் ஜதிகளை விட வேகமான ஜதிக்கட்டுக்கள் அவனின் கை பேசியிலிருந்து தெறித்தன. அவளால் அதற்கேற்றாற்போல் அடவுகளைக் கோர்த்து ஆட முடியவில்லை. ஜதியைத் தொடர்ந்து ஒரு மெல்லிய இசை அவர்களின் வரவேற்பறையை நிறைத்தது. அவள் மறந்தவற்றை அவளின் கால்கள் மெல்ல மெல்ல நினைவுப்படுத்திக்கொள்ள அந்த இனிமையான இசைக்கு அவள் விரல்கள் அழகாக அபிநயித்தன. அந்த இசையைத் தொடர்ந்து அவளை ஆழமாய்த் தொட்ட அந்த வரிகள்;

"நானாகிய நதிமூலமே தாயாகிய ஆதாரமே எனைத்தாங்கிய கருக்குடம் இணையேயில்லா திருத்தலம் அனுதினமுன்னை நினைந்திருக்கிறேன் அனுதினமுன்னை நினைந்திருக்கிறேன்" ஆதித்தன் ஓடிச்சென்று அவளைத் தழுவிக்கொண்டான். அவன் கண்களில் கசிந்த ஈரம் அவள் கூந்தலை நனைக்க, பாடல் தொடர்ந்தது.

"உனைப்போல நான் உயிரானதும் பெண் என்ற நான் தாயானதும் பிறந்த பயனாய் உனைப் பெறும் சிறந்த பெருமை நிகழ்ந்ததும் அனுதினமும் நான் நினைந்திருக்கிறேன். அனுதினமும் நான் நினைந்திருக்கிறேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லால் என்றன்...

ம.பா. மகாலிங்கசிவம்



**மலரினும் மெல்லிது காமம் சிலரதன்**
**செவ்வி தலைப்படுவார்**

என்கிறது திருக்குறள்.

காதல், அதனோடிணைந்த காமம் என்பவை மிகவும் மென்மையான விடயங்கள் மிகச் சிலரே அவற்றை முழுமையாக அனுபவிக்கின்றனர் என்பது இக் குறளின் பொருள். போர்க்களத்தில் பகைவரும் அஞ்சும் வலிமை இந்தப் பெண்ணின் அழகின் முன் தோற்றுவிட்டதே என்கிறது இன்னொரு குறள் பெரும் வலிமை உடைய வீரனையும் கலங்கடித்துவிடும் இயல்பு காதலுக்கு உண்டு என்பது இதன் மூலம் உணர்த்தப்படுகிறது.
காதலைப்பாடாத கவிஞர்களே இல்லை என்று கூறுமளவுக்குக் காதலுணர்வு எல்லோரிடமும் கோலோச்சி உள்ளது. இவ்வகையில் 1999.4.5 இல் வெளிவந்த அமுது சஞ்சிகையில் இடம்பெற்ற அல்லால் என்றன்...... என்னும் கவிதை இன்றைய தேன்கூட்டில் இடம்பெறுகிறது.

*போகும் வழியில் அங்கங்கே*
*தரையில்*
*எறும்புகள் மொய்க்கக் கண்டால்*
*நீ எச்சில் துப்பிப் போயிருப்பாய்*
*என்றே நினைக்கிறேன்*

*சீப்பிலிருந்து நீ உருவியெறிந்த*
*மயிர்ப்பந்து*
*காற்றில் அலைகையில்*
*என் மனமும் அதனோடு*
*அல்லாடுகிறது*

*நீ வியர்வை துடைத்த*
*கைக்குட்டையை*
*வீசியெறிய மாட்டா என்று*
*தவங் கிடக்கிறேன்*


*உன் கொலுசுப் பாதங்கள்*
*நடந்த மணல் தரையை*
*விழுந்து கும்பிடவே*
*மனம் ஏவும்...*

*உன் மூச்சும் கலந்திருக்கும்*
*என நினைக்க*
*உலவும் இந்த காற்று*
*உடம்பைக் கொதி உலையாக்கும்*

*கொடியில் ஆடும் உன் ஆடைகள் காண*
*உடம்மும் மனமும் போய் அதில் புரளும்*
*கண்ணன் ஆடைகள் திருடியதன்*
*காரணம் விளங்கும்*

*வட்டங்களிட்டுக் குளமகலாத தெப்பம்*
*இடக்கரடக்கன்*

தேன் கூடு




காதலும் காமமும் கொப்பளிக்க உள்ளத்துணர்வுகளைக் கலைநயம்மிக்க கவிதையாக்கித் தந்த கவிஞர் இடக்கரடக்கன். இடக்கரடக்கன் என்னும் புனை பெயரைத் தவிரக் கவிஞர் தொடர்பான வேறெந்தத் தகவலையும் பெற முடியவில்லை. சபையிலே கூறத்தகாத விடயங்களை மறைத்து வேறொரு சொல்லாற் கூறுவது இடக்கர் அடக்கல் எனப்படும். இடக்கரடக்கல் என்ற சொல்லை அடிப்படையாகக்கொண்டே கவிஞர் தனது புனை பெயரை உருவாக்கியுள்ளார் என்பதை உய்த்துணரலாம்.

இனி, அல்லால் என்றன்....
என்னும் தலைப்பை நோக்கினால்...
மோகத்தைக் கொன்று விடு... அல்லால் என்றன்
மூச்சை நிறுத்திவிடு" எனத் தொடங்கும் பாரதி பாடலில் இருந்தே இச் சொல் பெறப்பட்டிருப்பதைக் காணலாம். பெறப்பட்ட சொல்லில் மட்டுமன்றி வெளிப்பட்ட மோக உணர்விலும் கவிஞர் இடக்கரடக்கன் பாரதியுடன் ஒத்திசைந்து செல்வதைக் காணமுடிகின்றது.

**போகும் வழியில் அங்காங்கே**
**தரையில்**
**எறும்புகள் மொய்க்கக் கண்டால்**
**நீ எச்சில் துப்பிப் போயிருப்பாய்**
**என்றே நினைக்கிறேன்...**

**எனக் கவிதை தொடங்குகிறது.**
**"பாலொடு தேன் கலந்தற்றே பனிமொழி**
**வால் எயிறு ஊறிய நீர்"**

என்ற திருவள்ளுவரின் கருத்தை அதாவது காதலியின் வாயில் ஊறிய உமிழ்நீர் பாலும் தேனும் கலந்தது போல இனிமையாக இருக்கும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு, எறும்பு மொய்க்கும் இடங்களுக்கு அவளது உமிழ் நீர்தான் காரணமாக இருக்கும் எனக் கவிஞர் தற்குறிப்பேற்றம் செய்துகொள்கிறார்.



தலையில் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை என்று
தலையிலிருந்து விழுந்த மயிர் இழிந்த பொருளாகக் கருதப்பட்டாலும் காதலியின் கூந்தல் மயிர் கவிஞனுக்குப் புனிதப் பொருளாகிறது. மயிர்ப்பந்துடன் மனமும் சேர்ந்து அல்லாடுகிறது.
தவம் என்பது இறைவனை நினைத்து உணவும், நீரும் இல்லாமல் ஐம்புலன்களையும் அடக்கிச் செய்யப்படுவது. பல்வேறு வரங்களையும் ஆற்றல்களையும் பெறுவதை நோக்கமாகக் கொண்டது. ஆனால் கவிஞர் இடக்கரடக்கனோ காதலியின் வியர்வை துடைத்த கைக்குட்டைக்காகத் தவம் கிடக்கின்றார். இப்பகுதி காதலி அவருக்குத் தெய்வமாகத் தோன்றுகிறாளோஎன்ற ஐயத்தை வாசகர் மனதில் விதைக்கிறது.

**உன் கொலுசுப் பாதங்கள்**
**நடந்த மணல் தரையை**
**விழுந்து கும்பிடவே**
**மனம் ஏவும்.....**
என்னும் அடுத்த பகுதி அது ஐயம் அன்று. நிஜமான விடயமே என்பதை உறுதி செய்கிறது.

**"கொடியில் ஆடும் உன் உடைகள் காண**
**உடம்பும் மனமும் போய் அதில் புரளும்**
**கண்ணன் ஆடைகள் திருடியதன்**
**காரணம் விளங்கும்...."**

என்னும் பகுதி கண்ணனின் பாலலீலைகள் தொடர்பான தொன்மங்களை வாசகர் மனக்கண்முன் கொண்டு வருகிறது. கொடியில் ஆடும் காதலியின் உடைகளுடன்உடலும் மனமும் போய்ப் புரளுவதைக் கவிஞன் உணருகின்றான். இப்போது தான் கண்ணன் கோகுலப் பெண்கள் குளிப்பதற்காக குளக்கரையில் வைத்துவிட்டுச் சென்ற ஆடைகளை ஏன் திருடினான் என்பது கவிஞனுக்கு விளங்குகின்றது. பாம்பின் கால் பாம்பறியும் என்பது இதுதானோ? கவிதையின் இறுதிப் பகுதி வாமனஅவதாரம் போல் மூன்று சொற்களால் மிக விரிந்த பொருளைத்தரும் படி மம் ஒன்றை கொண்டு கவித்துவத்தின் உச்சத்துக்கே செல்கிறது. வட்டங்களிட்டு குளமகலாத தெப்பம் என அந்த அடி மிக அழகுற அமைகிறது. தலைவியின் நினைவுகள் குளமாகவும் அதிலிருந்து மீள முடியாது எப்போதும் அதனுள்ளேயே மூழ்கியிருக்கும் கவிஞனின் மனது குளமகலாத தெப்பமாகவும் இங்கு படிமங் கொள்கின்றன. தொகுத்து நோக்கின் காதலியின் காதலுக்கும் காமத்துக்கும் இடையில் அல்லாடும் நிலையை சிறந்த சொல்லாட்சி, படிமம்,தொன்மம் என்பவற்றோடு இணைத்து வெளியிடும் சிறந்த கவிதையாக இக்கவிதை உள்ளது எனலாம்.




உங்கள் படைப்புக்களும்
சஞ்சீவியில் பிரசுரமாக
வேண்டுமா?

- சிறுகதை
- பத்தி எழுத்து
- கட்டுரை

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க காத்திருக்கிறோம்.
உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

சஞ்சீவி
உதயன் சஞ்சீவி
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0773165555



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# தோற்றும் வென்றவர்!

○ ஆதங்கன்

பசங்க- 2 என்ற திரைப்படத்தில் ஒரு காட்சி வரும். ஒரு பாடசாலையின் விளையாட்டுப் போட்டி. எல்லோராலும் உடற்பருமனான ஒரு சிறுவனைக் கேலி செய்வார்கள். அப்போது நீண்டதூர ஓட்டப்போட்டி ஆரம்மாகும். "இதில் ஒரு சுற்றுகூட உன்னால் ஓட முடியுமா?" என்று அவனது நண்பர்கள் சவால் விட, அந்த ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொள்கிறான் அந்தப் பருத்த சிறுவன். போட்டி ஆரம்பமாகின்றது. தன்னம்பிக்கையோடு ஓடத்தொடங்கிய அந்தச் சிறுவன், நாலைந்து சுற்றுக்கள் ஓடி முடித்துவிட்டான். ஆனால் அந்தப் பந்தயத்தில் கலந்து கொண்ட ஏனையோர் முன்னரே ஓடி முடித்துவிட்டார்கள். கடைசி நபராக, தனியாக அவன் மட்டும் பந்தயத் தூரத்தை ஓடி முடிப்பான். இருப்பினும் அவனது தன்னம்பிக்கையை பாராட்டி அந்த வருடத்துக்கான சிறந்த விளையாட்டு வீரனுக்கான சிறப்பு விருது அவனுக்கு வழங்கப்படும்.

இந்தப் படக்கதை உண்மையிலேயே நடந்தது என்றால் நம்புவீர்களா? அதுவும் இலங்கையர் ஒருவர் தான் அப்படி தோற்றும் மக்களின் இதயங்களை வென்றவர் என்றால் ஆச்சரியப்படத்தான் செய்வீர்கள். ஆனால் உண்மை அதுதான். இலங்கையரான கருணானந்த ரணதுங்க என்பவரின் கதையையே, இயக்குநர் பாண்டிராஜ் தனது பசங்க படத்தில் அந்தக் காட்சி மூலம் சொல்லியிருந்தார்.




1964 ஆம் ஆண்டு. ஒலிம்பிக் போட்டிகள் ஜப்பானின் டோக்கியோ நகரில் நடந்தன. அதில் 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் இலங்கை சார்பில் கலந்துகொண்டவர் தான் கருணானந்த ரணதுங்க. பசங்க படத்தில் நடந்த அதே கதைதான். இவரோடு ஓடத் தொடங்கியவர்கள் எல்லாம் 10 மீற்றரையும் ஓடி முடித்து ஓய்வெடுத்துக் கொண்டிருக்க, கருணானந்த ரணதுங்க கடைசி ஆளாக ஓடிக்கொண்டிருந்தார். எல்லோரும் அவரைப் பார்த்துச் சிரித்தார்கள். ஆனால் தனியாளாக அவர் பந்தயத் தூரத்தை நிறைவு செய்யும்போது, ஒரு சிறுவன் எழுந்து அவரது தன்னம்பிக்கையை கௌரவப்படுத்தி கரகோஷம் செய்தான். அவனைத் தொடர்ந்து அரங்கத்தில் இருந்த எல்லோருமே கருணானந்த ரணதுங்கவைப் பாராட்டி கரகோஷம் செய்து பாராட்டினர். முதலாம் இடம் எடுத்தவருக்குக்கூட அப்படி ஒரு கரகோஷம் கிடைத்திருக்கவில்லை. இப்போது கூட அந்தப் பந்தயத்தில் தங்கப் பதக்கம் வென்றவர் யாரென்பதை எல்லோரும் மறந்துவிட்டார்கள். ஆனால் கருணானந்தவை மட்டும் எல்லோரும் நினைவில் வைத்திருக்கிறார்கள். குறிப்பாக ஜப்பானியர்களுக்கு கருணானந்த ரணதுங்க ஒரு ஆதர்ஷ நாயகராக மாறிவிட்டார். 'தோல்வியைக் கூட எப்படி வெற்றியாக்குவது?' என்று ஜப்பானியர்களுக்கு கற்றுக்கொடுத்த கடவுளாகவே அவர்கள் கருணானந்த ரணதுங்கவைப் பார்த்தார்கள்.

ஒலிம்பிக் முடிந்தும் கூட, அவரை தங்கள் நாட்டின் பல்வேறு நிகழ்வுகளுக்கும் கருணானந்த ரணதுங்கவை விருந்தினராக அழைத்து அவரின் உரையைக் கேட்டார்கள். இரண்டாம் உலகப்போரில் தோற்று, நொந்திருந்த மக்களுக்கு கருணானந்த ரணதுங்கவின் தோல்வியை வெற்றியாக்கிய கதையும், உரையும் பேரெழுச்சி கொள்ளவைத்தன. அவரை குடும்பத்தோடு ஜப்பானுக்கு வருமாறு கோரிக்கையும் விடுத்தனர். ஆனால் கருணானந்த ரணதுங்க அதை மறுத்துவிட்டு இலங்கை திரும்பினார். ஆனால் இங்கே அவரை வரவேற்கக் கூட நாதியில்லை. ஒரு சாதாரணநபராக மீண்டும் வாழத் தொடங்கினார் கருணானந்த ரணதுங்க. எனினும் 1975 ஆம் ஆண்டு அவரது சடலம் ஒரு வாவியில் மீட்கப்பட்டது. அவர் விபத்தில் இறந்தாரா, கொலை செய்யப்பட்டாரா என்பது இன்னமும் மர்மமாகவே இருக்கின்றது. அத்தோடு இலங்கையர்கள் அவரை மறந்துவிட்டார்கள். ஆனால் ஜப்பானியர்கள் அவரை மறக்கவில்லை.

ஜப்பானில் தரம் 5 மாணவர்களுக்கான பாடநூலில் "The Great Loser " என்ற தலைப்பில் சுமார் 12 பக்கங்கள் கருணானந்த ரணதுங்க பற்றிய குறிப்புகள் இப்போதும் இடம்பெற்றுள்ளன. அத்தோடு 1964 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிக்காக கருணானந்த ரணதுங்க தங்கியிருந்த அறையை, தங்களுடைய பாரம்பரிய காகிதக் கலை வடிவங்களால் அலங்கரித்து இன்றும் அதை ஒரு நூதனசாலையாகப் பேணி வருகின்றனர் ஜப்பானியர்கள். தோற்றவர்களிடம் இருந்தும் பாடங்களைக் கற்று. அவர்களையும் கொண்டாடத் தெரிந்ததால் தான் ஜப்பானியர்கள் இன்று உலகின் பொருளாதாரத்தில் முன்னணியில் திகழ்கிறார்கள். ஆனால் நாங்கள்...?



(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# வைரஸ்.....



பதிலாக அந்த இளையோருக்கும் எங்களுக்கும் இடையிலான தொடர்பாடல் எங்கே அறுந்தது என்பதை முழுச் சமூகமும் தேடி கண்டுபிடிக்கவேண்டும்.

உங்களுடைய பிள்ளைக்கும் உங்களுக்கும் இடையே யாரோ ஒரு வெளியாள் வாளை, கஞ்சாவை கொண்டுவர முடிகிறது என்றால் உங்களுக்கும்உங்களுடைய பிள்ளைகளுக்கும் இடையே ஏதோ ஒரு இடைவெளி இருக்கிறது என்றே பொருள். உங்களுடைய பிள்ளை மோட்டார் சைக்கிளை முறுக்கிக் கொண்டு எங்கே போகிறான்? யாரை சந்திக்கிறான்? என்னென்ன செய்கிறான்? எப்பொழுது திரும்பி வருகிறான்? ஏன் பிந்தி வருகிறான்? அவனுடைய கைபேசியில் யார் யாருடைய இலக்கங்கள் உண்டு? கைபேசியில் அவன் உருவாக்கி வைத்திருக்கும் உலகம் எத்தகையது? அவனுடைய கணினியில் அவன் உருவாக்கி வைத்திருக்கும் உலகம் எத்தகையது? யூடியூப்பில் அவன் உருவாக்கி மகிழும் பாடல் எத்தகையது? அவனுடைய முகநூலில் அவன் உருவாக்கி வைத்திருக்கும் உலகம் எத்தகையது? என்பது குறித்து எங்களில் எத்தனை பேர் நுணுக்கமாக பின் தொடர்கிறோம்? எங்களுக்கும் எங்களுடைய பிள்ளைகளுக்கும் இடையே எங்கே, எப்பொழுது இடைவெளி விழுந்தது என்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். இது எல்லாப் பெற்றோருக்குமான ஒரு பொறுப்பு.

ஆசிரியர்களுக்குமான பொறுப்பு. உள்ளூர் தலைமைகளுக்கும் மதத்தலைவர்களுக்குமான பொறுப்பு. எல்லாவற்றையும்விட முக்கியமாக அரசியல்தலைவர்களுக்கான பொறுப்பு.

இரத்தத் துடிப்புள்ள இளையவர்களுக்குத் தலைமை தாங்க தகுதியுள்ள தலைவர்கள் யார் உண்டு? எத்தனை கட்சிகளிடம் இளையோர் அமைப்புகள் உண்டு? குறைந்த பட்சம் பல்கலைக் கழகங்களில் மாணவ அமைப்புக்களைக் கொண்டிருக்கும் கட்சிகள் எத்தனை? இதுதான் பிரச்சினை.

இளையோரின் வேகத்துக்கு தாக்குப்பிடித்து தலைமை தாங்க தமிழ்மக்கள் மத்தியில் உள்ள மக்கள் பிரதிநிதிகள் பலரால் முடியவில்லை என்பதுதான். இளையோரின் சாகச உணர்வுக்கு சரியான தலைமைத்துவத்தை கொடுத்தால் அது ஆக்க சக்தியாக மாறும். அதற்கு ஒரு அரசியல் தரிசனம் வேண்டும். இளையோருக்கு மட்டுமல்ல முழுச் சமூகத்துக்குமே ஒரு பெரும் தொற்று நோய்க்காலத்தில் சமூக முடக்க காலத்தில் வழிகாட்டுவதற்கு எத்தனை தலைவர்கள் உண்டு ? கடந்த சில வாரங்களாக இது பற்றி நான் அடிக்கடி எழுதி வருகிறேன்.

சமூக முடக்கத்தின்போது பொதுமக்களோடு சேர்ந்து முடங்கி கிடப்பதற்கு மக்கள் பிரதிநிதிகள் தேவையில்லை. அல்லது பெருந்தொற்று நோய்க்கு எதிரான நடவடிக்கைகளை முழுக்க முழுக்க படையினரிடம் ஒப்படைத்து விட்டு வீடுகளில் முடங்கி கிடப்பதற்கும் மக்கள் பிரதிநிதிகள் தேவையில்லை. மாறாக மக்களுக்கு விழிப்பூட்ட வேண்டும். தைரியம் ஊட்டவேண்டும். நோய் தொற்றுக்கு எதிராக உளவியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மக்களை பலப்படுத்தவேண்டும். வழிகாட்டவேண்டும்.

ஒரு பகுதி அரசியல்வாதிகளும் மக்கள் பிரதிநிதிகளும் நிவாரணம் வழங்குகிறார்கள். அதற்கும் தேவை உண்டு. ஆனால் புலம் பெயர்ந்த தமிழர்களின் உதவிகளையும் தாயக மக்களையும் ஒருங்கிணைக்கும் முகவர்களாக செயற்பட்டால் மட்டும்போதாது. அதற்கும் அப்பால் மாற்றத்தின் முகவர்களாக நம்பிக்கையின் முன்னுதாரணங்களாக வாழும் முன் உதாரணங்களாக மக்கள் பிரதிநிதிகளும் அரசியல்வாதிகளும் மாறவேண்டும். அப்படி மாறினால் தான் ஒரு சமூக முடக்க காலத்தில் சமூகத்துக்கு தைரியம் ஊட்டலாம், வழிகாட்டலாம்.

ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள எத்தனை கட்சித் தலைவர்களிடம் இதுகுறித்து ஆழமான தரிசனங்களும் அதற்கு வேண்டிய வாழ்க்கை ஒழுக்கமும் உண்டு? ஒரு சமூக முடக்க காலத்தில் தனது சமூகத்துக்கு வழிகாட்ட முடியாத தலைவர்கள் எப்படி இரத்தத் துடிப்புமிக்க இளைஞர்களுக்கு வழிகாட்டுவார்கள்? இவ்வாறு வழிகாட்டப்படாத ஒரு வெற்றிடத்தில்தான் தாம் செய்வது குற்றம் என்று தெரியாமலேயே ஒரு சிறுபகுதி இளையோர் வாளோடும் கஞ்சாவோடும் நிற்கிறார்கள். அல்லது யாருடைய தோகைப் பாவைகளாக மாறியிருக்கிறார்கள். இது தொடர்பில் ஆழமான சமூகப் பொருளாதார உளவியல் விளக்கங்களின்றி தமிழ் அரசியல்வாதிகள் வெட்டப்பட்ட கையையும், கையை சேர்த்துத் தைத்த மருத்துவரையும் இருவேறு பரபரப்பான தலைப்புச் செய்திகளாகக் கடந்து போகிறார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



# திட்டமிட்ட நாடகமா?

மொய்ஸ் படுகொலை வழக்கில் அரச தரப்பினரால் முன்பின் முரணான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் மொய்ஸைக் கொன்ற குழுவினருக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில் 7 பேர் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்திருந்த ஹெய்ட்டி பொலிஸின் தலைவரான சாள்ஸ் அதன் பின்னர் 3 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று தான் சொன்ன தகவலையே மாற்றியுள்ளார். அதேபோல், அமெரிக்க போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் என்று அந்தக் குழுவினர் தம்மை அடையாளப்படுத்தியே மொய்ஸை நெருங்கிச் சென்றனர் என்று தெரிவித்த அதிகாரிகள் ஆயுததாரிகள் 'டி.இ.ஏ ஒப்பிரேசன் வெற்றி' என்று கூச்சலிட்டனர் என்றும் குறிப்பிடுகின்றனர். அதேநேரம் மொய்ஸின் பலம்மிக்க மாளிகைக்குள் நுழைந்த ஆயுததாரிகள் ஜனாதிபதியை துல்லியமாக இலக்கு வைக்க எப்படி முடிந்தது? அவரது மெய்ப்பாதுகாவலர்கள் எங்கே போனார்கள்? அவர்கள் ஏன் தாக்குதலாளிகளைத் தடுக்கவில்லை?
இவை அனைத்தையும் ஒரே நேர்கோட்டில் வைத்துப் பார்த்தால் மொய்ஸ் கறுப்பாடுகளால்தான் காட்டிக்கொடுக்கப்பட்டுள்ளார் என்ற இயல்பான சந்தேகமும் எழுகின்றதல்லவா?

## அதிகார இரையா?


சுமார் 10 மாதங்களாக மொய்ஸுக்கு அடுத்த இடத்தில் யார்? என்பது அதாவது நாட்டின் பிரதமர் யார்? என்பது அறிவிக்கப்படாமல் இருந்த நிலையில், ஏரியல் ஹென்றி என்பவர் ஜுலை 4ஆம் திகதி ஹெய்ட்டியின் பிரதமராக அறிவிக்கப்பட்டார். எனவே இந்த அறிவிப்பு வெளிவந்த ஒரு நாள் இடைவெளியில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் படுகொலை, இதுவொரு அதிகாரப் போட்டியின் இரையா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.

## சர்வதேச சதியா?

மொய்ஸ் ஒரு விவசாயி. இன்னும் சொல்லப்போனால் மரபணு மாற்றப்படாத இயற்கை விவசாயத்தை ஆதரிப்பவர். ஜனாதிபதியாவதற்கு வெகுசில காலங்களுக்கு முன்னர் வரையில் அவர் விவசாயத்தையும் வாழைச் செய்கையையும் மேற்கொண்டு வந்தார். அதிபரான பின்னர் ஹெய்ட்டியில் நடைமுறைப்படுத்தப்படும் மரபணு மாற்ற வியாபாரத்துக்கு எதிராக திரைமறைவில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். குறிப்பாக 2010ஆம் ஆண்டு ஹெய்ட்டியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 2 லட்சம் பேர் உயிரிழந்தனர். 8 லட்சம் பேர் அகதிகளாகினர். இதன்போது ஏற்பட்ட வறுமையை அடுத்து ஹெய்ட்டி அரசு தன்னிடம் இருப்பில் இருந்த சோள விதைகளை உணவாக்கி மக்களின் பசி போக்கியது. இதன் பின்னர் சோள விதைக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை அடுத்து மரபணு மாற்றப்பட்ட விதைகள் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்டன. இதற்கு ஹெய்ட்டி விவசாயிகள் எதிர்ப்புக்காட்டினர். ஹெய்ட்டியின் அடையாளமான விதைகள் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றமைக்கு ஒரு விவசாயியாக மொய்ஸ் எதிர்ப்பை வெளிப்படுத்தினார். அமெரிக்க ஆதரவு நிலைப்பாட்டில் இருந்து கொஞ்சம் விலகியவராகவும் அவர் இருந்தார். எனவே மொய்ஸின் கொலையில் சர்வதேசநாடுகள் சம்பந்தப்பட்டுள்ளனவா? என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது. மொய்ஸ் கொலையில் கைது செய்யப்பட்டவர்களில் இருவர் ஹெய்ட்டி அமெரிக்கர்கள் என்பதையும் அவர்கள் தொடர்பான கருத்துத் தெரிவிக்க அமெரிக்கா மறுத்துவிட்டதையும்கூட இங்கே கோடிட்டுக்காட்ட வேண்டும்.

## மக்கள் பதற்றம்

மொய்ஸ் கொலை வழக்கை அடுத்து ஹெய்ட்டி இயல்பிழந்துள்ளது. மக்கள் ஆவேசம் அடைந்துள்ளனர். பல்லாயிரம் மக்கள் வீதியில் இறங்கியுள்ளனர். ஆங்காங்கே வன்முறைகள் பதிவாகியுள்ளன. கொலைச் சந்தேகநபர்களில் ஒருவருடைய கார் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அலங்கோல அரசியலாலும் ஆயுதக் குழுக்களின் போட்டியாலும் சர்வதேச சந்தையாலும் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ள ஹெய்ட்டி தற்போது பெரும் அளவிலான உள்நாட்டுப் போரையும் சந்திக்கும் ஏதுநிலை உருவாகியுள்ளது என்பதே நிதர்சனம்.






# குழைக்காட்டு கதைகள்

○ கோகுலராகவன்

சில வேளைகளில் சில மனிதர்கள் திடீரென ஞாபகம் வருவார்கள். ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அவர்கள் சார்ந்த விடயம் நடைபெறும்போது அவர்கள் பற்றிய ஞாபகம் வரும். பெட்டிசன் (petition) என்ற சொல்லுக்குரிய எழுத்துக்களை தேடிக் கொண்டிருந்தபோது 'பெட்டிசன் தம்பையாண்ணை" ஞாபகம் வந்தார்.

இந்த பெட்டிசன் என்பது கடும் வார்த்தையாக, தவறாகப் பார்க்கப்படுகின்றது . ஆனால் ஒரு மனு செய்வதுதான் அதன் உண்மை அர்த்தம். நாம் ஒரு திட்டத்தை, செயற்பாட்டை குழப்புவதற்காக மேலிடங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களையே பெட்டிசன் என்ற வரைவிலக்கணத்துக்குள் அடக்கிவிடுவோம்.

ஆனால் நல்ல காரியங்களுக்காகவே பெட்டிசன் அனுப்பும் மனிதர்களும் இருக்கின்றார்கள். தம்பையாண்ணையும் இந்த வகைதான். தவறை சுட்டிக்காட்டும் மனிதராகவே அவர் இருந்தார். ஆனால் ஊருக்குள் குழப்பவாதியாகவே பார்க்கப்பட்டார்.

ஊருக்கு வீதி அமைக்கப்படும் போதும் தரம் குறைந்த தார் பயன்படுத்தப்பட்டதை மேலிடங்களுக்கு அவர் கடிதம் மூலம் தெரிவிப்பார். அதில் துணிவாக சி.தம்பையா என்ற கையொப்பத்தையும் இட்டே விடுவார். அடிக்குறிப்பில் பிரதமருக்கோ ஜனாதிபதிக்கோ அறிவிப்பேன் என்று போட்டு விடுவார்.

சம்பந்தப்பட்டவர்கள் விழுந்தடித்து ஓடி வந்து பார்வையிட்டு நிலைமையை சரி செய்வார்கள். இதனால் ஊருக்கும் நன்மைதான் நிகழும். ஆனால் தம்பையாண்ணையை ஊரவர்கள் 'ஒரு மாதிரியான' ஆளாகவே பார்த்தார்கள். ஆனால் அவர் தனது கைங்கரியத்தை ஒரு நாளும் கைவிட்டதில்லை.

பளை பொதுச்சந்தையில் அமைக்கப்பட்ட மீன்சந்தை கட்டடத்தின் அரிகற்கள் உறுதியானவை இல்லை என்று பெட்டிசன் எழுதியதற்காக ஒப்பந்தகாரரால் சைக்கிளில் தள்ளி விழுத்தி மண்டை உடைத்து இழை போட்டுக்கொண்டார்.

வீட்டில் மனைவி திட்டுவார்.

"உந்தக் கோதாரி விழுந்த வேலையை கைவிடுங்கோ"

தம்பையாண்ணை சிரிப்பார். அவரது சைக்கிளில் ஒரு பை நெடுக கொழுவி இருக்கும். அதனுள் எப்பவும் வெள்ளைப் பேப்பரும் பேனாவும் தயாராகவே இருக்கும். அவருக்கு கிட்ட யாரும் நெருங்கிப் பழகியது கிடையாது. அல்லது பயப்படுவார்கள். தம்பையாண்ணை ஒப்பந்தகாரருக்கு எப்பவும் சிம்மசொப்பனமாகவே இருந்தார்.என்னவோ தெரியவில்லை. எனக்கும் தம்பையாண்ணைக்கும் அவரது சிறுகாலத்தில் ஒருவித நட்பு மலர்ந்திருந்தது. அவரது கைநடுக்கத்தால் உருவானதுதான் அந்த நட்பு.

> தம்பையாண்ணையும் இந்த வகைதான். தவறை சுட்டிக்காட்டும் மனிதராகவே அவர் இருந்தார். ஆனால் ஊருக்குள் குழப்பவாதியாகவே பார்க்கப்பட்டார்.

வயது போய் கை நடுக்கம் வர அவரால் கடிதம் எழுத முடியாமல் போய்விட்டது. ஒருநாள் என்னை மறித்து

"தம்பி ஒரு கடிதம் எழுதித் தரவேணும்"

"அதுக்கென்ன எழுதுவமண்ணை"

வீட்டுக்கு கூப்பிட்டால் அப்பா திட்டுவார். எனவே புலோப்பளை சூரியபிரதாபன் வாசிகசாலையில் வைத்து எழுதிக் கொடுப்பேன். அந்தக் கடிதங்களை எழுதத் தொடங்கிய போதுதான், சமூகத்தின் மீதான அவரது அக்கறையை உணர்ந்து, அவர் தவறான மனிதர் இல்லை என்பதையும் புரிந்து கொண்டேன்.

"என்னையும் நல்ல மனிசன் எண்டு சொன்னது நீ ஒருத்தன் தான்ராப்பா" ஒரு நாள் வாசிகசாலைக்கு கூப்பிட்டிருந்தார்.

"தம்பி நானொரு வழக்கு போடப் போறன்" இதெண்டா பெட்டிசனை விட்டிட்டு மனிசன் வழக்குக்கு தாவிவிட்டது? என்று நினைத்துக்கொண்டேன்.

"தம்பி வெள்ளைக்காரன் எங்கடை நாட்டைஎத்தின வருசம் ஆண்டான்?"

"நூற்றம்பது வருசம் வரும்"

"அவ்வளவு காலத்தில தம்பி எங்கட முழுக்காசையும் தன்ரை நாட்டுக்கு அனுப்பிப் போட்டான்கள்"

"ஓம் வருமானத்துக்காகத்தானே வந்தவங்கள்"

"கண்டி இராசான்ர நகையெல்லாம் கொண்டு போட்டான்"

"சரி உண்மைதான்"

"அவங்கள் எல்லாம் திருப்பித்தர வேணும் கண்டியோ"

"தருவாங்களோ?"

"வழக்கு போட்டு கேப்பம்"

"ஆர் வழக்கு போடுறதண்ணை?"

"அரசாங்கம் தான் போட வேணும். அதற்கு நான் கடிதம் எழுதப் போறன்.எழுதுவமோ?"

"நாளைக்கு எழுதுவமண்ணை .நேரம் போட்டுது" எனக்கு திகைப்பாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது.

"தம்பி மூன்று நாள் எங்கடை வீட்டை ஆரும் வந்து நிண்டாலே கையைக் கடிக்குது.நூற்றைம்பது வருசம் எங்கடை நாட்டை திண்டிட்டாங்கள் தம்பி"

சாதாரண கல்வி கற்காத மனிதன் யோசிப்பதை பெரிய மனிதர்கள் யோசிக்கவில்லையா? என்று எனக்கு சந்தேகம் எழுந்தது.

"இது சாத்தியப்படுமா ?"என்று எண்ணியவாறு வீட்டுக்கு வந்துவிட்டேன். மறுநாள் போவதா? விடுவதா? என்று யோசித்துக் கொண்டிருந்தேன். ஆனால் தம்பையாண்ணை மறுநாள் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய்விட்டார்கள். சில நாள்களின் பின் காலமாகியும்விட்டார்.

"அந்த வழக்கு இன்னமும் போடப்படவில்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பியாவின் ஜாம்பவான் யார்?

ஆர்.லயனல்

விளையாட்டு



## இங்கிலாந்து

யூரோ கிண்ணத்தைக் கொண்டுசெல்லும் தகுதி இங்கிலாந்துக்கு உள்ளதா என்றால் நிச்சயம் இல்லை என்பதுதான் பதில். இங்கிலாந்தின் கோல் காப்பாளர் பிக்பொட் இத்தாலியின் கோல் காப்பாளர் டொன்னறுமாவுடன் ஒப்பிடுகையில் நிச்சயம் பலவீனமானவர். அத்துடன் இங்கிலாந்து அணித் தலைவர் ஹரி கேன், ஸ்ரேர்லிங், சன்சோ இந்த மூவரும்தான் அந்த அணியின் நம்பிக்கை வீரர்களாக உள்ளனர். அத்துடன் இங்கிலாந்து இதுவரை குரோசியா, ஸ்கொட்லாந்து, செக்குடியசு, ஜேர்மனி, உக்ரைன், டென்மார்க் அணிகளுடன் மோதியுள்ளது. எந்த அணியுடனும் இங்கிலாந்து அணி தோல்வியடையவில்லையென்றாலும் ஜேர்மனியைத் தவிர வேறெந்த பலமான அணிகளையும் இங்கிலாந்து அணி இந்தத் தொடரில் சந்திக்கவில்லை என்பதுதான் உண்மை. ஆக, அட்டவணையின் அதிர்ஷ்டம் இம்முறை இங்கிலாந்துக்கு அடித்திருக்கின்றது.

## இத்தாலி

இத்தாலி அணி கடந்த மூன்று ஆண்டுகளாக மிகச் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தும் அணிகளில் ஒன்று. அந்த அணியின் கூட்டணி மிகப் பலமாகக் கட்டியமைக்கப்பட்டுள்ளது. எமர்சன், இமோபிலி, செல்சா, பாரெலா என்று அதிரடியாக ஆட்டத்தை வெளிப்படுத்தக்கூடிய பட்டாளத்தை இத்தாலி கொண்டுள்ளது. அத்துடன் இங்கிலாந்துக்கு நேர்மாறான பயணத்தைக் கொண்டது இத்தாலி. 'எவனோ பத்து பேர அடிச்சு டான் ஆகலடா. நான் அடிச்ச பத்து பேருமே டான்தான்' என்ற சினிமா வசனம் போல் இத்தாலி வீழ்த்திய அணிகள் அனைத்தும் பலமான அணிகள்தான். உச்சக்கட்டமாக காலிறுதியில் பிபா தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள பெல்ஜியத்தையும், அரையிறுதியில் முன்னாள் உலகச் சம்பியனான ஸ்பெய்னையும் வீழ்த்தித்தான் இறுதிக்குள் நிற்கின்றது இத்தாலி. எனவே இங்கிலாந்தை மிரட்டும் படியாகத்தான் இத்தாலியின் கூட்டணியும் அதன் பாதையும் அமைந்துள்ளது என்றால் அதில் இரண்டாம் கருத்தில்லை. இங்கிலாந்து அணி சர்வதேச கால்பந்தாட்ட அரங்கில் இறுதியாக 1966 ஆம் ஆண்டுதான் இறுதிக்குள் வந்திருந்தது. கிட்டத்தட்ட 55 ஆண்டுகளின் பின்னர் தற்போதுதான் பிறிதொரு சர்வதேச இறுதியாட்டத்தை இங்கிலாந்து சந்திக்கின்றது. எனவே இந்தப் பொன்னான வாய்ப்பை முடிந்த வரை பயன்படுத்த இங்கிலாந்து எத்தனிக்கும். அதே நேரம் இத்தாலி பல இன்னல்களைச் சந்தித்தே இந்த இறுதிக்குள் வந்துள்ளது. அந்த இன்னல்கள் கால்பந்தாட்ட அரங்குக்கு அப்பால்பட்ட இன்னல்கள். கொரோனாப் பெருந்தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடாக இத்தாலி உள்ளது. இன்று இத்தாலி கொரோனாவில் இருந்து விடுபட்டாலும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அங்கு அரங்கேறிய காட்சிகள் படு மோசமானவை. எனவே அந்தக் காயங்களுக்கு ஒரு மருந்தாக இந்த யூரோ கிண்ணத்தை தன் மக்களுக்கு வழங்க இத்தாலி எத்தனிக்கும். பார்க்கலாம் ஐரோப்பியாவின் மகுடம் போர்த்துக்கலில் இருந்து எவரின் கைகளுக்கு மாறப்போகின்றது என்பதை.




உலகச் சம்பியனான பிரான்ஸ்தான் ஐரோப்பாவின் சம்பியனாக முடிசூடும், இல்லை நடப்புச் சம்பியன் போர்த்துக்கல் கிண்ணம் தக்கவைக்கும், இல்லவேயில்லை பிபா தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள பெல்ஜியம்தான் கிண்ணத்தைக் கொண்டுசெல்லும் என்ற கணிப்புக்கள் எவையும் மெய்யாகவில்லை. இன்னும் சொல்லப்போனால் எவருமே எதிர்பாராவண்ணம் நடந்து முடிந்திருக்கின்றன யூரோ லீக் ஆட்டங்களும், நொக் அவுட் ஆட்டங்களும். இறுதிப்போட்டி நடைபெறவுள்ள நிலையில் தற்போது எம்முன் வெறும் இரு தெரிவுகளே உள்ளன. ஒன்று இங்கிலாந்து மற்றது இத்தாலி.

மயூ

# பாலூட்டி வளர்த்த கிளி...!

மழை விட்டும் தூவானம் விடாத கதையாக, தமிழக சட்ட மன்றத் தேர்தலில் பேசுபொருளாகியிருந்த நடிகர் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம், மீண்டும் இப்போது கவனத்தை ஈர்க்கத் தொடங்கியுள்ளது.

நடந்து முடிந்த தமிழக சட்ட மன்றத் தேர்தலில், நடிகர் கமலின் மக்கள் நீதி மய்யம் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுக்கொள்ளும் என்றே பலரும் கருதியிருந்தனர். ஆனால் தேர்தல் முடிவுகள் தலைகீழாக இருந்தன. மக்கள் நீதி மய்யமும், அதன் கூட்டணிக் கட்சிகளும் எந்த ஒரு ஆசனத்தையும் பெறாது படுதோல்வியடைந்தன.

தேர்தல் தோல்வியால் நொந்து போயிருந்த மக்கள் நீதி மய்யத்துக்கு, அதன்பின்னரும் சோதனைகள் தொடர்ந்தன. அந்தக் கட்சியின் முக்கியமான பதவிகளில் இருந்தவர்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கழன்று செல்ல ஆரம்பித்தனர். அவ்வாறு கழன்றவர்களில் முக்கியமானவர் மக்கள் நீதி மய்யத்தின் துணைத் தலைவராக இருந்த கோவையைச் சேர்ந்த மருத்துவர் மகேந்திரன். இவர் 2019ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவியிருந்தாலும், 1.4 லட்சத்துக்கும் அதிக வாக்குகளைப் பெற்று அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருந்தார். சட்ட மன்றத் தேர்தலில் சிங்காநல்லூர் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தபோதும், அந்தத் தொகுதியில் மூன்றாவது இடத்தைப் பிடித்திருந்தார். தேர்தலின் பின்னர் மக்கள் நீதி மய்யத்தில் இருந்து விலகிய மகேந்திரன், மக்கள் நீதி மய்யத்தில் ஜனநாயகம் இல்லை. கமல் சர்வாதிகாரப் போக்கில் நடந்கிறார். தேர்தலின் பின்னர் அவர் மாறுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் மாறவில்லை என்று கடுமையாகச் சாடியிருந்தார். பதிலுக்கு கமல்ஹாசனும், மகேந்திரனைத் துரோகி என்று கூறி அறிக்கை வெளியிட்டார். அதன்பின்னர் இந்த விவகாரம் ஓய்ந்திருந்தது.

இப்போது, திடீரென மகேந்திரன் தனது ஆதரவாளர்களுடன் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்திருக்கிறார். அதன் பின்னர் மீண்டும் இந்த விவகாரம் சபைக்கு வந்திருக்கின்றது. 78 நிர்வாகிகள், 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் பெயர் அடங்கிய பட்டியல் என ஆரவாரத்தோடு கடந்த வியாழக்கிழமை, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.கவில் இணைந்தார் மகேந்திரன். அவருடன் மக்கள் நீதி மய்யத்தின் முக்கியமான பொறுப்பில் இருந்த பத்மபிரியாவும் தி.மு.கவில் இணைந்திருக்கிறார். இவர் கடந்த சட்ட மன்றத் தேர்தலில் மதுரவாயல் தொகுதியில் மக்கள் நீதி மய்யம் சார்பாகப் போட்டியிட்டவர்.

கோவையைப் பொறுத்தவரையில் அது அ.தி.மு.கவின் கோட்டையாகவே இருக்கின்றது. கடந்த சட்ட மன்றத் தேர்தலிலும் அது எதிரொலித்தது. என்ன செய்வது என்று தலையை உடைத்துக் கொண்டிருந்த கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு இது இன்ப அதிர்ச்சிதான். கோவையில் செல்வாக்குமிக்க ஒருவர் கட்சியில் இணைவது, தி.மு.கவுக்கு பழம் நழுவி பாலில் விழுவதைப் போன்றதே. அதனால் மகேந்திரனை இரு கரம் நீட்டி இழுத்து அணைத்துக் கொண்டிருக்கிறது தி.மு.க.



நான் தி.மு.க. தொண்டனாக அரசியல் பயணத்தைத் தொடங்கியுள்ளேன். என்னுடன் 78 நிர்வாகிகளும், 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களும் தி.மு.கவில் இணைந்துள்ளோம். நான் யாரையும் வலுக்கட்டாயமாக தி.மு.கவுக்கு அழைத்துவரவில்லை. அவர்களாகவே விரும்பி வந்து இணைந்துள்ளனர்.

எங்கு தலைமை சரியாக உள்ளதோ அங்குதானே தொண்டர்கள் இணைவார்கள், நான் அரசியலுக்கு வந்தபோது செயற்பாடு அடிப்படையில் ஒரு தலைவனரத் தேர்வு செய்தேன். அவர் மீது நம்பிக்கை வைத்தேன். ஆனால், அந்த நம்பிக்கை நிறைவேறவில்லை. ஆனால், பத்தாண்டுகளாக ஆட்சியில் இல்லாத தி.மு.க. கடந்த 2 மாதங்களில சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. இதுவே நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த செயற்பாடு என்று தனது கட்சி தாவலுக்கு விளக்கம் கொடுத்திருக்கிறார் மகேந்திரன்.

இனிவரும் காலத்தில் கோவையில் மகேந்திரனுக்கு முக்கியமான பொறுப்பை தி.மு.க. வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனாலும் மகேந்திரனுக்கு இனியும் சோதனை இருக்கின்றது என்கின்றனர் தி.மு.கவின் ஒரு சாரார். கோவையில் ஏற்கனவே கட்சிப் பொறுப்பில் இருப்பவர்களுக்கு மகேந்திரனின் வருகை இனிக்காது. அதனால் அவர்கள் குடைச்சல் கொடுக்கக் கூடும் என்கின்றனர் அவர்கள். பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

கமலின் நிலைமை தான் இப்போது கவலைக்கிடமாக இருக்கின்றது. பாலூட்டி வளர்த்த கிளி... பழம் கொடுத்துப் பார்த்த கிளி என்று பாடிக் கொண்டிருக்க வேண்டிய நிலைமை. எவ்வாறு தனது கட்சியை மீண்டும் கட்டியெழுப்பப் போகின்றார் என்பது அவருக்கு மட்டும்தான் வெளிச்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org